கல்கி



KALKI ஜூன் 10, 1956 4 அணா


மலர் 15
இதழ் 45

துன்முகி வைகாசி 28

கல்கி
பொருளடக்கம்

ஜூன் 10, 1956

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



நிலப் பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்து பூதேவியை விநோபாஜி விடுதலை செய்கிறார்!



மலர் 15
இதழ் 45

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

துன்முகி௵
வைகாசி 28

காங்கிரஸ் கமிட்டி காட்டும் வழி

பாரத மக்களின் நல் வாழ்வுக்கு இன்றியமையாத சுபிட்ச இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின், நாட்டில், அமைதி நிலவ வேண்டும்; பலாத்காரங்களும் பாதகச் செயல்களும் அறவே ஒழிய வேண்டும். பல்வேறு குழப்பங்களும் நெருக்கடிகளும் தீர்ந்து, மக்களிடையே ஒத்துழைப்பும் ஒழுங்கும் ஏற்பட வேண்டும்.

இதற்குச் சென்ற வாரம் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வழி காட்டியிருக்கிறது.

காந்தி மகான் காட்டிய சாத்துவீக வழியைப் பின்பற்றிப் பாரத நாடு ஆயுத வல்லமை வாய்ந்த அன்னியர்களிடமிருந்து விடுதலை பெற்றது.

சரித்திரம் கண்டிராத இந்த அதிசயத்தைக் கண்டு உலக மக்கள் பிரமித்தனர்.

அதன் பலனாக, அணுகுண்டு சகாப்தத்தில் உழன்று வரும் உலகத்துக்குச் சாத்துவீக வழியை உபதேசிக்கும் உரிமையும் மதிப்பும் பாரத நாட்டுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

அப்படி யிருக்க, சமீப காலமாக இந்தியாவில் நிகழ்ந்து வரும் பலாத்காரச் சம்பவங்கள் பாரத நாட்டின் பெருமைக்கும் நற்பெயருக்கும் இழுக்கை உண்டாக்கி வருவது மிகவும் வருந்தத் தக்கது.

இலட்சியங்களுக் கெல்லாம் இலட்சியமான, பெறுதற்கரிய சுதந்திரத்தைப் பெறவே பலாத்காரத்தில் இறங்காத பாரத மக்கள், இன்று அற்ப விஷயங்களுக்காகப் பலாத்காரத்திலும் பாதகச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதை என்னவென்று சொல்லுவது?

சில தினங்களுக்கு முன் கரக்பூரிலிருந்து வந்த பயங்கரமான செய்தி எல்லோரையும் திடுக்கிடச் செய்து விட்டது.

அதைப் பற்றி நேருஜி பேசியபோது, அது மிருகத்தனமான கொலைபாதகச் செயல் என்று கூறி, அதற்குக் காரணமானவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

அப்படி யிருந்தும், பம்பாயில் நடந்த அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்துக்குச் சென்றிருந்த தலைவர்களின் மீது சிலர் கற்களை வீசி ஆர்ப்பாட்டம் செய்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம் எனலாம். தேசப் பிரதிநிதிகளும் காங்கிரஸ் தலைவர்களுமான பாரதத்தின் அருந் தவப் புதல்வர்கள் மீது கற்களை வீசியது, பாரத அன்னையின் மீது, முப்பத்தாறு கோடி இந்திய மக்களின் மீது கற்களை வீசியதற்கு ஒப்பாகும்.

காந்திஜியின் வழியைப் பின்பற்றி உலகமே பிரமிக்கத் தக்கவாறு சாத்துவீகச் சுதந்திரப் போரில் மகத்தான வெற்றி பெற்ற மக்கள், இன்று பாரத நாட்டின் அருமைத் தலைவர்கள் மீது கல்லெறியும் வெட்கக் கேடான நிலைக்கு, தனிப் பெருந் தலைவர்களை நாக்கில் நரம்பின்றித் தூற்றும் இழி நிலைக்கு வந்து விட்டார்களா?

எனவே, நாட்டில் பலாத்காரச் செயல்கள் அதிகமாகி வருவதைக் கண்டித்து அ. இ. கா. கமிட்டியில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் பாரத நாட்டின் நற்பெயரிலும், எதிர்கால க்ஷேமத்தில் அக்கறையும் கொண்ட சகலரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

** ** ** **

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் கைங்கரியத்தில் ஒத்துழைக்கும்படி பாரத மக்களைக் கேட்டுக்கொண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

பாரத நாட்டின் சுபிட்சம் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறுவதையே பொறுத்திருப்பதால், அத் தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அதைப் பற்றி விஸ்தாரமாகப் பேசிய நேருஜி அவ் விஷயமாகச் சர்க்கார் செய்ய வேண்டிய கடமைகளையும், மக்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் குறிப்பிட்டார்.

நாட்டில் அமைதி நிலவாவிடில் அத்திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவது அசாத்தியமாகி, மக்களுக்குக் கோடிக் கணக்கில் கஷ்டமும் ஏற்படும் என்று நேருஜி விடுத்த எச்சரிக்கை, பலாத்காரப் பிரியர்களின் செவிகளில் விழும் என்று கருதுகிறோம்.

* * *

பம்பாய் நகரின் எதிர் காலம் பற்றித் தற்போது மகாராஷ்டிரர்களிடையே மிகுந்த மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது அல்லவா!

பம்பாய் ஐந்து வருஷ காலம் வரையில் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருந்து வருமென்றும், அதன் பின் பம்பாய் மக்கள் ஜனநாயக முறையில் அந் நகரின் வருங்கால அந்தஸ்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்றும் நேருஜி பம்பாயில் அறிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் பலனாக, பம்பாய் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள குழப்பங்களும் கலகங்களும் தற்காலிகமாகக்கூடத் தணியுமென்று நம்புவதற்கில்லை.

ராஜ்யப் புனரமைப்பு சம்பந்தமாக அடிக்கடி தகராறுகள் எழுவதால், ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் அறிக்கையை இப்போது அமுலுக்குக் கொண்டு வராமல் பத்து வருஷங்களுக்கு ஊறப் போட்டுப் பிறகு பரிசீலனை செய்யலாம் என்று ராஜாஜி கூறிய சிறந்த யோசனையை அ. இ. கா. கமிட்டி அங்கீகரித்திருந்தால், நாளடைவில் நாட்டில் மீண்டும் அமைதி நிலவ உதவியாக இருந்திருக்கும்.

* * *

போர்ச்சுகீசிய ஆக்கிரமிப்பையும் காலனி ஆட்சி முறையையும் எதிர்த்துப் போராடும் கோவா மக்களுக்கு இந்தியர்களின் ஏகோபித்த ஆதரவை மீண்டும் வலியுறுத்தி அ. இ. கா. கமிட்டியில் நிறைவேறியுள்ள தீர்மானமும் முக்கியமானது.

அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் பாடுபட்டுவரும் கோவா மக்களிடம் அநுதாபம் காட்டும்படி நாகரிக நாடுகளை வேண்டிக் கொள்வதாகவும் அத் தீர்மானம் கூறுகிறது.

நாகரிக நாடுகளின் கோஷ்டியில் வல்லரசுகள் இடம் பெற வேண்டுமாயின், கோவாவில் மாத்திரமல்ல, உலகில் உள்ள மற்ற இடங்களிலும் காலனி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவைகளின் கடமை என்பதைப் பம்பாயில் கூடிய இந்தியத் தலைவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். எவ்வளவோ வீறாப்புடன் பேசிய பிரிட்டிஷாராலும் பிரஞ்சுக்காரர்களாலுமே கால வெள்ளத்தைத் தடுக்க முடியவில்லை. இறுதியில் அவர்கள் இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தைக் கைவிடுவதைத் தவிர வேறு வழியிராமற் போயிற்று.

எனவே, அதே வழியைப் போர்ச்சுகீசியர்களும் பின்பற்றும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்று நேருஜி கூறியிருப்பதை யாராவது மறுக்க முடியுமா!

ஏன் தடை செய்கிறார்?

தெற்கிலுள்ள பிரதேசங்கள் ஒன்று சேர்ந்து இந்தியாவுக்குள் அடங்கிய ஒரு ராஜ்யமாக இருக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கருத்து. இதைத்தான் அவர் சொல்லிவருகிறார். சமீபத்தில் தி. மு. க. செய்திருக்கும் தீர்மானம் தெற்கேயுள்ள பிரதேசங்கள் ஒன்று சேர்ந்து இந்தியாவிலிருந்து பிரிந்து போக வேண்டும், அல்லது பிரியும் உரிமையோடு தனி ராஜ்யமாக இருக்க வேண்டும் என்பது. இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசம் மிகத் தெளிவு. ஒன்று ஆகும் காரியம்; மற்றொன்று ஆகாத காரியம். ஆகவும் ஆகாது; ஆகவும் கூடாது.

இந்தியாவிலிருந்து பிரியும் பேச்சு வெறுக்கத் தக்க விஷயம். ஆனபோதிலும் தெற்கேயுள்ள பிரதேசங்கள் ஒன்று சேருவது என்ற யோசனையைத் தி. மு. கவும் ஒப்புக் கொண்டதைப் பற்றி ராஜாஜி மகிழ்ச்சியடைந்தார். அதைத்தான் மதுரையில் எடுத்துச் சொன்னார். திராவிடக் கழகத்தாரும் அதிலிருந்து பிரிந்த முன்னேற்றக் கழகத்தாரும் சொல்லி வரும் வாதங்களிலுள்ள முரண்பாடுகளை மக்கள் கவனிக்க வேண்டும். இந்தியாவிலிருந்து பிரிந்து போகும் துராலோசனையைத் தள்ளிவிட்டு, தெற்கிலுள்ள பிரதேசங்கள் ஒன்று சேருவது நன்மை தரும். இதற்குத் திராவிடக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் சம்மதிக்கும் பட்சத்தில் காமராஜர் ஏன் ஒப்புக் கொள்ளாமல் தடுக்க வேண்டும்! அமிருதசரஸ் காங்கிரஸில் தீர்மானித்த யோசனைக்கு ஏன் தடையாக நிற்கிறார்! திராவிடக் கழகத்தாரும் ஒன்று சேரலாம் என்று சொன்ன பிற்பாடு யாருடைய ஆட்சேபணையை வைத்துத் தாமதிக்கிறார்!

வீரரைப் போற்றுகிறோம்!

மதுரை இன்னும் தன் பழம் பெரும் பண்பை இழக்கவில்லை என்பது மீண்டும் நிரூபணமாகி விட்டது. சிறுமை கண்டு பொங்கும் நெஞ்சினர் இல்லாமற் போகவில்லை என்பதைக் கண்கூடாகக் கண்டு கொண்டோம்.

“நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே” என்று கூறிய நக்கீரர் வழியில் தோன்றியவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்பதை நிதர்சனமாக அறியக் கிடைத்தது! தமிழ்ச் சங்கப் பொன் விழாவின் நிர்வாகிகள், மேடைச் சூழ்நிலை யாவும் எப்படி யிருந்த போதிலும் சிறிதும் பொருட்படுத்தாமல் நக்கீரர் போல், “குற்றம் குற்றமே” என்று கர்ஜித்தார் திரு முத்துராமலிங்கத் தேவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாவிலே சமய குரவர்களையும் ராஜாஜியையும் தாக்கிப் பேசியது பெரும் குற்றம் என்று திரு முத்துராமலிங்கத் தேவர் பேசியிருக்கிறார். தமிழ் மக்களின் உள்ளுணர்ச்சியை எடுத்து வெளியிட்டார். தமிழ்ப் பண்பும் சீரிய சீலமும் கொண்ட கோடிக் கணக்கான தமிழ் மக்களின் சார்பில் திரு முத்துராமலிங்கத்துக்கு நன்றி செலுத்துகிறோம்.

நாட்டில் வளர்ந்து வரும் துவேஷப் பிரசாரத்தைக் குறிப்பிட்டு ராஜாஜி "இது நாட்டுக்கு நல்லதல்ல" என்றார். "நான் இன்னும் சில நாட்களே இருப்பேன். என் மனத்தில் உண்மை என்று கண்டதைச் சொல்லிவிட வேண்டும் என்று சொல்லுகிறேன். கேட்டால் கேளுங்கள், இன்று கேட்காவிட்டால் பின்னால் உணர்வீர்கள்" என்றார். அம் மொழிகளை அன்று கேட்டவர்கள் நெஞ்சம் கரைந்தது. கண்கள் பனித்து விட்டன.

பொன் விழா மேடையில் பேச வந்த பேச்சாளர்கள் சிலரின் மனம் கரைந்ததாகத் தெரியவில்லை. தமிழின் பெயரில் அன்புக்குப் பதில் துவேஷத்தையே வளர்ப்பதைக் கோருகிறார்கள். இதற்கு வருந்துகிறோம்.

தமிழ்ப் பெரு மக்கள் ராஜாஜியை நன்கு உணர்ந்தவர்கள். ராஜாஜி எத்தனையோ உண்மைகளைச் சொல்லி நிரூபித்திருக்கிறார். இவ்விஷயத்திலும் ராஜாஜியின் பொன்மொழிகளைத் தமிழ் நன் மக்கள் கடைப்பிடிப்பார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா நடந்த காலத்திலேயே, ஒரு காலத்தில் பல தமிழ்ப் புலவர்கள் கடவுளாகவே போற்றி வந்த புத்தர் பெருமானின் நினைவு தமிழ் நாட்டிலும் உலகம் முழுதிலும் பெரு விழாவாகக் கொண்டாடப் பட்டது. அன்பு நெறியே உண்மை நெறி யென்று போதித்தவர் புத்தர். இதை விட்டு விட்டுக் கடவுளை மறுத்தவர் புத்தர் என்று சொல்லிக் கொண்டு துவேஷப் பிரசாரம் செய்வதே தொழிலாகச் சிலர் வாழ்ந்து வருகிறார்கள். இது தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஒரு பெரிய களங்கமாக இருந்து வருகிறது. இதை ஒழிப்பது மக்களின் கடமை. தமிழ் நாட்டில் தமிழைத் தாய் பாஷையாகக் கொண்டு வாழ்ந்து வரும் மக்களில் ஒரு பகுதியினரை ஆரியர் என்றும் ஒரு பகுதியினரைத் திராவிடர்கள் என்றும், மற்றொரு பகுதியினரை ஆதித் திராவிடர்கள் என்றும் பிரித்துக் கட்சிகளும் துவேஷங்களும் வளர்ப்பது அறியாமையிலும் அறியாமை. இந்தியா முழுவதிலுமே, ஆரியர்களும் திராவிடர்களும் சித்தியர்களும், மங்கோலியர்களும் என்று ஆராய்ச்சிக்காரர்கள் பேசும் பல பகுதியினர்களும் கலந்து போயிருக்கிறார்கள். பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கலந்து போன இரத்தத்தைத் தற்காலத்துப் பொறாமையின் காரணத்தினால் பிரிக்கப் பார்ப்பது நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடை செய்வதாகும்.

எந்த ஆராய்ச்சிக்காரரும் தென்னாட்டில் எந்தக் குலத்தை எடுத்துக்கொண்டும், "இவன் ஆரியன்" "இவன் திராவிடன்" என்று சொல்லி நிரூபிக்க முடியாது. இதைப் பற்றிச் சந்தேக முள்ளவர்கள் சாமி சிதம்பரனார் எழுதிச் சமீபத்தில் வெளியிட்டுள்ள புத்தகத்தைப் படித்தால் ஓரளவு தெளிவடைவார்கள்.

என்ன சேதி?

பித்தலாட்டப் படலம்

பாகிஸ்தான் அரசியல்வாதிகள் வழக்கம் போல் புரட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். சித்ரால் என்னும் பகுதி பாகிஸ்தானைச் சேர்ந்தது என்று சாதிக்கக் கிளம்பி யிருக்கிறார்கள். அதன் சிற்றரசர் பாகிஸ்தானுடன் சேர்ந்ததாக எழுதிக் கொடுத்து விட்டாராம். ஆகையால் சித்ரால் பாகிஸ்தானைச் சேர்ந்ததாம்.

1878 லிருந்து சித்ரால் அதிபர் காஷ்மீர் அதிபருக்குக் கப்பம் கட்டி வந்திருக்கிறார் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன எனக் காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் சவால் விடுகிறார். சித்ரால் சிற்றரசருக்குத் தனது சிற்றூரை இணங்க வைப்பதற்கு அதிகாரம் உண்டென்றால், பல நூற்றாண்டுகளாகச் சித்ராலும் சேர்த்து ஆண்ட காஷ்மீர் மன்னருக்கு அந்நாட்டை இந்தியாவுடன் சேர்க்க அதிகாரமில்லையா என்றுதான் அறிவாளிகள் கேட்பார்கள்.

இந்தப் பகுதியான காஷ்மீரில் மக்கள் சுபிட்சமாக வாழ்வதையும், உலக யாத்திரிகர்கள் அங்கு குழுமி வருவதையும் பார்த்துப் பாகிஸ்தான் பகுதியிலுள்ள காஷ்மீர் மக்கள் கிளர்ச்சி செய்வதைத் தடுப்பதற்காகவே கண்ணில் மண் தூவும் இந்தப் படலத்தைப் பாகிஸ்தான் அரசியல்வாதிகள் தொடங்கி யிருக்கிறார்கள்.

மந்திரியின் ராஜினாமா

ருஷ்யாவின் அயல் நாட்டு விவகார மந்திரி மாலடோவ் தமது பதவியை ராஜினாமா செய்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. இச் செய்தி உலகம் முழுவதும் ஒரு பெரும் பரபரப்பை யுண்டாக்கி யிருக்கிறது. இதிலிருந்தே அவர் ருஷ்ய சர்க்காரில் எவ்வளவு முக்கிய அங்கம் வகித்து வந்தார் என்பதை உணரலாம். ஸ்டாலினுக்கு வலது கரமாக இருந்து அந்நிய நாடுகளில் ருஷ்யாவின் தனிப் போக்கை நிலைநாட்டி வந்தார். அப்படிப்பட்டவர் இன்று ராஜினாமா செய்யும்படி வற்புறுத்தப்பட்டு வெளியேறி யிருக்கிறார். இதில் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை!

ஸ்டாலினுக்குப் பின் ருஷ்யாவின் போக்கு பெரிதும் மாறுதல் அடைந்திருக்கிறது. பிற நாடுகளுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இந்தத் திட்டத்தை ஒட்டித்தான் மாலடோவின் ராஜினாமா வந்திருக்கிறது. ஒரு பெரிய ராஜ்யத்தின் அரசியல் நிர்வாகம் மாறிப் புது நிர்வாகம் வரும்போது ஏற்படக்கூடிய இயல்பான நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் இது. மாலடோவ் மந்திரி பதவியை ராஜினாமா செய்தாலும் மந்திரி சபையில் உதவிப் பிரதமராக இருப்பார் என்று செய்தி நிலவி வருகிறது. ருஷ்யாவின் புதிய போக்கு, உலகம் வரவேற்கக் கூடிய போக்குத்தான் என்பதையே இது காட்டுகிறது.

பட்டினிப் பயமுறுத்தலுக்குப் பணிந்தனர்!

இலங்கை சர்க்கார் உருவாக்கியுள்ள தனிச் சிங்கள மசோதாவில் மேற்படி சர்க்கார் கட்சியினர் சமீபத்தில் ஒரு திருத்தம் செய்துள்ளனர். அது அந்த நாட்டில் வாழும் தமிழர்களின் நிலைமையை மேலும் மோசமாகும்படி செய்திருக்கிறது. இலங்கையில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்

அட்டைப்பட விளக்கம்

காற்றடிக்குது!

அவள் ஆற்றில் தண்ணீர் மொண்டு வர இடையில் குடத்துடன் புறப்பட்டாள். சோலை வழியே ஒற்றையடிப் பாதையில் வந்து கொண்டிருந்தாள். அப்போது வானத்தில் எதிரே கருமேகங்கள் திரண்டன. மின்னல்கள் 'பளீர் பளீர்' என்று வெட்டின! அவள் மருண்டு விட்டாள். அந்த மருட்சியில்தான் எவ்வளவு அழகு!

அப்படி அவள் மருண்டு குனிந்தபோது. சில்லென்று காற்றடித்தது. அவள் மேலாடையைத் தூக்கிச் சென்றுவிடப் பார்த்தது. இருப்பினும் அவள் உள்ளத்தில் சந்தோஷம்தான். உவகைதான். ஏனெனில் இவையெல்லாம் மிக நல்ல குறிகள். அவளே சொல்லுகிறாள்:

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்று தேகுறி — மலை
யாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே!
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக் குதே!


இவ்வாறு உற்சாகத்தோடு பாடுகிறாள்.

ஓவியர் கனுதேஸாயின் இந்தக் கலை ஓவியத்தைப் பார்த்ததும் யாருக்கும் மேற்கண்ட பாடல்தான் நினைவு வரும். இந்த அடிகளில் பொங்கி நிற்கும் பாவத்தை எவ்வளவு அற்புதமாக வண்ண ஓவியத்தில் தந்து விட்டார் என்று தோன்றும்! இதைப் பார்க்கும் போது கலை, தேசம், காலம் எல்லாம் கடந்து நிற்கும் ஓர் அற்புத விஷயம் என்று புலனாகிறது அல்லவா!

மதுரையில் ராஜாஜி

கடந்த 30-5-56 புதன்கிழமை மாலை மதுரை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் காலஞ்சென்ற மதுரை தேசபக்தர் ஜார்ஜ் ஜோசப் அவர்களின் திரு உருவப் படத் திறப்பு விழா மதுரை திலகர் சதுக்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நமது தலைவர் ராஜாஜி அவர்கள் ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப்பின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தார். ஸ்ரீ பி. என். கே. சுப்பராம் தலைமை வகித்தார். திலகர் சதுக்கத்துக்கு உள்ளேயும், சதுக்கத்துக்கு வெளியில் வீதிகளிலும் ஜன சமுத்திரம் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தது. சமீப காலத்தில் இத்தகைய கூட்டம் மதுரையில் (மகாத்மா விஜயத்துக்குப் பிறகு) எப்போதும் கூடியதில்லை என்று மதுரைவாசிகள் சொல்லிக்கொண்டனர்.

மதுரை நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ஸ்ரீ எஸ். பெருமாளும், எண்ணற்ற சங்கங்களும் ராஜாஜி அவர்களுக்கு மலர் மாலையும் கதர் மாலையும் சூட்டிப் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். பின்னர் பேசிய ராஜாஜி ஜார்ஜ் ஜோஸப்பிற்குப் பிறகு மதுரை வாசிகளின் அன்பைக் கவர்ந்த ஒப்பற்ற தேசபக்தர் ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்களுக்குத் தகுந்த ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கடைசியாகத் தென்னாடோ அல்லது தட்சிணப் பிரதேசமோ உருவாக வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திச் சாங்கோபாங்கமாக விளக்கினார். ஸ்ரீ எஸ். பெருமாள் நன்றி கூறக் கூட்டம் கோலாகலமாக முடிவடைந்தது. மேற்படி கூட்டத்தின் காட்சிகளைப் படத்தில் காணலாம்.



1. ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப் படத்தை ராஜாஜி திறந்து வைக்கிறார். அருகில் நிற்பவர் ஸ்ரீ பி. என். கே. சுப்பராம். 2. மாபெரும் கூட்டத்தில் ராஜாஜி பேசுகிறார். 3. காங்கிரஸ் கமிட்டிகளின் சார்பில் ஸ்ரீ பெருமாள் ராஜாஜியை வரவேற்றுப் பேசுகிறார். பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த பெண்மணிகள். 4. இரவு டி. வி. எஸ். காரியாலய மாடியில் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் ஊழியர்களின் பல கேள்விகளுக்கு ராஜாஜி பதில் கூறுகிறார்.

மே மாதச் சிறுகதைப் போட்டி

நூறு ரூபாய் பரிசு பெற்ற

இரு புதல்வர்கள்

என்னும் கதை

அடுத்த இதழில் வெளியாகிறது

பரிசு பெற்றவர் விலாசம்:

எஸ். ஜானகி
வீரப்பன் சத்திரம்
ஈரோடு வழி

களிலே எந்த பாஷையில் நடவடிக்கைகளை நடத்துவது என்பதை மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் சேர்ந்து முடிவு செய்து கொள்ளலாம் என்று தனிச் சிங்கள மசோதாவில் ஒரு விதி இருந்தது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அவ்வுரிமையை அளித்தால், தோட்டப் பிரதேசங்கள் தமிழ் மயமாகி விடுமென்றும், பிறகு அவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்றும், அப்படிச் சேர்ந்து விடுவார்களானால் சிங்களவர்களுக்கு ஆபத்து ஏற்படுமென்றும் கூறி ஸ்ரீ ஜயசூரியா என்ற சிங்களப் பேராசிரியர் உண்ணாவிரதம் இருந்தார்.

வருஷக் கணக்காக எவ்வளவோ மன்றாடியும் வாதாடியும் வரும் இலங்கை இந்தியர்களுக்கு நீதி வழங்க விரும்பாத இலங்கை சர்க்கார், உண்ணாவிரதத்தின் உண்மைத் தத்துவத்தை அறியாத ஜயசூரியாவின் பட்டினிப் பயமுறுத்தலைக் கண்டு மிரண்டு விட்டார்கள். அந்த நபரைத் திருப்தி செய்வதற்காக உடனே தனிச் சிங்கள மசோதாவில் ஒரு திருத்தத்தைச் சேர்த்து விட்டார்கள். தமிழர் வாழும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை முதலிய இடங்களில் 1960-ம் ஆண்டுக்குப் பின் தமிழர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் கூட மந்திரியின் அனுமதியின்றிச் சொந்த பாஷையான தமிழில் நடவடிக்கைகளை நடத்த முடியாது. சிங்களம் படிக்காதவர்கள் எவ்விதமான அரசாங்க உத்தியோகங்களையும் பெற முடியாது. இதுதான் அத்திருத்தத்தின் நோக்கமாகும். பண்டார நாயகா சர்க்காரில் தங்களுக்கு நன்மை ஏற்படும் என்று நம்பி வரும் தமிழர்கள் விஷயத்தில் இலங்கை சர்க்கார் இழைத்துள்ள இந்த அநீதி மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

கடல் கண்ட கனவு

சோமு

ஒன்பதாம் அத்தியாயம்

சுரங்கப் பாதை


சரித்திரக் கல்வெட்டுக்களில் "பல்லவேந்திர புரி" என்ற கம்பீரமான பெயரில் அழைக்கப் படும் காஞ்சிமா நகரத்தின் வீதியிலே, நிசப்தம் குடிகொண்டிருந்தது. அப்பொழுது இரவு மூன்று ஜாமத்துக்கு மேல் இருக்கும். அமாவாசை இருள் ஒரே சோகத் திட்டுக்க ளாகக் கப்பிப் படர்ந்திருந்தது. என்றாலும் வீதியின் நந்தா விளக்குகள் அங்கங்கே, துன்பத்துக்கு மத்தியில் சுடர் விடும் நல்லெண்ணங்களைப் போலச் சுடர் வீசிக் கொண்டிருந்தன. காற்று கோபாவேசமாக வீசியடித்த சமயத்தி லெல்லாம், அந்த நந்தா விளக்குகளின் சுடர்கள் கொஞ்சம் காற்றோடு சேர்ந்து ஆடிக்கொண்டே, தங்கள் ஜோதியை நிலை நாட்டிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சியே காஞ்சிமா நகரின் அன்றைய அரசியல் நிலையை எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது.

கிழக்கு ராஜ வீதியிலே உயரமாக நின்று எரிந்து கொண்டிருக்கும் ஒரு நந்தா விளக்குக்கு அருகில், நமக்குத் தெரிந்த ஓர் உருவம் காணப்படுகிறது. நந்தா விளக்கை நெருங்கியதும் அந்த



உருவம் தனது முகத்தை நன்ருக மூடி மறைத்துக்கொண்டு விட்டதால், முக அடையாளம் தெரிந்தும்தெரியாமலும் இருந்தபோதிலும், உடல் அமைப்பையும் நடையையும் பார்த்தால் மாமல்லபுரத்திலே இதற்கு முன்பு நாம் பார்த்த ஒரு மனிதன்தான் அது என்று ஓரளவு யூகிக்க முடிகிறது.

நந்தா விளக்குக்கு அருகில் வந்து ஏதோ கையினுல் ஜாடை காட்டிவிட்டு, மறுபடியும் அந்த உருவம் நீளமான ராஜ வீதியிலே நடக்கிறது. இப்பொழுது அதைப் பின் தொடர்ந்து இன்னெரு உருவம் செல்கிறது. என்ன ஆச்சரியம்! அதுவும் நமக்குத் தெரிந்த உருவந்தான்! அன்று சித்திராங்கன் மாமல்லபுரத்து விடுதியிலே உட்கார்ந்து பலமாகச் சிந்தனை செய்துகொண்டிருந்தபோது, வாசலிலேயே நின்று ஆருடம் சொன்னரே அந்தச்



சமணத் துறவிதான் அவர்! இப்பொழுது கையிலே மயிற் பீலியையும் சுவடிக் கட்டுகளையும் காணேம்! வேறு ஏதோ ஒரு சிறு மூட்டை இருக்கிறது.

இராஜ வீதியின் எல்லையை அடைந்ததும் இரண்டு உருவங்களும் நமது பார்வையிலிருந்து எங்கோ மறைந்து விடுகின்றன. மீண்டும் அந்த உருவங்கள் மறுபடி தோன்றுவது, காஞ்சிமா நகரின் மாபெரும் கோட்டையையடுத்த அகழிக்கு வெளியே, பெருஞ் சாலையின் திருப்பத்திலேதான்!

காஞ்சிமா நகரின் கோட்டைக்கு வெளியே, அகழியைச் சுற்றிக் கொண்டு சென்ற சாலையின் பிரிவிலே இப்பொழுது அந்த இரண்டு உருவங்களும் ஒன்று கூடுகின்றன. ஒன்று கூடி, இரண்டு உருவங்களும் பூதாகாரமான மருத மரங்களும் அரச மரங்களும் வரிசை வரிசையாக நின்ற அந்தச் சாலையோடு நடக்கின்றன.

காஞ்சிமா நகரத்திலிருந்து பிரிந்து செல்லும் வடக்குச் சாலையில், இருள் திட்டுத் திட்டாக இறங்கி அமர்ந்துகொண்டிருக்கிறது! பிசாசுகளைப் போலக் கிளைக் கைகளை ஆட்டி ஆட்டிக் காற்றிலே சலசலக்கும்பெரிய பெரிய மரங்களின் மேனியிலும் தலையிலும், இருளின் திட்டு அப்படி அப்படியே உட்கார்ந்துகொண்டு, பயங்கரமாகக் காட்சி தருகிறது. அந்தப் பயங்கரமான சாலையிலே இரண்டு உருவங்களும் அரை நாழிகை தூரம் நடந்து சென்றதும், இதோ ஒரு பெரிய விசாலமான ஆலமரம் தெரிகிறது. இராவணனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் என்று சொல்வது போல, விழுதும் கவருமாக நிற்கிற அந்த ஆலமரத்தினடியிலே, இரண்டு கறுப்புக் குதிரைகள் கட்டப்பட்டு நிற்கின்றன. அந்தக் கருங் குதிரைகளை நோக்கிச் செல்லும் இரண்டு மனித உருவங்களும், மௌனமாக நடந்து போய்க் குதிரைகளை வேர்க் கட்டிலிருந்து அவிழ்த்துக்கொண்டு, ஒரு மின் வெட்டிலே தாவி ஏறிக் காற்ருகப் பறந்து செல்கின்றன.

இந்த மனித உருவங்கள் ஆல மரத்தினடியிலிருந்து மறைந்த சற்று நேரத்திற்கெல்லாம், எங்கிருந்தோ புதிதாக இன்னெரு மனித உருவம் தோன்றுகிறது! ஆஜானுபாகு என்றும் வீர தீரப் பிரதாபன் என்றும் சொல்கிருர்களே, அப்படியிருக்கிறது அந்த உருவத்தின் தோற்றம். இதுவரை அந்த மனித உருவம் ஏதோ ஒரு மரத்தில் ஏறிப் பதுங்கியிருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனென்ருல் அந்த மனிதன் அங்கு வந்ததற்கு அடையாளமாகக் குதிரையோ அல்லது ரதமோ அல்லது வண்டியோ ஏதும் காணேம். கடந்து வந்த களைப்புக் கூட இல்லை அந்த மனிதனுடைய தோற்றத்திலே!

மறைந்து சென்ற இரண்டு உருவங்களும் எந்தத் திசையிலே போயினவோ அந்தத் திசையையே பார்த்துக்கொண்டு, இந்த மூன்ருவது மனித உருவம் திடீரென்று வாயினுல் ஒரு அடையாள ஓசையை ஊதிக் கூவிற்று. அவ்வளவுதான்

அந்த ஓசை அடங்கி நின்ற சில விநாடிகளுக்குள், எங்கோ வானத்திலிருந்து குதித்து வந்தாற் போல ஐந்து குதிரைகளும் நான்கு வீரர்களும் 'மட மட' என்று அந்த ஆலமரத்தடியில் வந்து நிற்கக் காண்கிறோம். மறுகணம் ஆஜானுபாகுவான அவ்வீரர் ஐந்து குதிரைகளில் நடுநாயகமாக நின்ற வெள்ளைக் குதிரைக்கு ஒரு சொடக்குக் கொடுத்துக் கொண்டே தாவி ஏறி உட்கார்ந்தார். 'மட மட' என்று குளம்புகளின் ஓசை கேட்டது. ஐந்து குதிரைகளும் ஐந்து மின்னல்களைப் போல் சரேல் என்று பாய்ந்து, அந்தப் பெருஞ் சாலையிலே சாடிப் பறந்தன!

ஆலமரத்தினடியிலே மீண்டும் நிசப்தம் குடிகொண்டது. எங்கோ ஒரு கிளையிலிருந்து கூப்பிடும் ஆந்தையின் குரல் சோகக் குறியை உதறியது. மறு விநாடி அதன் குரலும் அடைத்துக் கொண்டது. மறுபடியும் அந்தப் பயங்கரமான மரண அமைதியிலே சாலை நித்திரை செய்தது!

அதே இரவு கொடும்பாளூரிலும் ஒரு பயங்கரமான சம்பவம் நடந்து கொண்டிருந்தது!


குங்கும மாளிகையிலே இருந்த சித்திர சாலைக்குள்ளே நுழைந்தான் அல்லவா பூபதி? பேரியாழ் கையெட்டும் தொலைக்கு வந்து விட்டது என்று அவன் பரவசப்பட்ட போது, சித்தரின் பிரம்பைக் கண்டு ஒரு விநாடி மூச்சடைத்துப் போய் நின்றான் அல்லவா? அப்படி நின்றவன் மேலே அந்த அறைக்குள்ளே நடந்து போகலாம் என்று முயன்ற தருணத்தில், "ஐயா! ஐயா!" என்று வெகு அவசரமாகப் பணியாளன் அறைக்கு வெளியே கூப்பிடுவது கேட்டுப் பதறிப் போய்ப் படிமவிலாசத்துக்கு வந்தான்.

"ஐயா! நீங்கள் உடனே குளிக்கும் இடத்துக்கு வந்து, குளிப்பை முடித்து விட்டு வாருங்கள். சற்று நேரத்தில் இங்கே யாரோ முக்கியமான மனிதர்கள் உங்களைப் பார்க்க வருகிறார்களாம்!" என்றான்.

"இதேதடா வம்பாக இருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டே, சித்திராங்க பூபதி அவசரமாக வந்து குளிப்பதற்காகச் சென்றான்.

அவன் திரும்பி வந்து அறையில் நுழைவதற்குள்ளே அறுசுவை உணவு சித்தமாக இருந்தது. சூழ்நிலை இருந்த இருப்பைப் பார்த்தால், அந்த உணவைச் சாப்பிடுவதற்குக் கூட அவனுக்குத் தயக்கமாக இருந்தது. புலவரையாவையும் அவர் சொன்ன பதிகத்தையும் மனத்தில் இருத்திக் கொண்டு வேகமாகச் சாப்பிட்டான். சாப்பிட்டு விட்டுப் பணியாளர்கள் அனைவரையும் கீழே அனுப்பினான். முன்போல அறைக்குக் காவலாகக் கூட ஒருவனையும் நிறுத்திக் கொள்ளவில்லை.

"யாராவது என்னைப் பார்க்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொன்னால் மட்டும் கூப்பிடு. மற்றப்படி தொல்லை கொடுக்காதே. பிரயாண ஆலுப்பினால் சோர்ந்து போய்ப் படுத்திருப்பதாகச் சொல்லிவிடு!" என்று அனுப்பி



விட்டு, மறுபடியும் படிம விலாசத்துக்குள்ளே இருந்த வாசல் வழியாகச் சித்திரசாலைக்குள்ளே நுழைந்தான் பூபதி.

மீண்டும் சித்திராங்க பூபதி சித்திர சாலைக்குள்ளே பேராச்சரியத்தில் விழுந்து மூச்சடைத்து நின்றான். சற்று முன்பு அவனுக்கு முன்னால் காட்சி தந்த அந்த வீணையை இப்பொழுது அங்கே காணோம்! தெற்கு மூலையில் சுவரிலே சாத்தி வைக்கப்பட்டிருந்த சித்தரின் பிரம்பும் இப்பொழுது அங்கு இல்லை!


"தெய்வமே! இது என்ன என் தலை சுற்றுகிறதே!" என்று வாய் விட்டுச் சொல்லி முடிப்பதற்குள், யாரோ நாலைந்து முரடர்கள் எங்கோ ஒரு வாசல் வழியாகச் சித்திர சாலைக்குள் பாய்ந்து வந்து, அவனைப் பற்றினார்கள். அவனுடைய கண்கள் இரண்டையும் ஒரு துணியினால் வரிந்து கட்டினார்கள். அடுத்த விநாடி அவனுடைய இரண்டு

கால்களும் கட்டப்பட்டன. மறுகணம் அவனுடைய இரண்டு கைகளும்!

சித்திராங்க பூபதி பதறிப் போய்க் கூக்குரலிட முயன்றான். அப்பொழுது ஒரு முரட்டு இரும்புக் கை அவனுடைய வாயைப் பொத்திற்று.

"தூக்குங்கள்!" என்று அதிகார தோரணையிலே ஒரு குரல் கேட்டது. இந்தக் குரல் இதற்குமுன்பு எங்கோ கேட்ட குரல் போல இருந்தது பூபதிக்கு. யாராக இருக்கக் கூடும் என்று யோசிப்பதற்குள், சித்திராங்க பூபதி செந்தூக்காகத் தூக்கப்பட்டான். கையும் காலும் அசைக்க முடியாதபடி கட்டப்பட்டிருந்த சித்திராங்கன், அந்த முரடர்களால் சித்திரசாலையின் பின் வாசல் வழியாக வெளியே தூக்கிச் செல்லப்பட்டான். அறையின் கதவுகள் மீண்டும் சாத்திக் கொண்டன.

எதிர்பாராது நடந்த இந்த விபரீத நிகழ்ச்சியினால் அதிர்ச்சி ஏற்பட்டு, சித்திராங்க பூபதிக்கு மயக்கம் உண்டாகி விட்டது. அவன் மயக்கம் போட்டுக் கீழே விழவில்லை. ஏனென்றால் அவனை நாலைந்து பேராகச் சேர்ந்து தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். எனவே, மௌனமாக அவர்களின் பிடியிலேயே கிறங்கி நினைவு இழந்து, வெறும் மரக்கட்டையைப் போலானான் சித்திராங்கன்.



மரக்கட்டையைப் போலவே அந்த மனிதர்களும் முரட்டுத்தனமாக அவனைக் கையாண்டார்கள். இடையிடையே அவனுக்கு நினைவு வந்து விட்டதா என்று பார்ப்பதற்காக அவனுடைய கையைக் கிள்ளினார்கள். சப்தம் இல்லை. மறுபடியும் அலட்சியமாக அவனைத் தூக்கிக் கொண்டே மேலே நடந்தார்கள் அந்த முரடர்கள்.

எத்தனை நாழிகை நேரம், அல்லது எத்தனை காத தூரம் இப்படித் தூக்கிச் சென்றார்களோ தெரியாது. சித்திராங்க பூபதிக்கு மீண்டும் நினைவு வந்த போது ஏதோ ஒரு வனப் பிரதேசத்திலே இருப்பது போலத் தெரிந்தது. கல்லால் ஆகிய ஒரு கட்டிலில் அவன் படுத்திருந்தான். சுற்றி வர மரமும் செடியும் கொடியும் புதருமாக அடர்ந்திருந்தன.

"இன்னும் மயக்கத்திலேதான் இருக்கிறோமா! இது என்ன! கனவு காண்கிறோமா? கொடும்பாளூரில் குங்கும மாளிகையிலே அல்லவா நாம் இருந்தோம். அப்பொழுது யாரோ வந்து நம்மைத் தாக்கினார்களே! அதன் பிறகு ஏற்பட்ட மயக்கமா இது! மயக்கம் என்றால், இது மயக்கமா என்கிற கேள்வியே மனத்துக்கு உண்டாகாதே! அப்படியானால், எங்கே இருக்கிறோம் நாம்? ஒரே வனாந்தரமாக இருக்கிறதே!"

இவ்வாறு எண்ணிக் கையையும் காலையும் அசைத்துப் பார்த்தான். அசைக்க முடிந்தது. கட்டுக்களை அவிழ்த்து விட்டார்கள் போலிருக்கிறது! சித்திராங்கன் எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். தூரத்தில் அந்த அடர்த்தியான மரங்களுக்கு மத்தியிலே ஒரு சிறிய கோவில் தெரிந்தது. எங்கோ ஒரு சிற்றோடை மலைப் பாதைக்கு மேலே, தத்தித் தத்தி ஓடிக் கொண்டிருந்த ஓசை கேட்டது. தூரத்தில் சிறு சிறு முயல் குட்டிகள் ஏதோ ஓசையைக் கேட்டுப் பயந்தும் துள்ளியும் குதித்தோடிக் கொண்டிருந்தன. மலைப்பாங்கான பிரதேசம் என்றும், அது ஒரு வனதேவதையின் கோவில் என்றும் பூபதி தெரிந்து கொண்டான். மெதுவாக எழுந்து அந்தக் கோவிலை நோக்கி நடக்கலாம்



என்று முயற்சிப்பதற்குள், பின்னுலிருந்து யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது! திரும்பிப் பார்த்தான். மாமல்லபுரத்து விடுதித் தலைவன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன தம்பி! விருந்து மரியாதை மிகவும் பலமாகப் போய் விட்டது போலிருக்கிறது. பாவம்! அந்த முட்டாள்கள் இப்படிச் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்றான் அவன், சிரித்துக்கொண்டே! அவனுடைய முகக் குறிப்பைப் பார்த்தால், அந்தச் சிரிப்பில் சித்திராங்கனும் சேர்ந்துகொண்டு அவனும் சிரிக்க வேண்டும் என்று விடுதித் தலைவன் எதிர்பார்ப்பது போலத் தோன்றியது!

சித்திராங்கனுக்குச் சிரிப்பு வரவில்லை. திரு திரு என்று விழித்தான். அந்த விழிப்பில் ஒரு ராஜகுமாரனுடைய சினமும் கலந்திருந்தது!



"என்ன வலம்புரித் தீவின் இளவரசே! என்பேரில் கோபம் வருகிறது போலும்! தயை செய்து சினம் கொள்ளற்க!" என்றான் விடுதித் தலைவன். இப்பொழுதும் சிரித்துக் கொண்டேதான் பேசினான் அவன்!

"தம்பீ! உண்மையாகவே சொல்கிறேன். என்னை மன்னித்து விடு. ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது!" என்றான் அவன்.

"சிறிய தவறா? பெரிய தவறு என்றால் உயிர் போகவேண்டும்போல் இருக்கிறது. அப்படித்தானா உங்கள் நாட்டில்?" என்று கேட்டான் சித்திராங்கன். அவனுடைய குரலில் எத்தனையோ பல நூற்றாண்டுகளாக வழி வழியாக வந்த ராஜப் பெருமிதம் ஒலித்தது.

"அப்படியில்லை, தம்பீ! ஒரு சிறு ஆள் மாறாட்டத்தினால் இந்தத் தொல்லை நேர்ந்து விட்டது. உனக்கு உரிய இடம் படிம விலாசம் என்ற அறைதானே? அதை விட்டுவிட்டு நீ ஏன் சித்திரசாலைக்குள்ளே நுழைந்தாய்? அதற்குப் பதில் சொல்!" என்று கேட்டான் விடுதித் தலைவன், கண்களைச் சிமிட்டிக் கொண்டே. இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு விநாடி பூபதி திகைத்தான். அதற்குள் விடுதித் தலைவனே மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"சித்திரசாலையில் ஒரு மனிதர் இருக்கிறார். அவரைக் கண்ணையும் கைகால்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு போங்கள் என்று உத்தரவு. நீ படிம விலாசத்தில் இருப்பவன். சித்திர சாலைக்குள்ளே போவாய் என்று யார் எதிர்பார்த்தார்கள்? அதைச் சொல்லு!" என்றான் அந்த அசகாய சூரன்.

"சித்திர சாலையிலேதான் வேறு எந்த மனிதரும் இல்லையே. அங்கே உள்ள மனிதரை என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டான் பூபதி, ஆத்திரத்தோடு.

"தம்பி! குங்கும மாளிகையின் விஷயமே உனக்குத் தெரியாது. அதனால் தான் இப்படிப் பேசுகிறாய். போகப்போக உனக்குத் தெரியும். தயவு செய்து ஆத்திரப் படாதே!" என்று விடுதித் தலைவன் விநய பூர்வமாகக் கூறினான்.

"போகப் போக என்றால்?" என்று குழப்பத்தோடு பூபதி கேட்டான்.

"சரிதான். இதோடு அந்தக் குங்கும மாளிகைக்கே முழுக்குப் போட்டு விடலாம் என்று நினைத்து விட்டாயா? தம்பீ! நீ இப்பொழுதே என்னைச் சந்தேகப்பட ஆரம்பித்து விட்டாய் என்றல்லவா தெரிகிறது. உன்னை நான் மதித்திருக்கிற விதம் என்ன! உனக்காக நான் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் என்ன! நீ கொடுத்திருக்கும் உறுதி மொழி என்ன! இத்தனை விஷயங்களையும் ஒரு விநாடியில் காற்றிலே பறக்க விட்டு விட்டாயே!" என்று சொல்லிக் கொண்டே, கையைப் பரிதாபச் சாயலில் விரித்தான் தலைவன். சித்திராங்க பூபதிக்கு மூளை கலங்கியது.

"சித்திராங்கா! உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து இங்கே விட்டார்கள் அல்லவா முரடர்கள், அவர்கள் வேறு ஒரு மனிதரை நினைத்துக் கொண்டு உன்னைத் தூக்கி வந்து விட்டார்கள். இந்தச் சிறு தவறு நேர்ந்ததற்காக, நான் மனப்பூர்வமாக அந்த முரடர்களின் சார்பிலும் அவர்களுக்குக் கட்டளையிட்ட முட்டாளின் சார்பிலும் மன்னிப்புக் கோருகிறேன். இதன் பிறகும் உனக்கு என்னிடம் நம்பிக்கை இல்லையென்றால் நான் இந்தப் பக்கமாகப் போகிறேன். நீ அந்தப் பக்கமாகப் போய் விடு. உறுதி மொழியும் காற்றோடு போன மாதிரித் தான்!"

விடுதித் தலைவன் இந்த மாதிரிச் சொல்லிவிட்டுச் சித்திராங்க பூபதியின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"ஐயா! தயவுசெய்து என்னைக் குழப்பி யடிக்காதீர்கள். நாம் இப்பொழுது எங்கே இருக்கிறோம்? அதைச் சொல்லுங்கள் முதலில்!" என்றான் பூபதி.

"அதெல்லாம் நிச்சயம் சொல்லுகிறேன். உன்னை இப்படியே இந்தக் கானகத்தில் விட்டு விட்டுப் போய் விடுவேனா! அதிலும் ஒவ்வொரு நடு நிசியிலும் குறைந்தது ஒரு நரபலியாவது கேட்கிற இந்தப் பயங்கரமான வனதேவதையின் கோவிலுக்கு அருகிலே உன்னை நிர்க்கதியாக விட்டு விட்டுப் போய்விடுவேனா நான்! ஒருநாளும் மாட்டேன். அத்தனை நன்றி கெட்ட மனிதன் இல்லை நான்! உனக்கு இஷ்டம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, உன்னை மறுபடியும் குங்கும மாளிகையிலே கொண்டுபோய்க் கவனமாகச் சேர்த்து விடுகிறேன். அதன் பிறகு நீ எங்கு போக வேண்டும் என்றாலும் போகலாம். அல்லது மாளிகையிலேயே தங்கிப் பேரியாழின் நுட்பங்களை யெல்லாம் தெரிந்து கொண்டு போவதானாலும் போகலாம். எது சம்மதமோ அப்படிச் செய்யலாம். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் அவன்.

சித்திராங்க பூபதி திசை தெரியாத அந்த வனாந்தரத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தான். "இந்த வனாந்தரத்தில் தன்னந்தனியாக வழி கண்டு பிடித்துப் போய்த் தப்பிப்பது என்பது இயலாத காரியம். இவனும் அதற்கு விடுகிறானோ இல்லையோ! அப்படியே இவன் நம்மை விட்டு விட்டுப் போய் விட்டாலும், நரபலி என்று ஒரு வார்த்தையை வேறு போட்டுத் தொலைத்திருக்கிறான். அதை நினைத்தாலே உடம்பை என்னவோ செய்கிறது. ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று மட்டும் நன்றாகத் தெரிகிறது. சூழ்ச்சியைச் சூழ்ச்சியினால்தான் வெல்ல வேண்டும்!" —இவ்வாறு யோசித்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு "சரி, குங்கும மாளிகைக்கே போகலாம்!" என்றான் சித்திராங்க பூபதி.

இப்படி அவன் சொன்ன மறு விநாடி, விடுதித் தலைவன் அவனைத் தோளோடு தோள் சேர்த்து அணைத்துக்கொண்டே, சற்றுத் தொலைவிலே தெரிந்த சிறிய கோவிலை நோக்கி அழைத்துச் சென்றான்.

பூபதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு விடுதித் தலைவனோடு நடந்து சென்றான். அந்தக் கோவிலைச் சுற்றி அங்கங்கே முக்கூட்டு அடுப்புக் கட்டிகள் தெரிந்தன. அவற்றில் இருந்த புகைக் கரியைப் பார்த்தால் சமீபத்தில் அந்தக் கோவிலில் ஏதோ ஒரு திருவிழா நடந்திருக்க வேண்டும் என்றும், — அந்தத் திருவிழாவுக்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருக்க வேண்டும் என்றும் யூகிக்கலாம். அந்தக் கோவிலைச் சுற்றியுள்ள பாறைகளின் மேலே மஞ்சள் மெழுகினாலும் சுண்ணாம்புக் கோலத்தினாலும் பெரிய பெரிய காளியின் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. கோவிலுக்கு எதிரே பலிபீடம் போல வட்டமான உயர்ந்த வழவழப்பான பாறை ஒன்று நின்றது. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே கோவிலினுள் நுழைந்ததும், பூபதியை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்ப விடாமல் அந்தக் கோவிலின் வலது சுற்றுக்கு அழைத்து வந்தான் தலைவன். கொஞ்ச தூரம் செல்வதற்குள் ஒரே இருட்டாயிருந்தது பிராகாரம். அந்தப் பிராகாரத்தின் சுவரில் ஓர் இடத்தில் ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! தலையை உள்ளே நீட்டிப் பார்த்தால் அது ஒரு வாசல். அந்த வாசலில் ஒருவன் ஈட்டியும் கையுமாக நின்றான்.

"பயப்படாதே பூபதி! இதன் வழியாகத்தான் நாம் செல்ல வேண்டும்!" என்றான் தலைவன்.

"நாம் எங்கே போகிறோம்?" என்று ஒரே கலவரத்தோடு பூபதி கேட்டான்.

"மறுபடியும் சந்தேகப்படுகிறாயே! இப்பொழுது நாம் குங்கும மாளிகைக்குத்தான் திரும்பிச் செல்லுகிறோம்! கவலைப்படாதே! குங்கும மாளிகையின் மாடத்திலே நின்றாளே ஒரு நிலவு நங்கை, மறந்து விட்டாயா, அவளைப் பார்த்து அவளோடு நாலு வார்த்தைகள் பேசினால்தான் உன்னுடைய இந்த அதிர்ச்சி யெல்லாம் நீங்கும்."


விடுதித் தலைவனும் பூபதியும் தீவட்டியின் ஒளியில் அந்தச் சிறிய வாசலுக்குள்ளே நுழைந்தார்கள். தீவட்டி மனிதன் முன்னால் சென்றான். மத்தியில் சித்திராங்கன். அவனுக்குப் பின்னால் விடுதித் தலைவன். போகப் போக அது பெரிய சுரங்கப் பாதையாக இருந்தது. அந்தச் சுரங்கப் பாதையில் மனத்தை யெல்லாம் பாறையாக உறுதிப்படுத்திக் கொண்டு நடந்தான் சித்திராங்க பூபதி. (தொடரும்)




செம்மங்குடி முகூர்த்தங்கள்

சென்னை மாகாணத்திலும், மாகாணத்துக்கு வெளியிலும் தமது இணையற்ற சங்கீத ஞானத்தின் மூலம் மக்களைக் கவர்ந்திருக்கும் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் தமது குமாரனுக்கும், குமாரிக்கும் திருமணங்கள் நடத்தி வைத்தார். திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளையும், உபநயனம் செய்து கொண்ட செம்மங்குடி ஸ்ரீ சீனிவாச ஐயரின் மற்றொரு புதல்வனையும் படங்களில் காணலாம்.

செம்மங்குடி அவர்களின் குமாரன் ஸ்ரீ கோபாலசாமிக்கும், திருச்சி உறையூர் ஸ்ரீ சாம்நாத ஐயர் குமாரி ஜெயலக்ஷ்மிக்கும் மே மீ 30உ திருச்சி மாவட்ட சிறுமருதூர் கிராமத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மே மீ 16உ மாயூரத்தில் செம்மங்குடி அவர்களின் புதல்வி தர்மாம்பாளுக்கும், அரசலங்காடு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. சௌபாக்கியவதி தர்மாம்பாளின் திருமணத்தின் போது செம்மங்குடியின் குமாரன் சிரஞ்சீவி ராதா கிருஷ்ணனுக்கு உபநயனம் நடைபெற்றது. தேசமெங்கிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளும், உபநயனம் செய்து கொண்ட குமாரனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழப் பிரார்த்திக்கிறோம்.






இப்புது வத்னி
உங்களுக்கு
மகிழ்ச்சியளிக்கும்
தாவர சோப்புத் தயாரிப்பில் முதல்வரான கோத்ரெஜ் தயாரிக்கும் இந்த தூய்மையான சோப் உங்களுக்கு புத்துணர்வும் அதிக வசீகரமும் அளிக்கும். எங்கும் மக்களுக்கு உற்சாக மளித்ததைப்போலவே அது உங்களுக்கும் உற்சாகமளிக்கும்.
வத்னி★
கடைசி செதில் வரை புதுமையும் நறுமணமும் வாய்ந்தது.
VATNI
INDIA'S POPULAR SOAP
வத்னி
மற்றும் வத்னி பேபி 2 அணா
ஆரோக்கியத்திற்கும் வசீகரத்திற்கும் திறவு கோல்
'சாவி' மார்க்
Godrej கோத்ரெஜ்
சலவை சோப்புத் தூள்கள்
ஷேவிங் ஸ்டிக் • ஹேர் டானிக்
டாய்லெட் பவுடர்
★ 'தாய்நாடு' என்று அர்த்தம் கொண்ட 'வதன்' என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.
ISTMA
ஸ்வதேசி
நிர்வாகம்
மூலதனம்



விடாக்கண்டர்


நான் சர்வோதயபுரத்தை அடைந்த சமயம் அங்கே, தேபர்ஜி, ராஜன் பாபுஜி, ஜயப்பிரகாஷ்ஜி எல்லாரும் கூடி விநோபாஜியுடன் பேசிக் கொண்டிருந்தனர். நான் 'ஜி'க்கள் கூட்டத்தில் பிரவேசித்தேன்.

என்னைக் கண்டதும் ஜயப்பிரகாஷ்ஜி கண்கலங்கிய வண்ணம், "கேட்டீரா சேதியை? விநோபாஜி மூன்று தினங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறாராம். உண்ணாவிரதம் காரணமாக அவருடைய தேகநிலைமை கெட்டுவிடுமே என்று பயமாயிருக்கிறது" என்று வருத்தப்பட்டார்.

"இப்போது தேச நிலைமை ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது. விநோபாஜியைப் போன்ற உத்தமர்கள் வழிகாட்டினால்தான் நம் தேசம் உருப்படும். விநோபாஜி அதற்காகத் தம்மை ஆத்மசுத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா?" என்று ஜெயப்பிரகாசருக்கு ஆறுதல் கூறினேன்.

"விடாக்கண்டரே! உமக்கு உண்ணாவிரதத்தில் அதிக அனுபவம் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது" என்றார் ஜெயப்பிரகாசர்.

"ஆமாம். ரொம்ப ரொம்ப அனுபவம் உண்டு. நான் நாற்பது ஆண்டு காலமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறேன். தினந்தோறும் இரவு ஒன்பது மணிக்குச் சாப்பிட்டு விட்டுப் படுத்தால் பிறகு காலையில் எழுந்திருக்கும் வரை ஒன்றுமே சாப்பிடுவது கிடையாது. இரவு பூராவும் உண்ணாவிரதம்தான்!" என்றேன்.



பிறகு விநோபாஜி குடிலுக்குள் பிரவேசித்தேன். விநோபாஜி என்னைக் கண்டதும், "மௌனவிரதம் இருக்கலாமா?" என்று கேட்டார்.

"கூடாது, கூடவே கூடாது. இருக்கக் கூடாது" என்றேன்.

"ஏன்?" என்று வினவினார் விநோபாஜி.

"தாங்கள் உண்ணாவிரதம் இருந்தால் அதனால் தங்களுக்கு ஆத்ம சுத்தி ஏற்படுகிறது. தாங்கள் மௌன விரதம் அனுஷ்டித்தால் தங்களுடைய சொன்னுன உபதேச மொழிகளைக் கேட்பது சாத்தியமில்லாமல் போய்விடுமல்லவா?" என்றேன்.

விநோபாஜியிடம் விடை பெற்றுக் கொண்டு குடிலை விட்டுப் புறப்பட்டேன். வழியில் காங்கிரஸ் தலைவர் தேபரும், நமது முதன் மந்திரி காமராஜரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"முடியாது, முடியாது!" என்றார் தேபர்.

"சாப்பிடத்தான் வேண்டும், இல்லாவிட்டால் விடமாட்டேன்" என்றார் காமராஜ்.



நான் இடையில் புகுந்து, "அதெல்லாம் முடியாது. அவர் உண்ணாவிரதம் இருப்பதாக முடிவு செய்தாகி விட்டது. நாம் விநோபாஜியைத் தொந்தரவு செய்யக் கூடாது" என்றேன்.

காமராஜர் சிரித்துக்கொண்டே "விநோபாஜியைச் சொல்லவில்லை; தேபரை அல்லவா பனை நொங்கு சாப்பிடச் சொன்னேன்? அவர் முடியாது என்கிறார். 'நான் சாப்பிடத்தான் வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.

"அப்படியா சேதி?" என்று கூறிக் கொண்டே பனை நொங்குகளில் இரண்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினேன்.

"இப்போது எங்கே கிளம்புகிறீர்?" என்று விசாரித்தார் தேபர்.

"மதுரைக்கு."


"மதுரைக்கா? அது எங்கே இருக்கிறது?"

"தென்னாட்டில் இருக்கிறது. அல்லது தட்சிணப் பிரதேசத்தில் இருக்கிறது. அல்லது திராவிடஸ்தானில் இருக்கிறது" என்றேன்.

"திராவிடஸ்தானா? அது எங்கே இருக்கிறது?"

"ஆந்திரம், கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய நாலு பாஷைப் பிரதேசங்களும் சேர்ந்த பிரதேசத்துக்குத் திராவி

உருவம் தேய்ந்தால் மதிப்பும் குறையும்!



மத்திய சர்க்காரின் சின்னஞ் சிறு ராஜ்யங்களின் செல்வாக்குப் பெரிதும் குறைந்துவிடும்!

டஸ்தான் என்று பெயர். ராஜாஜி கூறும் தட்சிணப் பிரதேசமும் இதுவே. ஆனால் ஒரு வித்தியாசம்'' என்றேன்.

''அது என்ன?''

''திராவிடஸ்தான் மத்திய ஆட்சியுடன் தொடர்பற்றதாயிருக்கும். தட்சிணப் பிரதேசம் மத்திய சர்க்காருடன் தொடர்புடையதாயிருக்கும். அவ்வளவுதான் வித்தியாசம்'' என்றேன்.

''மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமல்லவா இது!'' என்றார் தேபர்.

''இல்லை, இல்லை; வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ள வித்தியாசம்'' என்று கூறிவிட்டு மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

மதுரையில் கூடியிருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் தி. மு. க. மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட திராவிடஸ்தான் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிக் கொண்டிருந்தார் ராஜாஜி.

கூட்டத்தில் ஒரு தி. மு. க. தோழர், ''பார்த்தீர்களா? ராஜாஜி திராவிடஸ்தானை ஆதரித்துப் பேசுகிறார்? ஆகவே, நாங்கள் தனி திராவிடஸ்தான் ஸ்தாபிக்கப் போகிறோம்!'' என்றார்.

''பேஷாக ஸ்தாபியுங்கள். பின்னால் அதற்கு நாங்கள் தென்னாடு என்று பெயர் சூட்டி விடுகிறோம்'' என்று கூறி விட்டுப் பம்பாய்க்குப் பாய்ந்து சென்றேன்.

பம்பாய் நகரம் ஒரே அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது.

காலையில் மழைமாரி. மாலையில் கல்மாரி. எங்கே பார்த்தாலும் ஒரே மாரி.

மெதுவாக நேருஜி பேசிக்கொண்டிருந்த பொதுக் கூட்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தேன். குறுக்கே ஒரு கல் ஆகாசத்தில் பறந்தது. சட்டென்று அதைத் தாவிப் பிடித்துக் கொண்டேன். பிறகு நேருஜியைச் சந்தித்துத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்ட செதியைத் தெரிவித்தேன்.

'இது எதிர்பாராத துர்ப்பாக்கியம்' என்றார் நேருஜி.

பிறகு, ''விடாக்கண்டரே! கையில் என்ன அது?'' என்று கேட்டார்.


''கல்!''

''கல்லா? நீரும் மகாராஷ்டிர ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலாட்டாவில் சேர்ந்து விட்டீரா?''

''இல்லை. யாரோ ஒரு கலாட்டாப் பேர்வழி போட்ட கல் இது. அது தங்கள் மீது விழாமல் இடையில் மறித்துப் பிடித்து விட்டேன்'' என்றேன்.

''நாட்டில் அராஜகம் ஒழிந்து அமைதியும் சாந்தமும் நிலவ வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் பாடுபடுவோம்'' என்றார் நேருஜி.

''அத்தகைய ஒரு அன்பு மாளிகையை எழுப்ப நாம் இன்றே அஸ்திவாரம் போட வேண்டும். இதோ கல்!'' என்றேன்.



திரு ஏ. வி. கிரி

டாடா - மெர்சிடெஸ் - பென்ஸ் விற்பனையாளர்களான கவுண்டர் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்டின் டைரக்டரும், பொள்ளாச்சி ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்டின் டைரக்டரும் பர்மா - ஷெல் டீலர்ஸ் என். மகாலிங்கம் & கம்பெனியின் பாகஸ்தருமான திரு ஏ. வி. கிரி அவர்கள் ஐரோப்பா, யுனைடெட் கிங்டம் ஆகிய அயல் நாடுகளில் மோட்டார் சம்மந்தமான வியாபார விஸ்தரிப்பு முறைகளை அறிந்து வர 1956 மே மாதம் 29ம் தேதி ஏர் இந்தியா இண்டர்நேஷனல் மூலம் பம்பாயிலிருந்து புறப்பட்டார். அவர் சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் மற்றும் மேட்டுப்பாளையம் "இண்டோ - ஸ்விஸ் சிந்தெடிக் ஜெம் கம்பெனி"யிலும் டைரக்டராக இருக்கிறார்.

24 வயதுள்ள திரு ஏ. வி. கிரி அவர்கள் பொள்ளாச்சி ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்டின் மானேஜிங் ஏஜெண்டும், சென்னை மாகாண சட்ட சபை அங்கத்தினருமான திரு என். மகாலிங்கம், B.Sc., A. M. I. E. அவர்களின் மைத்துனர்.

தனது சுற்றுப்பிரயாணத்தின்போது மேற்கு ஜெர்மனியில் டெய்ம்லெர் பென்ஸ், A. G. தொழிற்சாலைக்கும் ஸ்விட்சர்லாந்தில் சுருசா லிமிடெட் தொழிற்சாலைக்கும் மற்றும் இங்கிலாந்தில் முக்கியமான மோட்டார் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் செல்வார். தாயகம் திரும்பு முன் சுமார் ஒன்பது மாத காலம் அயல் நாடுகளில் பிரயாணம் செய்யத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

விற்பனை இலகுவாக முடிந்தது---



ட்ரேயோபேன் பாக்கிங் கண்ணைக் கவர்ந்து, சரக்குகளுக்கு என்ன மாறுதலை அளிக்கிறது பாருங்கள்! அதன் பளபளப்பும் பிரகாசமும் வாடிக்கைக்காரர்களின் கவனத்தைக் கவருகிறது...சரக்குகள் புத்தம் புதியதாகவே தோன்றுவதால் அவர்கள் தாங்கள்கொடுக்கும் விலையின் முழுமதிப்பைப்பெறுகிறோம் என்று திருப்தியடைகிறார்கள்

ட்ரேயோபேன்* தாளில் பாக் செய்யப்படுவதால்



சரக்குகளின் மேல் தூசி துப்புப் படியாமல் ட்ரேயோபேன் பாதுகாப்பளிக்கிறது. எங்களுடைய இலவச சாம்பிள் புத்தகத்திற்கு இன்றே எழுதுங்கள்!

மிகவும் மலிவானது!



20" x 30" அளவுள்ள ஒரு ட்ரேயோபேன் தாளின் விலை $1\frac{1}{4}$ அணாவுக்குள் அடங்கி.விடுகிறது. சுருள்களாகவும் தாள்களாகவும் கிடைக்கிறது. ட்ரேயோபேன் இனி கவர்ச்சிகரமான நான்கு வித நிறங்களில் கிடைக்கும்

ட்ரேயோபேன்

*ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பேரண்ட் தாளின் புதிய பெயர்

கண்ணைக் கவருகிறது...விற்பனையை எளிதாக்கிறது

தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட்

பாக்டரி: ரேயான்புரம் போஸ்ட் திருவாங்கூர்-கொச்சின்

ஸேல்ஸ் ஆபிஸ்: யுனைடெட் இந்தியா பில்டிங், மதராஸ்-1

கலைநகரிலே! சுப்பு

தானம் கொடுத்த மாட்டை......

பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாதுதான். ஆனால் தானம் வாங்காமலே இருந்து விடுவதில் பிசகு ஒன்றுமில்லை அல்லவா! கொஞ்ச காலமாகத் தலைவர் ராஜாஜி அமெரிக்க உதவியைப் பற்றியும், மொத்தத்தில் வெளிநாட்டு உதவிகளைப் பற்றியும் குறிப்பிடும்போது, அவைகளைப் பெற்றுக் கொள்ளாமலே இருந்து விடுவது உசிதம் என்று கூறி வந்திருக்கிறார்.

அமெரிக்காவிலே தற்போது, நீராவியினால் இயக்கப்படும் ரயில் வண்டிகளை உற்பத்தி செய்வதை அறவே நிறுத்தி, மின்சாரத்தினாலும் அணுசக்தியினாலும் இயக்கப்படும் ரயில் வண்டிகளை உற்பத்தி செய்வதில் முனைந்திருக்கிறார்கள். பால்டுவின் தாம்ஸன் கார்ப்பொரேஷன் என்கிற உலகப் பிரசித்தி பெற்ற இயந்திரசாலை இதுவரை நீராவி ரயில் வண்டிகளைப் பெரிய அளவில் தயாரித்து வந்தது. விஞ்ஞான முன்னேற்றத்தை முன்னிட்டு, சமீபத்தில்



அத்தகைய இஞ்சின் உற்பத்தியையே அறவே நிறுத்தி விட்டது. கடைசியாகத் தயாரிக்கப்பட்ட ஐம்பது இஞ்சின்களைக் கருணை கூர்ந்து பாரத தேசத்திற்கு "உதவி"யாகக் கொடுத்துள்ளது. அமெரிக்க உதவிப் பொருள்களில் இது ஒன்று. இதனால் பாரதத்துக்கு ஏற்படும் சௌகரியங்களாவன.

1. சப்ளை செய்த கம்பெனி கடையைச் சாத்தி விட்டது.
2. உதிரி பாகங்கள் (Spare Parts) எதிர் தேசங்களில் கூடக் கிடையாது.
3. இந்திய மண்ணில், இந்த கனம் பொருந்திய இஞ்சின்கள், எல்லா இடங்களிலும் இயங்க இயலாதாம். ஆன பயன் என்கொல்! அமெரிக்கா அள்ளிக் கொடுத்தது என்ற பெயரைத் தட்டிக்கொண்டு போவதுதான் மிச்சம்!

தந்தியும் தண்டவாளமும்

ஹிந்தி தேசிய பாஷையாக வேண்டுமென்பதில் யாருக்கும் ஐயமிருக்காது. அதற்காகக் கடைப்பிடிக்கப்படும் வழியைப் பற்றித்தான் இப்போது சர்ச்சை. ரயில்வே இலாகாக்காரர்கள் அதற்கு ஒரு சௌகரியமான வழியைக் கண்டுபிடித்து விட்டார்கள். 1960க்குள் காஷ்மீரம் முதல் குமரிவரை, அரபிக் கடல் முதல் வங்கக்கடல் வரை ஓடும் எல்லா ரயில்வேக்களிலும் உள்ள சிப்பந்திகள் இந்தியைக் கற்றுத் தேறவேண்டும். பாரத மக்களைப் பாகங்களாகப் பிரித்து, ஹிந்தியே தெரியாத தென்னாட்டு மக்களைக் கடைசியில் போட்டு, வகுப்புகள் ஏற்படுத்தி, கட்டாயவிராஜா கொடுத்து, கற்றுக் கொள்ளச் சொல்லி, பரீக்ஷைகள் வைத்து, எல்லாம் குறுகிய காலத்துள் முடிகிறதுபோல் ஏற்படுத்தியுள்ளார்கள். எல்லாம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், உத்தியோக உயர்வுகளுக்கும், இதர உயர்வுகளுக்கும், இது கட்டாய அம்சமாக வைத்திருப்பதில்தான் சாஸ்திரியாரின் பொடி இருக்கிறது. தபால் தந்தி இலாகாவிலும் கூடிய சீக்கிரம் சாஸ்திரியாரை, ஸகா ராஜ்பகதூர் பின்பற்றுவார் என்று நம்ப இடமுள்ளது. தந்திக் கம்பியும் தண்டவாளமும் ஒன்று சேர்ந்தால், எதைத்தான் வளைத்துக் கட்ட முடியாது! அரசியலில் சாதிக்க முடியாததை அரசாங்கத்தில் சாதிக்க முயலுவது நல்ல வழிதான்!

விட்டேனா!

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

தலைவர் ராஜாஜி மதுரைப் பொதுக் கூட்டத்தில் தென்னாடு பற்றிப் பேசியுள்ளார். அவருக்கே விரோதமான தி. மு. க. கூறியுள்ள தென்னாட்டை ஆதரித்துள்ளார். ரொம்ப சரியானது. தட்சிணப் பிரதேசம் என்று ஏற்பட்டால்தான் நல்லது. இதையேதான் அமரர் கல்கி கூட வேறொரு முறையில் விவரித்துள்ளார். அதாவது 'பார்த்திபன் கனவு' என்ற சரித்திர நவீனத்தில் மூன்றாவது பாகம் 'அருவிப்பாதை' என்ற அத்தியாயத்தில் சிவனடியாரும் பொன்னனும் பேசுவதாக வர்ணித்துள்ளார். பெரிய தேசங்கள் இருந்தால்தான் பெரிய காரியங்கள் பெரிய சாதனைகள் செய்ய முடியும். பெரிய புகழ் அடைய முடியும். அதனால்தான் வடநாடு புகழ் அடைகிறது. சிறு சிறு ராஜ்யங்கள் அதிக புகழ் அடைய முடியாது என்பதைக் காட்டியுள்ளார்.

தற்போது இருக்கும் தட்சிணப் பிரதேசநிலை பேராசிரியர் கல்கி அவர்களுக்குத் தெரிந்திருக்கா விட்டாலும் இருக்கலாம். ஆனால் பொதுவாகவே நன்மையளிக்கக் கூடிய பெரிய ராஜ்யத்தைப் பற்றிக் கூறியுள்ளார். இந்தக் கூற்று நியாயமானதும் யாவரும் எடுத்துக் கொள்ளக் கூடியதுமாகும்.

அதையேதான் தலைவர் ராஜாஜி வற்புறுத்துகிறார். அவர் சொல்வது என்றும் தவறுவதில்லை. ஆகையால் தட்சிணப் பிரதேசத்துக்கு அதிக ஆதரவு மக்கள் அளிப்பார்கள் என நம்புகிறேன்.

அண்ணாமலை நகர்
2—6—55

ஜி. ஜெகந்நாதன்

மதுரையில் பொன்விழா

"பாலும் தெளிதேனும்
பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு
நான்தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா"

என்று ஔவைப் பிராட்டியார் விநாயகப் பெருமானிடம் வரம் கோரினார்.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று துறைகளையும் வளர்த்து, சங்கம் உயர்ந்தது; சங்கம் வளர்த்ததனால் தமிழ் வளம் பெற்றது. செந்தமிழ் என்றோ, பைந்தமிழ் என்றோ, நற்றமிழ் என்றோ கூறாமல் சங்கத் தமிழ் என்று கூறி விரும்புவது சங்கத்தின் சிறப்பையும், அதன் மூலம் தழைத்த தமிழின் பெருமையையும் ஒருங்கே கூறியதாகிறது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்ச் சங்கம் பிறந்து, வளர்ந்து, தழைத்த தொன்மையான இடம் புகழ்பெற்ற நான்மாடக்கூடல் என்னும் மதுரை மூதூர்.

முத்தமிழை வளர்த்த தமிழ்ச் சங்கத்தின் வரலாற்றைச் சிறிது ஆராய்வோம்.

பண்டைத் தமிழகத்தின் தெற்கெல்லை இப்போது உள்ள கன்னியாகுமரித் துறையிலிருந்து தென் திசையில் பல காத தூரம் பரவியிருந்தது. அப்பகுதி அக்காலத்தில் குமரி நாடு முதலாக நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிவு பட்டிருந்தது. அவற்றுள் தென் மதுரை என்னும் நகரம் பாண்டிய மன்னர்களது தலைநகரமாகப் பலப் பல ஆண்டுகள் செழித்து விளங்கியது. அந் நகரத்தில்தான் தலைச் சங்கம் நிறுவப்பட்டு, தமிழ் வளர்ச்சிக்கு அளப்பரும் சேவை செய்யப்பட்டது.

முதலாவது தமிழ்ச் சங்கத்தை நிறுவியவன் காய்சின வழுதி என்னும் பாண்டியன். இச் சங்கத்தில் அகத்தியனார், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர் பெருமக்கள் வீற்றிருந்து தமிழ் மொழிக்கு அருந் தொண்டாற்றினர். பிற்காலத்தில் தென் மதுரையைக் கடல் விழுங்கி விட்டபடியால் கடுங்கோன் என்னும் பாண்டியன் பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே கபாடபுரம் என்னும் வளநகரை அமைத்து அதில் மீண்டும் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தான். இதுதான் இடைச் சங்கம் எனப் பெயர் பெற்றது. இடைச் சங்கத்தில், ஒல்காப் புகழ் பெற்ற தொல்காப்பியனார் முதலிய அருந்தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழ்த் தொண்டாற்றினர்.

கால வெள்ளத்தின் வேகத்தில், பஃறுளியாற்றையும் குமரியாற்றையும் கடல் விழுங்கிவிடவே கபாடபுரமும் இன்னும் பல நகரங்களும் அழிந்து மறைந்து போயின.

அதற்குப் பிறகு, முடத்திருமாறன் என்னும் பாண்டியன் இப்பொழுதிருக்கும் மதுரையம் பதியை நிறுவி அதில் மூன்றும் தமிழ்ச் சங்கமான கடைச் சங்கத்தை நிர்மாணித்தான்.

இவ்வாறு மதுரையில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்து வந்த தமிழ்ச் சங்கம், ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் காலத்தில் மறைந்து விட்டது.

பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், பாண்டித்துரைத் தேவர் என்னும் வள்ளற் பெருந்தகையாளரின் முயற்சியில், மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றியது. 1901 ம் ஆண்டு தோன்றிய நான்காம் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாதான் மே மாதம் 30உ முதல் ஏழு தினங்கள் மதுரையில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பெரியார் திரு பி. டி. ராஜன் எம். எல். ஏ. அவர்களின் பெருமுயற்சியினால் நாலாவது தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.


தலைவர் ராஜாஜி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து, தமிழும், தமிழ் நாடும், தமிழ் மக்களும் உயருவதற்கு வேண்டிய கருத்துக்களைத் தெரிவித்தார்.

விழா நடைபெற்ற எட்டு நாள் மாலையிலும் இரவிலும் இசை அரங்கும், நாடக அரங்கும் அமோகமாக நடந்தேறின.

பிள்ளைமதி அணிந்த வெள்ளியம்பலக்கூத்தன் அருளால் மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா சீரும் சிறப்பும் பெற்று நடைபெற்றது.

தமிழ் விழாக் காட்சிகள் சிலவற்றை எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

1. முதல் நாள் தமிழ் விழா நடைபெற்ற தமுக்க மைதானத் திடல் முன்வாசல் தோற்றம். தலைவர்கள் விழா மேடைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர். 2. பொன் விழா வரவேற்புக் கமிட்டியின் சார்பாக மந்திரி ராமநாதபுரம் ராஜா எல்லாரையும் வரவேற்கிறார். 3. விழாவைத் துவக்கி வைத்த ராஜாஜி. 4. தமிழ்ச் சங்கப் பொன் விழா கண்ட பெரியார் திரு பி. டி. ராஜன் எம். எல். ஏ. வரவேற்புரை நிகழ்த்துகிறார். 5. குமாரிகள் ராஜலக்ஷ்மியும், ஜெயலக்ஷ்மியும் இறை வணக்கம் பாடுகிறார்கள். 6. ரயில்வே மந்திரி திரு ஓ. வி. அளகேசன் பேசுகிறார். கொடியில் உட்கார்ந்திருப்பவர்தான் முதல் நாள் விழாத் தலைவர் திருப்பெருந்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான். 7. மந்திரி பக்தவத்சலம் இரண்டாம் நாள் விழாவில் தலைமையுரை நிகழ்த்துகிறார். 8. சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீப்ரகாசா மூன்றாம் நாள் விழாவில் பேசுகிறார். தமிழ் விழாவில் உற்சாகமாகக் கலந்துகொண்டிருக்கும் பெண்மணிகளின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.


1
2
3
4
5
6
7
8

ACP. 2828



இந்த இக்கட்டான நிலைக்கு ஆளாகாதீர்கள்!



உங்கள் ஷர்ட் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்குவதைத் தடுக்க, 'ஸான்பொரைஸ்ட்' அடையாளத்தைக் கவனியுங்கள்

சாதாரண துணியில் தைக்கப்பட்ட ஒரு நேர்த்தியான ஷர்ட் சிறிது சுருங்கினாலும், அதன் தோற்றம் கெட்டு விடும். ஆனால் நீங்கள் வாங்கும் பொழுது ஒவ்வொரு உடையிலும் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளமிருக்கிறதா என்று கவனித்தால், உடைகள் சுருங்கும் என்று நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

'ஸான்பொரைஸ்ட்' அடையாளமிடப்பட்ட துணிகள் முன்னமேயே முற்றிலும் சுருக்கச் செய்யப்பட்டவை. ஆகவே அநேக சலவைகளுக்குப் பிறகும் உங்களுடைய உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபொழுதும் சுருங்காது.

எப்பொழுதும் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளத்தைக் கவனியுங்கள்!

ஸான்பொரைஸ்ட் ஸர்வீஸ், 'பாகீஜாத்',
நேதாஜி சுபாஷ் ரோடு, மெரீன் ட்ரைவ், பம்பாய் 2

'ஸான்பொரைஸ்ட்-கே-மெஹ்மான்' என்ற நிகழ்ச்சியை ரேடியோ ஸிலோனில் கேளுங்கள்: பிரதி ஞாயிறு பகல் 12-45 மணி 31 மீட்டர்; பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணி, 41 மீட்டர்

அன்பின் சின்னம்

வெங்கு

திருவாளர் கந்தசாமியை அறிந்தவர்கள் இப்பொழுதெல்லாம் ஆச்சரியக் கடலில் மூழ்கி மூச்சு விட முடியாமல் திணறிப் போகிறார்கள்!

"கந்தசாமிக்கு அப்படி என்ன நேர்ந்து விட்டது!" என்று கேட்கிறீர்களோ! அது கேட்க வேண்டிய கேள்விதான்.

திருவாளர் கந்தசாமி நீண்ட நெடுங்காலம் போலீஸ் இலாகாவில் வேலை செய்து விட்டு, இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாகச் சர்க்கார் பென்ஷன் வாங்கி வருகிறார். இப்படிச் சொன்னாலே போதும், அவர் எவ்வளவு பழைய நாளைய ஆசாமி என்று சுலபமாக அறிந்து கொள்ளலாம். அவர் பெரிய பெரிய வெள்ளைக்காரத் துரைமார்களிடம் வேலை செய்தவர். அந்த நாட்களில் கந்தசாமியின் ஆங்கில ரிப்போர்ட்டுகளைப் படித்து விட்டு அந்த வெள்ளைக்காரத் துரைகள் கந்தசாமியின் ஆங்கில நடையையும் மொழி வளத்தையும் பாராட்டியிருக்கிறார்கள் என்றால் அவர் ஆங்கில மோகத்தில் எவ்வளவு மூழ்கியிருப்பார் என்பதைச் சுலபமாக ஊகித்துக் கொள்ளலாம்.

"தமிழாவது ஒன்றாவது. காலமே கெட்டுப் போச்சு! அரசாங்கம் தமிழிலே நடத்துவதாம்! பிதற்றல்! உளறல்! ஆங்கிலத்துக்கு ஈடு ஆகுமா!" என்றெல்லாம் அவர் சொல்லி வந்தார்.

அப்படிப்பட்டவர் இன்று "இங்கிலீஷ் பாஷைக்கு விவஸ்தை ஏது!" என்கிறார். "தமிழைப் போலாகுமா!" என்கிறார். இதைக் கண்டு ஆச்சரியக் கடலில் மூழ்காமல் என்ன செய்வது!

கந்தசாமி இந்த வயதில் எப்படி இம்மாதிரி மாறினார் என்று வியக்க அல்லவா வேண்டியிருக்கிறது!

நாம் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். ஒரு விஷயத்தைப் பற்றித் தீவிர உணர்ச்சியுடனிருந்தவர்கள், அந்த விஷயத்தை விட்டு மாற்று அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டிருப்பார்கள். அதற்குக் காரணம் அவர்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியாக இருக்கும்! அம்மாதிரிதான் திருவாளர் கந்தசாமியின் வாழ்விலும் ஏற்பட்டது.

கந்தசாமி தம் பேரன் சுகுமாரனைத் தாமே எடுத்து வளர்த்துப் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சுகுமாரன் கல்லூரிப் படிப்பு முடிந்து சென்னை பாங்கி ஒன்றில் வேலைக் கமர்ந்து மாதம் இருநூறு ரூபாய் சம்பாதித்து வந்தான்.

இந்தச் சமயத்தில் திருவாளர் கந்தசாமி, காலா காலத்தில் சுகுமாரனுக்குக் கல்யாணம் செய்து பார்த்து விட வேண்டும் என்று தீர்மானித்தார். அவர் தீர்மானித்ததற்கு ஏற்றாற் போல், 'தம் மகள் சுசீலாவைக் கொடுக்கிறேன்' என்று திரு அம்பலவாணர் முன் வந்தார்.

சுசீலாவைக் கந்தசாமியும் பார்த்திருக்கிறார். இனி என்றால் இனிதான். சுகுமாரனுக்கு ஏற்றவள்தான். மேலும் அம்பலவாணர் பெரிய வக்கீல். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ளவர்.

இந்த சம்பந்தம் பற்றிக் கந்தசாமிக்குப் பரம திருப்தி. சுகுமாரனுக்கு ஒரு வார்த்தை எழுதி, அவன் சம்மதத்தைப் பெற்ற பிறகு கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைக்கலாம் என்று அம்பலவாணரிடம் கூறினார். அம்பலவாணரும் திருப்தியோடு புறப்பட்டார்.

அன்று பிற்பகல் இந்தக் கல்யாண விஷயமாகச் சுகுமாரனுக்கு எழுதலாம் என்று கந்தசாமி கையில் பேனாவுடன் மேஜையின்முன் உட்கார்ந்தார். அப்போது 'தபால்!' என்ற குரல் கேட்டது. கந்தசாமி தபால்காரர் கொடுத்த கவரைச் சந்தோஷத்துடன் பிரித்துப் பார்த்தார். சுகுமாரனின் கையெழுத்து என்பது தெரிந்தது.

அவ்வளவு சந்தோஷமும், கோபமும் ஆத்திரமாக மாறி விட்டது! அவர் புருவங்கள் நெரிந்தன! உதடுகள் துடித்தன!

என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்! சுகுமாரன் ஒரு பெண்ணின் தோள்மீது கைபோட்டுக் கொண்டு எடுக்கப்பட்ட போட்டோ ஒன்று அதில் இருந்தது. அந்தப் போட்டோவுடன் இருந்த கடிதத்தில், "உன்னைப் பிரிந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒரே வேதனையாக இருக்கிறது. நம்முடைய அன்பின் நினைவுச் சின்னமாக இந்தப் போட்டோ விளங்கட்டும். என்றும் உன் அன்புள்ள சுகுமாரன்" என்று எழுதியிருந்தது.

கந்தசாமிக்கு விஷயம் புரிந்து விட்டது. "பயலைப் பட்டணத்துக்கு வேலைக்கு அனுப்பி வைத்தால் காதல் நாடகம் அல்லவா நடத்துகிறான். சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் இப்படிக் கரியாக்கிக் கொண்டிருக்கிறானா! இவன் உத்தியோகம் பண்ணிப் பட்டணத்திலே குப்பை கொட்டியது போதும். ஊரோடு, வீட்டோடு வாசலோடு வந்து கிடக்கட்டும். அவனை இப்போதே இங்கு வரவழைக்கிறேன்" என்று மனத்தில் கருவிக் கொண்டார். சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார். மூலையிலிருந்த குடையை எடுத்துக் கொண்டு 'விர் விர்' என்று நடந்தார். எங்கே! தபாலாபீசுக்குத்தான். "உடனே, இன்றிரவே புறப்பட்டு வரவும். அவசரம்!" என்று தந்தி கொடுத்தார் சுகுமாரனுக்கு!


* * *

சென்னையிலிருந்து வரும் வண்டி காலை ஏழரை மணிக்கு வரும். ஆனால் இப்பொழுதெல்லாம் ரயில்கள் தாமதித்து வருவதே வழக்கமாகி விட்டபடியால், அந்த வழக்கத்துக்குப் பழுதில்லாமல் அரை மணிநேரம் தாமதித்து எட்டு மணிக்கு வந்தது. சுகுமாரன் என்னமோ ஏதோ என்று கவலையுடன் வீட்டுக்குப் போனான். தாத்தா வீட்டு முற்றத்தில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் சுகுமாரனுக்கு, சற்று நிம்மதி ஏற்பட்டது. தாத்தாவின் உடம்புக்கு ஒன்றுமில்லை என்று அறிந்து கொண்ட

தில் சற்று நிம்மதி. எப்பொழுதும் தன்னைப் பார்த்தவுடன் முகமலர்ந்து வரவேற்கும் பாட்டனார் இன்று வரவேற்காததைக் கண்டு சற்றுத் திகைத்தான். ஏதோ விபரீதம் போல் இருக்கிறது என்று நினைத்து, "என்ன தாத்தா, என்ன விசேஷம்! ஏன் இவ்வளவு அவசரமாக வரவழைத்தீர்கள்!" என்று கேட்டான்.

அவ்வளவுதான். இத்தனை நாழிகை மௌனமாக 'உம்'மென்று இருந்த தாத்தா சரமாரியாகப் பொழிய ஆரம்பித்து விட்டார்.

"உன்னை நல்லவன், யோக்கியன் என்று நினைத்தேன். இப்படிக் கெட்டுப் போவாய் என்று நினைக்கவில்லை! குலத்தின் பெயரைக் காப்பாற்றுவாய் என்று நினைத்தேன். கோடாலியாக வந்து சேர்ந்தாய்."



குமாரனுக்கு ஒன்றும் புரியவில்லை. "நான் அப்படி என்ன தாத்தா செய்தேன்!" என்று கேட்டான்.

"இன்னும் என்ன செய்ய வேண்டும்! ஒன்றும் தெரியாதவன் போல் பாசாங்கு செய்கிறாயே! இந்தப் பாசாங்கெல்லாம் இனிமேல் பலிக்காது. எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது!" என்றார். அவர் முகத்தில் கோபம் அக்னி ஜ்வாலையாக வீசியது. குமாரன் ஒன்றும் புரியாது திகைத்தான்.

இந்தச் சமயத்தில் குமாரனின் நண்பன் வேணு கோபால் குஷியாகச் சிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் குமாரனைப் பார்த்ததும் மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனெனில் அவன், குமாரன் அங்கு வருவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. அடுத்த கணம், குமாரனின் முக பாவத்தையும், அவன் தாத்தாவின் முகத்தில் பொங்கிய கோபத்தையும் பார்த்ததும், வேணுவின் சந்தோஷமெல்லாம் பறந்து விட்டது. 'அசந்தர்ப்பமான வேளையில் வந்து விட்டோம் போலிருக்கிறதே!' என்று நினைத்துச் சங்கடப் பட்டான்.

"யார் இவர்!" என்று கந்தசாமி குமாரனைக் கேட்டார்.

"என் நண்பன். என்னுடன் பாங்கியில் வேலைசெய்து கொண்டிருந்தான். சமீபத்தில் மாற்றலாகித் திருச்சிக்கு வந்திருக்கிறான்!..." என்று கூறினான் குமாரன்.

"இங்கே எங்கே வந்தார்!" என்று கடுமையான குரலில் போலீஸ் விசாரணையில் கேட்டார் தாத்தா.

இப்பொழுது வேணுகோபால் முந்திக் கொண்டான். "நேற்றைக்கு ஒரு கடிதம் என் விலாசத்துக்கு வந்தது. உறையைப் பிரித்துப் பார்த்தால் உள்ளேயிருந்த கடிதம், குமாரன் உங்களுக்கு எழுதியதாக இருந்தது. நான் பத்து மைல் தூரத்திலிருப்பதால் அதை நேரில் தங்களிடமே கொடுத்து விட்டுத் தங்களை அறிமுகம் செய்து கொண்டு போகலாம் என்று வந்தேன்!" என்று கடிதத்தை நீட்டினான்.

கந்தசாமி கடிதத்தை வாங்கிக் கொண்டார். அப்பொழுது குமாரன் தேள் கொட்டியவன் போல், திடீரென்று, "வேணு! அப்படியானால் நாம் எடுத்துக் கொண்ட 'பான்ஸி டிரஸ்' (வேடிக்கை வேஷப்) போட்டோ உனக்கு வந்து சேரவில்லையா!" என்று கேட்டான்.

"இல்லையே!" என்றான்.

"அது என்னிடம் வந்திருக்கிறது. இதோ இருக்கிறது பாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே கந்தசாமி தமக்கு வந்த கடிதத்தையும் போட்டோவையும் எடுத்துக் கொடுத்தார் சிரித்துக்கொண்டே!

இப்பொழுது குமாரனுக்குத் தன் தாத்தாவின் கோபத்தின் காரணமும், தன்னை அவர் அவசரமாக வரவழைத்ததின் நோக்கமும் புரிந்து விட்டன. விழுந்து விழுந்து சிரித்தான்.

"ஏன் தாத்தா, என்னை அவ்வளவு மோசமாகத் தானே நினைத்து விட்டீர்கள்!" என்று கேட்டான்.

"உன் சிநேகிதர் வேணு பெண் வேஷத்தில் எவ்வளவு அழகாக இருக்கிறார். ஆண் என்று தவறிக்கூட நினைக்க முடியாதே! இவ்வளவு அழகைப் பார்த்துவிட்டு, கெட்டுப் போகாமல் நீ இருப்பாய் என்று எப்படி நான் நம்புவது!" என்றார் கந்தசாமி புன்னகை செய்து கொண்டே.

"அது சரி தாத்தா! இந்தப் போட்டோவுடன் ஒரு கடிதம் எழுதியிருந்தேனே. அதில் இருந்து கூடவா 'இது வேஷம்; இவன் ஆண்' என்று கண்டு கொள்ள முடியவில்லை!" என்று கேட்டான் குமாரன்.

"அந்தக் கடிதம் காதலன் காதலிக்கு எழுதியது போலிருக்கிறதே தவிர இரண்டு ஆடவர்கள் எழுதிக் கொள்வதுபோல் இல்லையே!" என்றார் கந்தசாமி.

குமாரனுக்கும் வேணுவுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

"ஏன் தாத்தா 'டியர் பிரெண்ட்' என்று ஆரம்பித்திருப்பேனே! அதிலிருந்து கூடவா கண்டு கொள்ள முடியவில்லை!"


"'பிரெண்ட்' என்றால் ஆங்கிலத்தில் ஆண் பெண் இருவருக்கும்தான் உதவுகிறது. இதிலிருந்து என்ன கண்டு பிடிக்க முடியும்!"

"அதுதான் தாத்தா, இங்கிலீஷ் கூடாது என்கிறது. தமிழில் எழுதியிருந்தால் இவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டிராது! நீங்கள் இனிமேல் எவ்வளவு சொன்னாலும் கேட்கப் போவதில்லை. உங்களுக்குத் தமிழில்தான் எழுதப் போகிறேன்!" என்றான்.

"நான் கூட இங்கிலீஷ் மோகத்தை விட்டு விட்டேனே! இனி தமிழில்தான் எழுதப் போகிறேன்!" என்றார் கந்தசாமி.

உஷா சொல்லுகிறாள்!

"பெண்மணிகள் தங்கள் எழிலை எடுத்துக் காட்ட கண்களுக்கு மை தீட்டிக் கொள்கிறார்கள். நெற்றிக்குச் சாந்து (திலகம்) இட்டுக் கொள்கிறார்கள். இந்தப் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பாரத தேசத்தில் மிக மிகப் பண்டைய காலத்திலிருந்தே அனுஷ்டிக்கப்பட்டு வரும் பழக்கமாகும்.



"கண்களில் எதைப் போடுவதென்றாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமல்லவா! அதற்கு, சாஸ்திரீய முறையில் "ஐடெக்ஸ்" (EYETEX) என்ற பெயருடன் கண் மை வெகுகாலமாக அரவிந்த் லாபரட்டரீஸாரால் தயாரிக்கப் பெற்று, அதைப் பெண்மணிகள் உபயோகித்து வருகிறார்கள். ஏன், புருஷமணிகள் கூடச் சிலர் உபயோகித்து வருகிறார்கள்.

"தற்போது நெற்றியில் இட்டுக் கொள்ள இந்தியாவிலேயே முதன் முதலாக "அரவிந்த் பிந்தி" (ARAVIND BINDI) குங்கும சாந்து என்ற பெயருடன் அஜந்தா சித்திரங்களில் தீட்டப்பட்டிருக்கும் கவர்ச்சிகரமான ஆறு பிரசித்தி பெற்ற வர்ணங்களான ரோஸ், பச்சை, வயலெட், ரோஸ்ரெட் (கடும் சிவப்பு) கறுப்பு, மஜந்தா (வாடாமல்லி) முதலிய ஆறு தனித்தனிக் கலர்களில் மனதைக் கவரும்படியான வாசனையுடன், எங்கும் விற்கப்படுகிறது. இதை நான் வெகு காலமாக உபயோகித்து வருகிறேன்."

உஷாதேவி



குறிப்பு:—நாங்கள் "ஐடெக்ஸ்" கண் மை, ஒரு சைஸில் தான் தயாரிக்கிறோம். (சின்னது, பெரியது கிடையாது). அதே மாதிரி எங்கள் அரவிந்த் பிந்தி குங்கும சாந்தும் ஒரு அவுன்ஸ், அரை அவுன்ஸ் புட்டிகளில் கீழ்க் காணும் டிசைன்களில்தான் விற்கப்படுகின்றன. மற்றவை எல்லாம் போலிகளே. அவைகள் எங்கள் தயாரிப்புகள் அல்ல. கடைகளில் வாங்கும்போது கண் மை, சாந்து என்று மட்டும் கேளாமல் "ஐடெக்ஸ்" கண் மை, "அரவிந்த் பிந்தி" சாந்து என்று கேட்டு வாங்குங்கள்.

மட்டமான போலிகளை வாங்காதீர்கள்

தயாரித்து விநியோகிப்பவர்கள்:

அரவிந்த் லாபரட்டரீஸ்

ஆற்காடு ரோடு — மதராஸ்-26

வெளியூர் ஏஜண்டுகள்:

கமலா ஸ்டோர்ஸ், மாதுங்கா, பம்பாய்-19 * ஜெனரல் டிரேடர்ஸ், சாஸ்த்ரபேட், பூனா * ராஜாபாய் அம்மாள், சுக்ரா ஹவுஸ், நாக்பூர் * சௌத் இந்தியன் ஸ்டோர்ஸ், ஐஸ் பாக்டரி பில்டிங்ஸ், ஜாம்ஷெட்பூர் * வெங்கடேசன் & கோ., கல்கத்தா-26 * மனோன்மணி விலாஸ் புக் டெப்போ கோலாலம்பூர், மலேயா * செட்டியார் & கம்பெனி, முரேஷியஸ் (ஆப்பிரிக்கா) * மதுரம் ஸ்டோர்ஸ், 96, பேர்டு ரோடு, புது டில்லி * ராஜன் ஸ்டோர்ஸ், 41, சைனா பஜார், திருச்சி

நாடக மேடை

பார்த்திபன் கனவு

காந்தன்

பேராசிரியர் "கல்கி" அவர்கள் எழுதிய "பார்த்திபன் கனவு" நவீனத்தை நாடகமாக நடிக்கப் போகிறார்கள் என்று அறிந்ததும் நான் ஒரு புறம் மகிழ்ச்சியும் ஒருபுறம் சந்தேகமும் கொண்டேன். மகிழ்ச்சி உண்டானதற்குக் காரணம் சொல்ல வேண்டியதில்லை யென்றாலும், சந்தேகம் உண்டானதற்குக் காரணம் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. அவ்வளவு பெரிய கதையை, தமிழ் மக்கள் பேரார்வத்தோடு படித்த கதையைச் சுவை குன்றாமல் நாடகமாக்கி, அலுப்பு ஏற்படாமல் நடிக்க வேண்டுமே! இது எப்படிச் சாத்தியமாகும் என்ற எண்ணம்தான் என்னுடைய சந்தேகத்துக்குக் காரணம்.

பேராசிரியர் "கல்கி" அவர்களுக்கு இலக்கிய உலகில் பெரும் புகழ் தேடித் தந்த சரித்திர நவீனங்களுள் "பார்த்திபன் கனவு" முதன்மையானது. "கல்கி" பத்திரிகையின் ஆரம்ப காலத்தில் பேராசிரியர் அவர்கள் "பார்த்திபன் கனவு" கதையைத் தொடர்கதையாக எழுதினார். அது தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் தனிப் பெருமையோடு பவனி வந்தது; தமிழ் மக்களின் இதயங்களிலெல்லாம் இன்பக் கனவாக இனித்தது; அடுத்த இதழில் என்ன வரும் என்று குன்றாத ஆர்வத்தோடு காத்திருந்து படிக்கச் செய்தது.

அத்தகைய கதையை நாடகமாக நடிக்கப் புகுந்தவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா! ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்ஸ் குழுவினர் "பார்த்திபன் கனவு" நாடகத்தை மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் சென்ற வாரம் நடித்தார்கள்.

'அமெச்சூர்' என்ற வார்த்தையை முன்னால் சேர்த்து விடுவதனால் கலைஞர்கள் கவலையின்றியிருக்க முடிகிறது. கார் ஓட்டக் கற்றுக் கொண்டு புதிதாக 'லைஸென்ஸ்' வாங்கியவன் தான் 'கற்றுக் குட்டி' என்பதைக் குறிக்க, காரின் முன்னால் 'எல் போர்டு' போட்டுக் கொள்வதனால் அவனுக்குப் பெரிய கவலை நீங்கி விடுகிறது. அது மாதிரி தான் இதுவும். 'அமெச்சூர்' என்ற வார்த்தையைப் பார்த்து விட்டால் கடும் 'கிரிடிக்'குகள் கூட மிகவும் தாட்சண்யத்தோடு நாடகம் பார்ப்பார்கள். மேலும் தொழில் நடிகர்களுக்கு இருக்கும் பல சௌகரியங்கள் 'அமெச்சூர்' நடிகர்களுக்கு என்றுமே இருக்க முடியாது.

ஒரு நாடகம் நடத்து முன்பு சீன்களும், உடைகளும், மற்றும் நாடகத்துக்குத் தேவையான பல பொருள்களையும் சேகரித்து, தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.


சமூக நாடகம் நடத்துவதாயிருந்தால் மிகவும் சௌகரியம். 'மேக்கப்' அதிகம் தேவையில்லை. ஆபீஸுக்குப் போகிற உடையுடனேயே மேடையில் தோன்றலாம்.

சரித்திர நாடகமானால் சிரமம் ரொம்ப அதிகம். ஹார கேயூர கடக கங்கணங்களும், கிரீடங்களும், வாகு வலயங்களும், வேல்களும், வாள்களும் சிங்காசனங்களும் தயாரிக்க வேண்டும். இந் நாடகத்தில் அவை அற்புதமாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நாடகத்தில் வேஷம் தாங்கியிருப்பவர்கள் எல்லோரும் டாக்டர், எஞ்ஜினீயர் முதலிய பல துறைகளில் சிறப்பாகத் தொண்டாற்றுகிறவர்கள். அவர்கள் நாடகத் தொழில் நிபுணர்களைப் போல அவ்வளவு திறமையோடு நடிப்பது அரிய செயல் இல்லையா!

பல்லவ சாம்ராஜ்யத்துக்குக் கப்பம் கட்டி, கை கட்டி வாழும் நிலையில் ஒடுங்கிக் கிடந்த சோழ நாட்டின் பெருமையை உயர்த்த, பார்த்திப சோழன் மலையை எதிர்த்து நிற்கும் மத்த கஜத்தைப் போல மாமல்ல சக்கரவர்த்தியின் மாபெரும் சைன்யத்தை எதிர்த்து, போர் புரிந்து வீர சொர்க்கம் புகுந்தான். சோழ அரசு தனியரசாகத் திகழ வேண்டும், சுதந்திரப் பேரரசாக விளங்க வேண்டும் என்று அவன் கண்ட கனவு பூர்த்தியான அதிசயத்தைக் கூறும் அற்புதக் கதைதான் "பார்த்திபன் கனவு." மரண வாசலில் நின்று கொண்டு மகா வீரனை பார்த்திப மன்னன் செய்து கொண்ட கோரிக்கையை ஒரு மகா புருஷர் எப்படிச் சாதித்தார் என்பதை விரித்து உரைக்கும் விந்தைக் கதைதான் "பார்த்திபன் கனவு." பார்த்திபன் கனவைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை ஏற்று, இக் கதைக்கு விறுவிறுப்பை ஏற்றி, அமர காவியமாகத் திகழ வைத்த மாமல்லரின் வீர இதயத்தில் பொங்கிப் பெருக்கெடுத்த மனிதப் பண்பின் மாபெரும் சக்திதான் இக் கதைக்கு ஆதார கருதி. அந்த ஆதார கருதியின் வேகத்தில் இக் கதையில் வரும் பாத்திரங்கள்

காவேரிக்கரை தோணித்துறையில் மாரப்ப பூபதியும் பொன்னனும்.



யாவும் சுழலுகின்றன. அச் சுழற்சியில் இன்பம், துன்பம், காதல், வீரம், அன்பு, போர், சதி, பொறாமை, புயல் யாவும் உருவாகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்க்த கதையை நாடகமாக்கி நடிக்கிறார்கள் என்றால் அதை மகத்தான சாதனை என்றே கூற வேண்டும்.

பேராசிரியர் கல்கி அவர்களின் வசனங்களை வைத்துக் கொண்டே ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள் அழகாக இக்கதையை நாடகமாக்கியிருக்கிறார்.

இந்நாடகத்தை 'டைரக்ட்' செய்யும் (சொல்லிக் கொடுக்கும்) பொறுப்பை ஏற்று மிகவும் திறமையாகச் செய்திருப்பவர் டாக்டர் வி. ராமமூர்த்தி அவர்கள். ஸ்ரீ ராமமூர்த்தியின் முயற்சி இல்லை என்றால் இந்த நாடகம் இல்லை என்றே சொல்லலாம். அவர் டைரக்ஷனோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அவரே முக்கியமான பாத்திரத்தை ஏற்று, சக்கைப் போடு போடுகிறார்.

"பார்த்திபன் கனவு" கதையில் வில்லனாக வரும் மாரப்ப பூபதி ஒரு சதிகாரன். சோழர் குல திலகமான விக்கிரமனையும், பல்லவ குல விளக்கான குந்தவியையும் பலவித இடுக்கண்களை விளைவித்து, ஒன்று சேர வொட்டாமல் தடுத்துக் கலகம் விளைவித்தவன்.

அந்தக் கஷ்டமான பாத்திரத்தை ஏற்று டாக்டர் ராமமூர்த்தி பிரமாதமாக நடித்தார்.

இவ்வளவும் போதாக் குறைக்கு, அவர் நாடக மேடையில், பின்னால் இருந்து கொண்டு ஒவ்வொரு நடிகரையும் 'டைரக்ட்' செய்து நாடகத்தின் உறுதுணையாக விளங்குவது மிகவும் பாராட்டுக் குரியது.

மாமல்ல நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் பாத்திரம் இந் நாடகத்தில் மிகவும் சிரமமானது; கம்பீரமானது; ராஜ தந்திரமும் சூழ்ச்சித் திறனும் கொண்டது. அந்தப் பாத்திரத்தை டாக்டர் வி. ராகவாச்சாரி ஏற்றுத் திறமையாக நடிக்கிறார். சிவனடியாராக வந்து சாந்த சொரூபியாகத் தோற்றமளித்த டாக்டர் ராகவாச்சாரியார், பல்லவ சிம்மாசனத்தில் அமர்ந்து ராஜ்யம் நடத்தும்போது முற்றிலும் வேறு மனிதராகத் தோற்ற மளிக்கிறார். ஆஜானுபாகுவான அவரது தோற்றம், நிதானமான பேச்சு யாவும் பாத்திரப் பொருத்தத்தை அளித்து விடுகின்றன.

சோழ ராஜகுமாரன் விக்கிரமனாக வந்த சுந்தர தேசிகன் தம் பாத்திரத்துக்கு ஏற்றபடி நடித்தார். குந்தவியாக நடித்த என்ஜினியர் ராமமூர்த்தியும் நல்ல பெயர் வாங்கி விட்டார்.

இந் நாடகத்தில் பெண்மணியாக நடித்த இன்னொரு ஆண்மணியைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஒடக்காரப் பொன்னன் மனைவி வள்ளியாக நடித்த நாகராஜனைத்தான் குறிப்பிடுகிறேன். அவரும் இயல்பாக நடித்துப் பிரமாதப் படுத்தினார். ஒடக்காரப் பொன்னனாக உணர்ச்சியுடன் நடித்த வி. வரதராஜன் பாராட்டுக்குரியவர்.



மாமல்லபுரம் கடற்கரையில் ரத்தின வியாபாரி விக்கிரமனும், ராஜகுமாரி குந்தவியும்.


இந்நாடகத்துக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் சீன்களைப் பற்றி அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். மாமல்லபுரம் கடற்கரை, கபால பைரவர் குகை, பார்த்திப சோழன் தர்பார் முதலிய காட்சி ஜோடனைகளெல்லாம் தத்ரூபமாக இருந்தன; ஏராளமான பொருள் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியமாக, இந்த நாடகத்தைப் பற்றி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. இந்த நாடகக் குழுவினர் தொழில் நடிகர்களல்ல. நாடகத்தின் வரும் தொகை அவ்வளவும் நாட்டின் சேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பெயரால் நிறுவப்பட்டு, துன்புற்றவர்களின் துயரத்தைக் களைந்தும், அன்போடு ஆசிரமத்தை யடைந்தவரை அரவணைத்து ஆதரித்தும், அற்றோர்க்கு அரணாகவும், உற்றோர்க்கு உறவாகவும் விளங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைப் பற்றி விசேஷமாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை.


தொண்டு வாழ்வின் உன்னதத்தை உலக மக்களுக் கெல்லாம் எடுத்துப் பறைசாற்றி வரும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் செய்யும் செயல்கள் யாவும் லட்சியத்தினால் உயர்ந்தவை. அவற்றுள் ஒன்றான இந்நாடகமும் லட்சிய சித்தி என்ற அடிப்படையில் பார்க்கும்போது மிகச் சிறந்து விளங்குகிறது.


ஒடக்காரப் பொன்னன் வீட்டில் சிவனடியாரும் வள்ளியும்.





நாகர்கோவில் ஸ்ரீ பூதலிங்கம் அய்யர் அவர்கள் குமாரன் **ஸ்ரீ கணபதி சர்மா** M. Sc., அவர்களுக்கும், திருவனந்தபுரம் கவர்ன்மெண்ட் செக்ரடேரியட் ஸூப்ரின்டெண்டெண்ட் ஸ்ரீ என். எஸ். ஈஸ்வரன் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி **கனகம்** என்னும் **பார்வதிக்கும்** திருவனந்தபுரம் மணமகள் இல்லத்தில் 2—5—56ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. **வாழ்க, மணமக்கள்!**









ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

30

ஆண்டவனுக்கு பூஜை செலுத்த எந்த நேரம் எந்தக் காலம் என்று திட்டம் வேண்டியதில்லை. அப்படித் திட்டம் போட முடியாது. அவரவருடைய உள்ளத்தின் இயல்பைப் பொறுத்தது. தினசரித் திட்டத்தில் பிரார்த்தனை நேரம் மிக முக்கியமான பகுதி. உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்குவதற்கு வேண்டிய காரியக் கிரமமாகும். அடக்கம் தரும் சாதனமாகும். ஆண்டவனுடைய சித்தமின்றி எதும் நடைபெறாது என்று உணர்வதற்குப் பயன்படும் அப்பியாசமாகும். நாம் எல்லாம் அந்தக் குயவன் கையில் களிமண் என்பதை உணர்வதற்குப் பிரார்த்தனையே வழி. பிரார்த்தனை செய்யும் போது நாம் செய்துவிட்ட குற்றங்களைக் காண்கிறோம். நம்முடைய குறைகளைக் கண்டு கொள்கிறோம். தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். குற்றங்களும் குறைகளும் தீர்ந்து நல்வழியில் நடக்கச் சக்தி அடைய வேண்டிக் கொள்கிறோம்.

சிலருக்கு ஒரு நிமிஷமே போதும். சிலருக்கு இருபத்து நாலு மணி நேரமும் போதாது. சிலர் மனத்தில் எப்போதுமே ஆண்டவன் நினைவு வருகிறது. அத்தகையோருக்கு உடல் உழைப்பே பிரார்த்தனையும் ஆகிவிடும். அவர்கள் வாழ்க்கை முழுதுமே இடையறாத ஒரு ஜபம். வேறு சிலர் வாழ்க்கையெல்லாம் சிற்றின்பத்தில் கழிப்பார்கள். பாவங்கள் செய்வார்கள். சுய நன்மைக்கே பாடுபடுவார்கள். அவர்கள் ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்தனை செலுத்த வேண்டுமானால் நீண்ட நேரம் வேண்டும். பொறுமையோடும் பக்தியோடும் ஆண்டவனைத் தங்கள் உள்ளத்துக்குள் காணும் வரையில் இறைஞ்சி இறைஞ்சி மாசு நீங்குவதற்கு வேண்டிக்கொள்ள வேண்டும். இரண்டும் இல்லாத நம்மைப் போன்ற சாதாரண மக்கள் இவ் இரண்டுக்கும் இடையில் நிற்போம். வாழ்க்கையே பூஜையாகும் என்று நம்பியிருப்பதற்கும் இல்லை. கதியற்ற மகா பாபிகளும் ஆக மாட்டோம். ஆனபடியால் எல்லா மார்க்கங்களிலும் பிரார்த்தனைக்கு என்று சில நேரங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய துரதிருஷ்ட வசத்தினால் திட்டப்படி செலுத்தும் பிரார்த்தனைகள் வெறும் சடங்காகவும், வேஷமாகவும் போய் விட்டன. உள்ளத்தைச் செலுத்தாத பிரார்த்தனை பயனில்லை.

"எனக்கு ஒன்று தா" என்று குறிப்பிட்டு ஆண்டவனைக் கேட்க வேண்டுமானால், அது தாய் தகப்பனோடு பேசும் பாஷையிலேதான் இருக்க வேண்டும். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. 'தருமம் ஓங்க வேண்டும், எல்லா உயிர்களிடத்தும் அறம் பிறழாமல் நான் நடந்து கொள்ள வேண்டும்' என்று ஒருவன் பிரார்த்தனை செய்தால், அதுவே மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்.

[யங் இந்தியா 10—6—26]



அத்தியாயம் 21

வழக்கு விவரங்கள்

இந்த வழக்கைப் பற்றிய விவரங்களை நான் காசிலிங்கத்துக்குக் கூறிக் கொண்டே வரும் போது பலவிதமான உணர்ச்சிகள் என் உள்ளத்தில் போராடின. ஆனால் காசிலிங்கம் சிலையைப் போல் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். நான் பத்மநாபன் கூறியதைச் சொல்லத் தயங்கிச் சற்று நிறுத்தினேன்.

"அதற்குப் பத்மநாபன் என்ன பதில் சொன்னார் தம்பி?" என்று கேட்டார் காசிலிங்கம்.

"பத்மநாபனுடைய தெஞ்சழுத்தம் அவருடைய பதிலிலிருந்து தெரிந்தது. அதுவும் இவர் கூசாமல் சொன்ன பொய்யை நினைத்தால் நீறு பூத்திருக்கும் கோபம் மூண்டு எழுகிறது.

'அவள் என் வீட்டிலிருந்து வைரங்களைத் திருடிக் கொண்டு ராஜாராம் என்கிறவனோடு ஓடிப் போய்விட்டாள். சினிமாவில் வேறு சேர்ந்து விட்டாள். இந்த விவரங்கள் எனக்கு மூன்று வருஷங்கள் கழித்துத்தான் தெரிந்தன. எவனோ ஒருவனுடன் ஓடிப்போன பெண்ணை மறுபடியும் வீட்டில் சேர்த்துக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை' என்றார் பத்மநாபன்.

இந்தச் சமயத்தில் நீதிபதி குறுக்கிட்டு, 'உங்கள் கேள்விகளுக்கும் வழக்குக்கும் சம்பந்தமே இருப்பதாகத் தெரியவில்லையே!' என்று நம்முடைய வக்கீல் நீலகண்டனைக் கேட்டார்.

அதற்கு நீலகண்டன், 'எதிரி ஓடிப் போனதும், பெயரை மாற்றி வைத்துக் கொண்டதும் குற்றவாளி மனப்பான்மையால்தான் என்று பிராஸிக்யூஷனில் கூறினார்கள். அவள் ஓடிப் போனதற்கும் பெயரை மாற்றி வைத்துக் கொண்டதற்கும் ஈசுவரமூர்த்தியை மணந்து கொள்ள விருப்பமில்லாதது தான் காரணம் என்பதை நான் நிரூபிக்க விரும்புகிறேன்' என்றார்.


'நீங்கள் இத்தனை கேள்விகள் கேட்டும் அது நிரூபணமாக வில்லை. அப்படியே இருந்தாலும் குற்றவாளி இந்தக் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்க அதில் ஒன்றும் சான்று இருப்பதாகத் தெரியவில்லை' என்றார் நீதிபதி.

உடனே நீலகண்டன் வேறுவிதமாகக் கேள்வி கேட்டார்:

'கைதியின் வளர்ப்புத் தந்தை அவர் குற்றவாளி என்று உங்களிடம் கூறியதற்கு என்ன ருசு இருக்கிறது?'

'எனக்கு அந்த விஷயங்கள் விவரமாகத் தெரிந்திருப்பதுதான் ருசு' என்று பதிலளித்தார் பத்மநாபன்.

பத்மநாபன் சாட்சியமே இந்து குற்றவாளி என்று நிரூபிக்கப் போதுமானது என்று பலர் எண்ணினார்கள். பத்திரிகை




யில்கூட அவ்வாறு தான் எழுதியிருந்தது" என்று கூறினேன்.

"இந்துமதி வாக்குமூலத்தில் எல்லா விவரங்களையும் எழுதிக் கொடுத்து விட்டாளா?" என்று காசிலிங்கம் என்னைக் கேட்டார்.

"அவளைக் கைது செய்த சமயம் நான் அருகில் இல்லை. அவளை ஏதேதோ கேள்விகள் கேட்டுத் துளைத்திருக்கிறார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவள் பாவம்! வந்தது வரட்டுமென்று உண்மை முழுவதையும் கூறிவிட்டாள். வாக்குமூலத்திலும் சகல விவரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன" என்றேன்.

"அப்படியென்றால்?......"

"நான் கடிதத்தைப் பார்த்து விட்டுப் போனது, அங்கே நான் எதிர்பார்த்தவருக்குப் பதிலாகச் சொக்கையா இருந்தது, அவனைப் பின்னாலிருந்து ஒரு உருவம் வந்து குத்தியது, நான் ஓடிவந்து விட்டது, இத்தனை விவரங்களையும் இந்து எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கிறாள். குற்றம் செய்தது யார் என்பது தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள். தெரியாதென்று கூறி யிருக்கிறாள். இத்தனைக்கும் பிறகு, 'நான் சொக்கையாவைக் கொலை செய்ய



வேண்டுமென்று நினைத்ததே இல்லை. நான் நிரபராதி' என்று கடைசியில் இந்துமதி கூறினால் இன்ஸ்பெக்டர் நம்பி விடுவாரா? 'குற்றம் நடந்த சமயத்தில் அருகிலிருந்ததாக எதிரி ஒப்புக் கொண்டிருக்கிறாள். சந்தர்ப்ப சாட்சியங்கள் எல்லாம் அதற்குப் பொருத்தமாக இருப்பதால் அதை அவள் ஒப்புக் கொண்டே தீரவேண்டியிருக்கிறது. ஆனால் தண்டனைக்குப் பயந்து தான் நிரபராதி என்கிறாள். எதிரி தான் குற்றவாளி என்பதில் சந்தேகமில்லை' என்று இன்ஸ்பெக்டர் கூறுகிறார்."

"பாதிரித் தோட்டத்தில் இந்துமதி யாரைப் பார்க்கப்போனாள் என்று கேட்டார்கள் அல்லவா?"

"ஆமாம்! கேட்டார்கள். அதற்கு அவள் முதலில் பதில் சொல்ல மறுத்து விட்டாள். பின்னால் நான் சாட்சி சொன்னபோது நீலகண்டன் என்னை, 'நீங்கள் பிரதிவாதிக்குப் பாதிரித்

தோட்டத்துக்கு வரும்படி கடிதம் எழுதியதுண்டா?' என்று கேட்டார். நான் 'இல்லை' என்றேன்.

'நீங்கள் ஊருக்குப் போகும் விஷயம் பிரதிவாதிக்குத் தெரியும் அல்லவா?' என்று என்னைக் கேட்டார்.

'தெரியும்' என்றேன்.



நான் பதில் சொல்வதற்குள் பிராஸிக்யூஷன் வக்கீல் எழுந்து 'அவ்வாறு கேள்வி கேட்பது தவறு. சாட்சியை ஒரு அனுமானம் செய்ய இடம் கொடுக்கிறது இந்தக் கேள்வி' என்றார். நீதிபதியும், 'அப்படிச் சாட்சியைக் கேள்வி கேட்கக்கூடாது' என்றார்.

'என்று நீங்கள் அவரைக் கடைசியாகப் பார்த்தீர்கள்?'

'நான் சென்னை புறப்படுவதற்கு முதல் நாள் பார்த்தேன்.'

'பாதிரித் தோட்டத்தில் உங்களை வந்து சந்திக்கும்படி அவரிடம் அன்று நீங்கள் கூறியது உண்மையா?'

'உண்மை.'

'நீங்கள் ஏன் அங்கு போகவில்லை?'

'திருநந்திபுரத்தில் எனக்கும் தங்கபாண்டியனுக்கும் வேறு வேலை இருந்தது. அது நான் எதிர்பார்த்தபடி சீக்கிரம் முடியவில்லை. ஆகவே நான் பாதிரித் தோட்டத்துக்கு வர முடியவில்லை.'

'மறு நாளும் அப்படியே ஆயிற்று?'

'ஆமாம்.'

'ஆகவே பிரதிவாதிக்குப் பாதிரித் தோட்டத்து வரும்படி நீங்கள் எழுதியது போல் கடிதம் வந்தால் அங்கே அவர் செல்வதில் அதிசயம் இல்லையே' என்று கேட்டார் வக்கீல் நீலகண்டன்.

உடனே நீலகண்டன் என்னைப் பார்த்து, 'எதிரிக்கும் இறந்து போனவருக்கும் ஏதாவது விரோதம் இருந்ததா?' என்று கேட்டார்.

'இல்லை' என்றேன்.


'அவ்வளவு உறுதியாக எப்படிச் சொல்லுகிறீர்கள்?'

'விரோதம் இருந்திருந்தால் என்னிடம் இந்துமதி சொல்லாமல் இருந்திருக்க மாட்டாள்.'

'நீங்கள் பொறுப்புள்ள உத்தியோகம் வகித்தவர். உமக்கு மிகவும் நெருங்கியவராக இருந்தபோதிலும் குற்றவாளியைத் தப்புவிக்க முயற்சிப்பீரா?'

'குற்றவாளியென்பது நிச்சயமாகத் தெரிந்தால் தப்புவிக்க மாட்டேன்' என்று கூறினேன்.

உடனே பிராஸிக்யூஷன் வக்கீல் எழுந்து, 'நீங்கள் சென்னைக்குப் புறப்பட்ட பொழுது திரும்பி உடனே வருவதாக இருந்தீர்களா?' என்று கேட்டார்.




பழம்பெரும் தேசபக்தர்

✻ கவியரசர் பாரதியின் பாடலைப் பற்றி நினைப்பதற்கே பயந்து கொண்டிருந்த காலில் மகாகவியின் பாடலைக் கம்பீரமாகப் பாடி காட்டு மக்களின் மனத்தில் தேச பக்தியை ஊட்டி வளர்த்த வீரர் மதுரை திரு ரா. சீனிவாச வரத ஐயங்கார் அவர்கள். சீனிவாச வரத ஐயங்கார் தம் வாழ்நாளிலேயே தேசம் சுதந்திரம்பெற்றதையும், பாரதியின் பாடல் மக்களின் பொதுச் சொத்தானதையும் பார்த்து மகிழும் பாக்கியம் பெற்றவர். இந்தத் தேச பக்தருடைய சஷ்டியப்த பூர்த்தி மே மாதம் பத்தாம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு எண்ணற்ற தேசபக்த சிகாமணிகளிடமிருந்தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்தன. ✻




வஸந்தத்தின்
புத்துணர்ச்சி
உங்களுக்கு
இன்றும்.... என்றும்!
காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த
மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்
கள் உடலில் வஸந்தாள் காலையின் புத்
துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது-
உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சி
யுடனும் மணிக்கணக்காக வைத்திருக்
கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சு
கிறது ... அரிப்பையும் எரிச்சலையும்
தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்
தையும் மென்மையையும் பன்மடங்
காக்குகிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்
ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு
கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது


செல்வம் பெருக நிர்மாணத் திட்டங்கள்




நங்கல் பாரேஜ்
15,00,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் பக்ரா நங்கல் நிர்மாணத் திட்டத்திற்கு உபயோகிக்கப்படும்.



மலம்புழை அணைக்கட்டு
64,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.



துங்கபத்திரா அணைக்கட்டு
2,25,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் இதுவரை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.



கீழ்பவானி அணைக்கட்டு
இத்திட்டத்திற்கு 1,20,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

உறுதியாக நிலைத்து நிற்க

ஏசிசி

சிமெண்டினால் கட்டப்பட்டது

SISTA'S CMH-33/47 TAMIL

'இல்லை. நேரே இங்கிலாந்து செல்வதாக இருந்தேன்.'

'அப்படியிருந்தும் நீங்கள் உங்களுடைய வருங்கால மனைவியிடம் அதைக் கூறி விடைபெற்றுக் கொள்ளாமல் போனீர்களா?'

'நான் அப்படிக் கூறவில்லை. நான் இங்கிலாந்து செல்லும் விஷயம் இந்துவுக்குத் தெரியும். ஆனால் நான் குங்குமத் துறையிலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் காலைதான் பார்த்தேன். அதன் பிறகு ரயிலேறும் வரையில் அவளைச் சந்திக்க முடியாமல் திருநந்திபுரத்தில் வேலை இருந்தது.'

'அப்படி இல்லை என்றும், நீங்கள் விடைபெற்றுக் கொள்ளத் திரும்பி வர மாட்டீர்கள் என்பது எதிரிக்குத் தெரியும் என்றும் நான் கூறுகிறேன். இதை ஒப்புக் கொள்கிறீர்களா?'

நீதிபதியே இங்கு குறுக்கிட்டு, 'நீங்கள் கேட்கும் கேள்வியின் பயன் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை' என்று கூறினார்.

அதற்குப் பிராஸிக்யூஷன் வக்கீல், 'மை லார்ட்! இவர் முதல் நாள் காலையில் இனிமேல் எதிரியைப் பார்க்க வர இயலாது என்று தெரிவித்து விட்டே புறப்பட்டிருக்கிறார் என்றும், எழுதி அனுப்பப்பட்ட கடிதம் இவருடையது அல்ல என்பதை அறிந்தே எதிரி குற்றம் நடந்த ஸ்தலத்துக்குச் சென்றிருக்கிறார் என்றும் நான் கருதுகிறேன்!' என்றார்.

'சரி! மேலே கேளுங்கள்' என்று கூறினார் நீதிபதி.

எனக்கு உடம்பெல்லாம் எரிந்தது.

'எதிரி உமது கையெழுத்தைப் பார்த்ததே இல்லையா?'

'ஒரு தடவை பாட்டு எழுதிக் கொடுத்திருக்கிறேன்.'

'சொக்கையா கடிதம் எழுதியிருந்தால் அது உம்முடைய கையெழுத்தில்லை என்று எதிரிக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லவா?'

அப்போது டிபென்ஸ் வக்கீல் எழுந்து, 'சாட்சி ஒரு விஷயத்தை அனுமானம் செய்ய இடம் கொடுக்கிறது, இந்தக் கேள்வி!' என்று கூறினார்.

அதன்பிறகு என்னை அவர் ஒன்றும் கேட்கவில்லை. ஆனாலும் எனக்கு மனத்தில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. பிராஸிக்யூஷன் வக்கீல் பேச்சு எல்லோர் மனத்திலும் உண்மை என்று தோன்றும்படி அமைந்துவிட்டதோ என்ற பயம் உண்டாயிற்று. இந்துமதி வேண்டுமென்றே அந்த இடத்துக்குப் போனாள் என்பது நான் ஜூரர்கள் மனத்தில் படும் என்று எனக்குத் தோன்றியது.

நீங்களே பாருங்கள். நான் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிறேன். திரும்பி வர இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகும். அவளை மணந்து கொள்வதாக வாக்களித்திருக்கிறேன். அந்தமாதிரி சந்தர்ப்பத்தில் நான் அவளிடம் கட்டாயம் விடைபெற்றுக் கொண்டுதான் போயிருக்க வேண்டும் என்றுதானே தோன்றும். தங்க பாண்டியனுக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருந்தபடியால் நான் இந்துவைப் பார்க்க வரவில்லை என்பது பொருத்தமாக இல்லை அல்லவா? நான் வராதபடியால் முதலிலேயே நான் வர மாட்டேன் என்பது இந்துவுக்கு நிச்சயமாகத் தெரியும் என்றுதான் அனைவரும்



கருதுவார்கள். எனக்கு அதை எண்ணியபோதே தலை சுற்றியது."

"என் தம்பி! அப்படியானால் இந்துமதி என் பிள்ளையாரை அங்கு எடுத்துச் சென்றாள் என்று கேட்டிருக்கலாமே!" என்று கூறினார் காசிலிங்கம்.

"அதைக் கேட்பதற்காகத்தான் வக்கீல் நீலகண்டன் இந்துவைச் சாட்சிக் கூண்டில் ஏற்றி விசாரித்தார். அதிலிருந்து இன்னொரு விபரீதம் முளைத்தது" என்று கூறித் தொடர்ந்தேன்.

"இந்து சாட்சிக் கூண்டில் ஏறி நின்றதும் நியாயஸ்தலம் முழுவதும் அமைதி நிலவியது. அதற்குக் காரணம் அத்தனை துயரத்துக்கு இடையிலும் அவள் முகத்திலுள்ள சௌந்தர்யம் அப்படியே இருக்கிறதே என்ற வியப்



"டான்ஸுக்குப் போகணும். ஒரு பேபி டாக்கி கொண்டா; பேபி டாக்கி இல்லேன்னா ஒரு குமாரி டாக்கியாவது கொண்டா!"

பினலா? அல்லது இத்தனை அழகுள்ள பெண் இப்படி ஒரு குற்றம் செய்தாளா என்ற அதிசயத்தினலா என்று எனக்கு இன்னும் புரியவில்லை. யார் யார் என்ன நினைத்தார்களோ, நான் அறியேன். ஆனல் இந்துவைத் தூக்கிக் கொண்டு எங்கேனும் பறந்து சென்றுவிட வேண்டுமென்ற ஆவேசம் எனக்கு ஏற்பட்டது.

டிபென்ஸ் வக்கீல் இந்துவைக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்: 'பதட்டமில்லாமல் பதில் சொல்லுங்கள், அம்மா! உங்களுக்கு எத்தனை மணி குமாருக்கு இந்தக் கடிதம் வந்தது?'

'மணி நான் பார்க்கவில்லை. இருள் கவிய ஆரம்பித்து விட்டது. கடிதத்தை வாங்கிக்கொண்டு விளக்கருகில் சென்று படித்தது ஞாபகம் இருக்கிறது.'

'கையெழுத்தைக் கவனித்தீர்களா?'

'அதைப் பற்றிய சிந்தனையே எனக்கு எழவில்லை.'

'கடிதத்தைக் கண்டதும் நீங்கள் என்ன செய்தீர்கள்?'

'உடனே பாதிரித் தோட்டத்துக்கு ஓடிச் சென்றேன்.'

'கத்தப் பிள்ளையார் உங்களுடையது என்று சொன்னீர்களே! அதை எப்போது எடுத்துக் கொண்டீர்கள்?'

'அது கடிதம் வந்தபோது என் கையில்தான் இருந்தது. அதை எப்படியாவது அவரிடம் கொடுக்க வேண்டும் என்று கையிலேயே அன்று முழுதும் வைத்துக் கொண்டிருந்தேன்.'

'ரங்கதுரை உங்களிடம் விடை பெற்றுக் கொண்டு போயிருந்தால், அதாவது அந்த இரண்டு நாட்களும் உங்களைச் சந்திக்க மாட்டேனென்று கூறியிருந்தால் நீங்கள் பிள்ளையாரைக் கையில் வைத்துக் கொண்டிருந்திருப்பீர்களா?'

'மாட்டேன்.'

'ரங்கதுரை உங்களைப் பாதிரித் தோட்டத்தில் சந்திக்கும்படி கூறினாரா?'

'ஆம். முதல் நாள் காலையில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்த பொழுது, மாலையில் பாதிரித் தோட்டத்தில் வந்து சந்திக்கும்படி கூறினார்.'

'அன்று நீங்கள் போயிருந்தீர்களா?'

'போயிருந்தேன். ஆனல் அவர் அன்று மாலை வரவில்லை.'

'ஆகவே மறுநாள் கடிதம் வந்ததும் அவர்தான் கட்டாயம் வந்திருப்பார் என்று எண்ணினீர்களா?'

'ஆம்.'

'அங்கே நீங்கள் சென்றதும் என்ன நடந்தது என்று கூற முடியுமா?'

இந்து நிதானமாக நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் தெளிவாகச் சொன்னுள். எனக்கோ அவளுடைய அமைதி தவழும் முகத்தைக் கண்டு அதிசயமாக இருந்தது. இதயம் கசிந்தது.

அது முடிந்ததும் பிராஸிக்யூஷன் வக்கீல் குறுக்குக் கேள்விகள் கேட்டார்.

'ரங்கதுரை என்று கையெழுத்திட்ட கடிதம் வந்ததும் பாதிரித் தோட்டத்துக்குப் போனீர்கள் அல்லவா?'

'ஆமாம்.'

'அப்போது இருட்டும் நேரம் என்றும் கூறினீர்கள் அல்லவா?'

'ஆம்.'

'அந்தமாதிரி இருட்டு வேளையில் ரங்கதுரை உங்களைப் பாதிரித் தோட்டத்துக்குத் தனியே வரச் சொல்லி முன்பின் தெரியாத பையனிடம் கடிதம் எழுதி யனுப்பக்கூடுமென்று நீங்கள் நம்பினீர்களா?'

'நான் எதையுமே அப்போது சிந்தனை செய்யவில்லையே?'

'அவர் உங்களிடம் விடைபெற்றுக் கொண்ட வீட்டுக்குத்தானே நியாயமாக வந்திருக்க வேண்டும்?'

'ஆம்!'

'அவ்வளவு கண்யமான ஒரு வாலிபர் இருட்டிய பிறகு உங்களைப் பாதிரித் தோட்டத்துக்கு வரச் சொல்லி எழுதியிருந்தது உங்களுக்கு விநோதமாகக் கூடப் படவில்லையா?' என்று கேட்டார் பிராஸிக்யூஷன் வக்கீல். இந்து என்ன பதிலளிக்கப் போகிருள் என்பதைக் கோர்ட்டில் கூடியிருந்த அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். (தொடரும்)

பிஞ்சு மனம்

மலையாட்டூர் ராமகிருஷ்ணன்

நான் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த மஞ்சள் நிறக் காலண்டரிலிருந்து ஒரு தாளைக் கிழித்தெறிந்தேன். ஒரு மாதம் ஓடி மறு மாதம் ஆரம்பமாகியிருந்தது. அது ஜூன் மாதம்.

பணக்காரர்களுக்கு ஜூன் மாதம் ஒரு சாதாரண மாதம்தான்; ஜனவரி அக்டோபர் எப்படியோ, அப்படித்தான். மாதத்துக்கு மாதம் அவர்களிடையே வித்தியாசம் கிடையாது. ஆனால் நானோ ஒரு ஏழைக் குமாஸ்தா. பள்ளிக்கூடம் போகும் மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பன். நாற்பது ரூபாய் சம்பளத்தில் குடித்தனம் நடத்தும் குசேல வம்சத்தைச் சேர்ந்தவன்.

எனக்கு இந்த ஜூன் மாதத்தைக் கண்டாலே ஒருவித வெறுப்பு; பயம். காரணம் என்ன! அந்த மாதம் தானே மூடின பள்ளிக்கூடங்கள் திறக்கின்றன!

நான் சொல்வது ஒருவேளை உங்களுக்குப் புரியாமல் இருக்கலாம். புரிகிறதா? புரிந்தால் சரி! புரியாவிட்டாலும் பாதகம் இல்லை. பணக்காரர்களான உங்களுக்கு மூன்று மூன்று குழந்தைகளுக்குப் புதுப் புஸ்தகங்கள் வாங்கிக் கொடுப்பது, புதுப் புது உடைகள் தயாரித்துக் கொடுப்பது இதுபோன்ற விஷயங்களில் உள்ள சிரமம் தெரிந்திருக்க நியாயம் இல்லைதான். ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும்; என்னைப் போல் நாற்பது ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைக் குமாஸ்தாக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

கொடிது, கொடிது! ஜூன் மாதம் மிகக் கொடிது!

வராந்தாவில் 'இசுக்கு' ஏறிக்கிடந்த சாய்வு நாற்காலியில் 'அக்கடா' என்று சாய்ந்தேன். காலண்டர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. நான் நடுநடுங்கி விட்டேன்.



இன்று சம்பள தினம். வசூலாக நாற்பது ரூபாய் கிடைக்கும். அதாவது அறுநூற்று நாற்பது அணாக்கள்! வீட்டு வாடகை கொடுக்க வேண்டும்; கடைச் சாமான்கள் வாங்க வேண்டும், பால் கணக்குத் தீர்க்க வேண்டும். ஹோட்டல் கணக்கையும் ஒருவாறு ஒழிக்க வேண்டும். அப்புறம் குழந்தைகளுக்குப் பாட புஸ்தகங்கள் வாங்க வேண்டும்; சட்டைகள் வேறு தைக்க வேண்டும்.

உம்! அப்பாடா! இருப்பதோ நாற்பது ரூபாய். இருக்கும் செலவோ நானூறுக்கு ஓடுகிறது!

ராஜு ஓட்டமாக ஓடிவந்தான். என் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு 'ஆனை, ஆனை' ஆடத் தொடங்கி விட்டான். அவன் எனது மூன்றாவது பையன். முதல் வகுப்பில் தேறி விட்டான். பிழைத்துக் கிடந்தால் இரண்டாவது வகுப்புக்குப் போக வேண்டும். நான் அவனுடைய சட்டையைக் கவனித்தேன். பெரியதாக இரு பொத்தல்கள் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அது போன வருஷம் தைத்தது. வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் ஒரே சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தால் கிழியாமல் என்ன செய்யும்! இருந்தாலும் சற்று ஜாக்கிரதையாக இருந்திருந்தால், இவ்வளவு கிழிந்திருக்காது. பொத்தல் விழுந்ததுமே தைத்திருந்தால் அது இவ்வளவு பெரிதாகி யிருந்திருக்காது. முன்னெச்சரிக்கையோடு இருந்திருந்தால், இன்னும் கொஞ்ச நாட்கள் உபயோகித்திருக்கலாம். இனி என்ன சொல்லி என்ன பயன்!

ராஜு என் முழங்கால்கள் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். "ஏன், அப்பா! என்னோடு பேசமாட்டேன் என்கிறாய்!" என்று என் தலைமயிரைத் தன் கையினால் வருடியவாறே கேட்டான்.

நான் பதில் சொல்ல வாய் திறப்பதற்கு முன்பாகச் சமையலறையிலிருந்து அழுகுரல் கேட்டது. அது வேணுவினுடைய குரல். வேணு என்னுடைய இரண்டாவது குமாரன்.

"என்னடா அழுகை!" என்று இங்கிருந்தே கத்தினேன்.

உச்ச ஸ்தாயியில் தொடங்கிய அழுகைக் குரல் கொஞ்சம் குறைந்து விட்டது.

"வேணு! இங்கே வாடா!" என்றேன்.

அவன் வரவில்லை. ஆனால் சோமு வந்தான். அவன் என் மூத்த புதல்வன்.

"வேணு ஏன்டா அழுகிறான்!"

"சும்மாத்தான்!"

"சும்மாவா! என்னடா சமாசாரம்! சொல்லா விட்டால்..." நான் அதட்டி உருட்டினேன். என் முகம் குப்பென ரத்தமாகச் சிவந்து விட்டது. ராஜு என் மடிமேல் உட்கார்ந்திருந்தவன் சொல்லாமல் கொள்ளாமல் கீழே இறங்கி விட்டான்.

"அவனுக்கும் சட்டை வேணுமாம்!" சோமு தலைகுனிந்தவாறே பதில் சொன்னான்.

"அதற்கு அழுவானேன்!"

"வந்து..."

"என்னடா வந்து கிந்து..."

"வந்து... இரண்டு சட்டைகள் வேண்டுமாம். இந்த வருஷம் ஹைஸ்கூலுக்குப் போகிறானாம்!"

அதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. வேணு அந்த வருஷம் ஹைஸ்கூலுக்குப் படிக்கப் போகப் போகிறான்



என்பதை நான் மறந்தே விட்டேன். அவனுக்குச் சம்பளப் பணம் வேறு கட்டியாக வேண்டுமே! இந்த வருஷம் சம்பளம் அதிகம் அல்லவா!

வேணு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். நான் எழுந்து சமையலறைக்குள் சென்றேன். அவன் ஒரு மூலையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அழுது அழுது அவன் கண்கள் சிவந்திருந்தன. இமைகள் தடித்திருந்தன. என்னைக் கண்டதும் அவன் பயந்து எழுந்திருந்தான். அவன் முகத்தைப் பார்த்ததும் என் மனம் இளகிவிட்டது. அவனை அதட்டப் போனவன் அதை மறந்து நின்றேன்.

“அழாதேடா, கண்ணு! வேண்டிய சட்டை உனக்குத் தைத்துத் தருகிறேன்!” என்று நான் அவனைச் சமாதானப்படுத்தினேன்.

தருணம் பார்த்துச் சோமுவும் தன் தேவையைத் தெரியப் படுத்தினான். “எனக்கும் சட்டைகள் வேண்டும், அப்பா!”

“உனக்கும் வாங்கித் தருகிறேன்!”

நான் கோபம் தணிந்து சௌஜன்யமாகப் பழகுகிறேன் என்பதைக் கண்டதும் ராஜு என்னிடம் வந்து ஒட்டிக்கொண்டான். “அப்பா! எனக்கும் வேண்டும்!” என்ற வேண்டுகோளையும் விடுத்து வைத்தான்.

“உனக்கு இல்லாமலா!”

குழந்தைகளின் உற்சாகம் கரை கடந்து விட்டது. முற்றத்தில் குதித்து விளையாடத் தொடங்கி விட்டார்கள்.

என் கண்களில் நீர் நிறைந்தது; தொண்டை கரகரத்தது.

எங்கள் பக்கத்து வீட்டில் ஒரு வக்கீல் இருக்கிறார். நல்ல அதிர்ஷ்டசாலி; நல்ல பிராக்டிஸ். குழந்தைச் செல்வத்துக்கும் குறைவில்லை; பொருட் செல்வத்துக்கும் குறைவில்லை. அவருடைய இரண்டு பையன்கள் எங்கள் வீட்டுக்கு விளையாட வருவார்கள். அவர்களுக்குச் சோமு, வேணு வயது இருக்கும்.

அதோ, அவர்களுடைய பந்து எங்கள் வீட்டு முற்றத்துக்கு வந்துவிட்டது. அதை எடுக்க ஓடி வருகிறார்கள். ஆகா! அவர்கள் எத்தனை விலையுயர்ந்த துணிகள் உடுத்தியிருக்கிறார்கள்! மினுக்கும் ஸில்க்குமாக அல்லவா இருக்கிறது! அதிர்ஷ்டக்காரத் தந்தையின் அதிர்ஷ்டக்காரக் குழந்தைகளாயிற்றே! இருக்காதா!

“காப்பியும் டிபனும் ஆறி அவலாகப் போகிறது, பாருங்கள்!” என்று என் மனைவி ஞாபகப் படுத்தினாள்.

காப்பி நன்றாயில்லை. மருந்தாகக் கசந்தது. தோசையும் நன்றாயில்லை. போதிய உளுந்து போட்டிருந்தால் அல்லவா நன்றாயிருப்பதற்கு!

*

மணி கிட்டத்தட்டப் பத்து ஆகி விட்டது. ஆபீஸுக்குப் புறப்பட்டாக வேண்டும். கசங்காமல் கொடியில் போட்டிருந்த ஜுப்பாவை எடுத்தேன். அது தண்ணீரைக் கண்டு ஒரு வாரம் ஆகி விட்டது. அதனால் கொஞ்சம் அழுக்கேறியிருந்தது. வெள்ளைத் துணிகள்

என்றாலே இந்தக் கஷ்டந்தான். எத்தனை நான் ஜாக்கிரதையாக இருந்தாலும் சீக்கிரம் அழுக்குப் பிடித்து விடுகிறது. முதுகுப்புறம் கொஞ்சம் பழுப்பேறி யிருந்தது. வியர்வை தான் காரணமோ, அல்லது தெரியாமல்தான் எங்கேயாவது சாய்ந்து விட்டேனோ, தெரியவில்லை! அதற்காக என்ன செய்வது! இன்றைக்கு அதைக் கொண்டுதான் பொழுதை ஓட்டியாக வேண்டும். டிபன் காரியரை எடுத்துக் கொண்டு காரியாலயத்துக்குப் புறப்பட்டேன்.

காரியாலயத்துக்குச் சென்று சிவப்பு நாடாக் கட்டுக் குவியலில் மூழ்கியவன் எப்படியோ மணியை ஐந்தடிக்கச் செய்து விட்டேன்.

காரியாலயத்திலிருந்து வீட்டுக்குப் புறப்பட்ட பொழுது என் சட்டைப் பையில் நான்கு நோட்டுகளாகப் பத்துப் பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. ஒரு மாதச் சம்பளம்!

நான் கடைத்தெரு வழியாக வந்தேன். குழந்தைகளுக்குத் துணிமணி வாங்க வேண்டும் அல்லவா! அதற்காகத்தான்! முதல் முதலில் கண்ணில் பட்ட கடைக்குள் நுழைந்தேன்.

கடைக்காரன் என்னெதிரே பற்பல ரகத் துணிகளைப் பரப்பினான். சில்க், லினன், பாப்லின், ஷார்க்ஸ்கின்! எல்லாவற்றையும் என்னெதிரே எடுத்துப் போட்டு என்னைப் பரிகாசம் செய்கிறானோ என்று தோன்றியது. ஆமாம், இல்லாவிட்டால் என்னவாம்! என் அழுக்கடைந்த ஜிப்பாவையும் கையில் டிபன் காரியரையும் பார்த்த பிறகும் அவன் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்!

அவன் இன்னொரு ரகத் துணியை என்னெதிரே எடுத்துப் போட்டு, "இது கோட்ஸ்வூல். குழந்தைகளுக்குச் 'செக் பாடர்ன்' தைத்தால் எடுப்பாக இருக்கும்!" என்றான்.

உண்மையில் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. நான் சிரமப்பட்டுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, "இங்கே மலிவு ரகத் துணிகளே கிடையாதா!" என்று கேட்டேன்.

அவன் பழுப்பு நிற மோட்டாத் துணி ஒன்றை எடுத்து என்னெதிரே வீசினான். கடைசியில் நான் வெகு பிரயாசைப்பட்டு மலிவான மோட்டாத் துணி ஒன்றை எடுத்துக் கொண்டேன்.

துணி மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன். வழியில் தான் காணப்பனின் தையற்கடை இருக்கிறது. அவனிடம் அதைத் தைக்கக் கொடுத்துவிட வேண்டும். அவன்தான் எனக்குத் தெரிந்த தையற்காரன். அதிகக் கூலியும் அவன் வாங்கிக் கொள்ள மாட்டான்.

நல்ல வேளையாக காணப்பன் கடையில் இருந்தான். துணிப்பாக்கெட்டைக் கொடுத்து, "இதோ பார், காணப்பா! இது குழந்தைகளுக்கு. நாளைக் காலைக்குள் நீ தைத்துக் கொடுத்து விட வேண்டும். குழந்தைகள் பள்ளிக்கூடம் போவதற்கு உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன். வீட்டுக்கு வந்து அளவு எடுத்துக் கொண்டு போ!" என்றேன்.

"சரிங்க. நீங்க வீட்டுக்குப் போங்க. அதுக்குள்ளே நான் வந்து விடுகிறேன்!" என்றான் காணப்பன்.

நான் வீடு போய்ச் சேரும்பொழுது சந்தியா காலம் ஆகிவிட்டது. குழந்தைகள் உட்கார்ந்து விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் நிறுத்தி விட்டார்கள். எனக்குச் சிரிப்பாக வந்தது.

"சுலோகம் சொல்லுங்கள்! இதோ காணப்பன் வந்துவிடுவான்!" என்றேன். அவர்களின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. உரத்த குரலில் சுலோகம் சொல்லத் தொடங்கி விட்டார்கள். நான் ஜேபியிலிருந்து துணி வாங்கியது போக மீதியிருந்த முப்பது ரூபாயை எடுத்துப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துப் பூட்டினேன்.

பையன்கள் சுலோகம் சொல்வதை முடித்து விட்டு, "அப்பா! துணி எங்கே!" என்று கேட்டார்கள்.

"காணப்பனிடம் தைக்கக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது அளவு எடுக்க வருவான் என்று சொன்னேன் அல்லவா!" என்றேன்.

நான் சொல்லி வாய் மூடுவதற்குள்ளாக காணப்பன் வந்து விட்டான். குழந்தைகளுக்கு அளவும் எடுத்துக் கொண்டான். அவன் திரும்பிப் போகும் பொழுது, "நாளைக்குக் கட்டாயம்



கொண்டு வந்து விடு!" என்று அவனுக்கு ஞாபக மூட்டினேன்.

குழந்தைகள் அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கசமுச வென்று பேசத் தொடங்கி விட்டார்கள். எதைப்பற்றி! தங்கள் சட்டையைப் பற்றித்தான்; கண்களால் காணாத சட்டைத் துணியைப் பற்றித்தான்!

"மணி எட்டாகி விட்டது. சாப்பிட்டு விட்டுத் தூங்குவீர்களா, இப்படியே வம்பு அடித்துக் கொண்டிருப்பீர்களா!" என்று நான் அதட்டியபின்தான் குழந்தைகளின் பேச்சு ஓய்ந்தது.

பொழுது புலர்ந்தது. சூரிய வெளிச்சம் கண்களைக் குத்தாத வரையில் எழுந்திருப்பதையே அறியாத என் பையன்கள் அன்றைக்கென்று கிழக்கு வெளுப்பதற்கு முன்பாகவே எழுந்து உட்கார்ந்திருந்தார்கள். காரணம், சட்டையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு எதுவாய் இருக்க முடியும்! இரவு கனவு கண்டிருந்தால் கூடச் சட்டையைப் பற்றித்தான் கனவு கண்டிருப்பார்கள்! சட்டையைக் காண அவர்களுக்கு அவ்வளவு கொள்ளை ஆசை!

ஒன்பது அடித்தது. குழந்தைகள் பள்ளிக்குப் புறப்படத் தயாரானார்கள். உணவை முடித்துக் கொண்டு கையில் புத்தகங்களை

FZY-36 TAM



Zam-Buk

ஜாம்-பெக்

எக்ஸிமா, மண்டை சரும நோய், சிரங்கு இவைகளுக்கு உடனேயே நிவாரணம் அளிக்கிறது.

விசேஷ பலனளிக்கும் ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக் களிம்பு. ஜாம்-பெக் நோயுற்ற தசை நார்களை சுத்தம் செய்து, எரிச்சலுக்கு இதமளிப்பதுடன், சருமத்திற்கு மறுபடியும் ஆரோக்கியத்தை ஊட்டுகிறது.



ஜாம்-பெக் இதர சரும நோய்களேயும் காயங்களேயும் ஆற்றுவதில் அற்புத சக்தி வாய்ந்தது.

கொழுப்புச் சத்து சேர்க்கப்படாதது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சோல் ஏஜண்டுகள் :

தாதா அண்டு கம்பெனி

86, லைனியப்ப நாயக் தெரு. சென்னை-3

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறியாகும். உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாக இருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும், அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக்கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ளவரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் சென்று விடும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. மேற்படி இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையை குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவது மட்டுமல்லாது உடலுக்கு கஷ்டம் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள், புண்களினாலும், கண் நோய், பல்நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும், நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.


பண்டைக்கால புனுனி வைத்திய முறைகளைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இஞ்செக்ஷன் அல்லது ஒழுங்கீதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்து பல ஆயிரக்கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபால் செலவு இனம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587. கல்கத்தா



சென்னை சென்ட்ரல் ஆர்ட் பிரஸ் உரிமையாளர் ஸ்ரீ எஸ். விஸ்வநாதனின் சகோதரர் குமாரர் ஸ்ரீ பி. ஆர். சுப்பிரமணியன் அவர்களுக்கும், மானாமதுரை அட்வகேட் ஸ்ரீ பால சுப்பிரமணிய அய்யர் அவர்கள் குமாரி சௌ. சரோஜாவுக்கும் மானாமதுரையில் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

அடுக்கி வைத்துக் கொண்டு, தையற்காரனுக்காகக் காத்திருந்தார்கள். இன்னும் புதுச் சட்டை வந்த பாடில்லை.

"காணப்பன் வந்து விட்டான்!" என்று எல்லாரும் ஏக காலத்தில் மகிழ்ச்சி பொங்கக் கூச்சலிட்டார்கள்.

சட்டைப் பாக்கெட்டைக் கொடுத்து விட்டு, காணப்பன் கூலியைப் பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

சோமு மெதுவாக என்னுடைய மேஜைக்கு அருகில் வந்தான்.

"உம். பிரித்துப் பார்!" என்று கூறிப் பாக்கெட்டை அவன் பக்கமாக நகர்த்தினேன்.

ராஜுவும் வேணுவும் மேஜையோடு ஒட்டி நின்றார்கள். சோமு மெதுவாகப் பாக்கெட்டைக் கையில் எடுத்தான். குழந்தைகளின் முகம் மகிழ்ச்சியினால் ரோஜாவாகச் சிவந்தது. அதைக் கண்டு நானும் பெருமிதமுற்றேன்.

சோமு பாக்கெட்டைப் பிரிப்பதற்கு முன்னாலேயே வேணுவும் ராஜுவும் பாய்ந்து சட்டையை வெளியே எடுத்து விட்டார்கள்.

அடுத்த கணம் அவர்களுடைய முகங்களில் கருமை இழையோடியது. முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சி யெல்லாம் மாயமாய் மறைந்தோடியது. யாரும் எதுவும் பேசாமல் பின்னடைந்து நின்றார்கள்.

சோமு தனது பழைய ஓட்டைச் சட்டையையே எடுத்துப் போட்டுக் கொண்டான்.

"பக்கத்து வீட்டுப் பையன்கள் எல்லோரும் எத்தனை நல்ல சட்டை போட்டுக் கொள்கிறார்கள்!" என்று வேணு முணுமுணுத்தான்.

"எனக்கு ஒன்றும் இந்தச் சட்டை வேண்டாம்!"—ராஜு தன் புதுச் சட்டையைச் சுட்டிக்காட்டிக் கர்ஜித்தான்.

நான் வாங்கிய துணி அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இதைவிட விலையுயர்ந்த துணி வாங்குவதற்கு நான் எங்கே போவேன்! எனக்குக் கிடைக்கும் சம்பளம் நாற்பதே ரூபாய்தானே! இந்த வானரங்களுக்கு இது எங்கே தெரியப் போகிறது! நாற்பது ரூபாயைக் கொண்டு குடும்பம் நடத்துவதில் உள்ள சிரமம், அநுபவித்தவர்களுக்கு அல்லவா தெரியும்!

எனக்குச் சோமுவின் மேல் கோபம். அவன் மற்ற இருவர்களையும் போல் சின்னவன் அல்லவே! என் கஷ்டங்களை ஓரளவாவது புரிந்து கொள்ளலாமே! அதற்குப் பதிலாக அவன் தன் கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டு எனக்கு எச்சரிக்கையல்லவா விடுத்து விட்டான்! நீ வாங்கிக் கொடுத்த இந்தப் புதிய சட்டையைக் காட்டிலும் என் பழைய சட்டை எவ்வளவோ மேலானது என்று குத்தியல்லவா காட்டி விட்டான்!


கோபத்தினால் என் உடல் நடுங்கியது. நான் எழுந்து அவனை நெருங்கினேன். எனது கோபாவேசத்தைக் கண்டதும் குழந்தைகள் கதிகலங்கிப் போய் நின்றார்கள். நான் சோமுவின் செவிட்டில் ஓங்கி அறை வைத்தேன். வேணுவின் காதைப் பிடித்துத் திருகினேன். ராஜுவின் தோள்களைப் பிடித்து உலுக்கினேன். அப்பொழுதும் என் ஆத்திரம் அடங்கவில்லை. "உங்களுக்கு இந்தத் துணி பிடிக்கவில்லை. இல்லையா! பேமானிப் பசங்களா! இந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போகிறீர்களா, இல்லை ..." என்று வானம் இடியக் கர்ஜித்தேன்.

அழுத வண்ணமே மூவரும் மேஜையண்டை வந்து புதுச் சட்டைகளை எடுத்துப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் புறப்பட்டார்கள். புதுச் சட்டைகளின் முன்புறம் கண்ணீரினால் நனைந்தது. தெருவிலும் அவர்கள் சிணுங்கல் நிற்கவில்லை.

அவர்கள் சென்றதும் என் கோபமும் சற்றுத் தணிந்தது. பாவம், குழந்தைகள் தானே! அவர்களுக்கு என்ன தெரியும்! பக்கத்து வக்கீல் வீட்டுக் குழந்தைகள் விதம் விதமான சில்க் சட்டைகள் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போகிறார்கள். அதைப் பார்த்துவிட்டு நம் குழந்தைகளும் அதே மாதிரித் துணிக்கு ஆசைப்படுகிறார்கள். நம் கஷ்டத்தை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு எங்கே வயதாகி யிருக்கிறது! இன்னமும் அவர்கள் அறியாக் குழந்தைகள் தானே! இத்தனை வயது ஆகியும் இந்த விஷயம் ஏன் எனக்குத் தெரியவில்லை! பந்தம் பாசம் அற்ற மிருகமாக நடந்து கொண்டு விட்டேனே! என் ரத்தத்திலும் என் மாமிசத்திலும் ஆகிய குழந்தைகளிடமே பேயாக நடந்து கொள்ள என் மனம் எப்படித் துணிந்தது!

என் கண்கள் நனைந்தன; எதிரே சுவரில் மாட்டியிருந்த புகைப்படத்தைக் கண்ணுற்றன. படம் சற்றுப் பழுப்பேறி மங்கிக் காட்சியளித்தது. அது என் தந்தையின் படம்.

என் தந்தையும் ஒரு குமாஸ்தாவாகத்தான் இருந்தார்; எல்லோரையும் போல ஏழைக் குமாஸ்தாவாகத்தான் இருந்தார். காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை அவருக்கு வேலையிருக்கும். சிற்சில சமயம் அதைக் காட்டிலும்கூட அதிகமாயிருக்கும். அப்படிப்பட்ட காலத்தில் வெப்பு நாடாக் கட்டு எங்கள் வீட்டுக்கே வந்து விடும். இரவு விளக்கு வெளிச்சத்தில் வெகு நேரம் வேலை செய்வார். இந்தக் காட்சியை எத்தனையோ தடவைகள் நான் தூங்குவதற்கு முன் கண்டிருக்கிறேன்.



"ஒரு டம்ளர் காப்பி ஒரு டம்ளர் ஜலம் கொண்டு வா! இரண்டையும் தனித்தனியாகக் கொண்டு வா! தெரிஞ்சுதா?"

அப்பா சம்பாதித்ததைக் காட்டிலும் இப்பொழுது நான் அதிகச் சம்பளம் வாங்குகிறேன். அவர் வாங்கியது இருபது ரூபாய். அதைக் கொண்டு ஆறு பேர் வாழ்ந்தோம். அப்பா, அம்மா, மற்றும் நாங்கள் நான்கு பேர் சகோதர சகோதரிகள்.

ஒரு சம்பவம் இப்பொழுதும் எனக்கு நினைவு இருக்கிறது. நான் முதல் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். இதே போல் அப்பொழுதும் ஜூன் மாதம் வந்தது. எந்தப் பிரச்னைகளுக்கு இன்று நான் இலக்காகிக் கொண்டிருக்கிறேனோ, அதே பிரச்னைகளுக்கு என் தந்தையும் இலக்காக வேண்டி வந்தது.

எனக்காகத் தந்தை ஒரு சட்டை தைத்து வந்தார். வெள்ளையான மோட்டாத் துணி. அதில் நீலக்கோடுகள் வேறு. அதைவிட நேர்த்தியான விலையுயர்ந்த துணி வாங்குவதற்கு என் தந்தைக்குச் சக்தியில்லை. ஆனால் எனக்கு அந்த விஷயம் விளங்கினால்தானே! அப்பா வாங்கிக் கொடுத்த அந்தச் சட்டை எனக்குப் பிடிக்கவில்லை.

தந்தையின் ஆபீஸில் ஒரு 'கண்டிஜன்ஸி' சேவகன் இருந்தான். சங்கரன் நாயர் என்று பெயர். எந்த நிமிஷம் வேண்டுமானாலும் சொல்லாமல் கொள்ளாமல் அவனை வேலையிலிருந்து நீக்கலாம். அவனுக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளம். அவன் போட்டுக் கொண்டிருந்த சட்டையும் எனக்கு அப்பா வாங்கிக் கொடுத்திருந்த சட்டையும் ஒன்றாக இருந்தன. சங்கரன் நாயரின் சட்டைதான் உலகத்திலேயே இருப்பதற்குள் மட்டமான சட்டையாக இருக்க வேண்டும் என்பது என் எண்ணம். அப்படிப்பட்ட சட்டையை நான் எப்படி அணிந்து கொள்ள முடியும்!

"இந்தச் சங்கரன் நாயர் சட்டை எனக்கு ஒன்றும் வேண்டாம்!" என்று சொன்னேன்.

அந்தக் காட்சி இன்றும் என் மனக் கண்களுக்கெதிரே, நேற்று முந்தாநாள் நடந்தது போலவே பசுமையாக இருக்கிறது.

என் தந்தை சிறிது நேரம் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. என்னை அடிக்கவும் இல்லை; அந்தச் சட்டையைப் போட்டுக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கவும் இல்லை. என் நினைவு அறிந்து நான் அதை அப்புறம் போட்டுக் கொள்ளவே இல்லை.

அந்தச் சட்டை என் தந்தையின் வாத்ஸல்யத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. இறையும் பாவுமாக ஓடிய அன்புக்கு ஓர் சின்னம். நான் அதைப் போட்டுக் கொள்ள முடியாது என்று மறுத்த பொழுது அவருடைய மனத்துக்கு எத்தகைய துயரம் ஏற்பட்டிருக்கும்! அப்படியும் அப்பா ஆத்திரப்படுவதற்குப் பதிலாக எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கொண்டு விட்டார்!

ஆனால் நான்...

...நான் பொறுக்கவில்லை. மிருகப் பிராயமாக நடந்து கொண்டு விட்டேன். இதை நினைத்த பொழுது என் கண்கள் நீரால் நனைந்தன. நான் அந்தப் புகைப்படத்தைத் தாண்டித் தூரத்தில் போய் நின்றேன். சோமு, வேணு, ராஜு—இம் மூன்று குழந்தைகளின் கண்ணீரின் நினைவு என்னை மேலும் பலவீனப்படுத்தி விட்டது.

இந்தக் குற்றம் மிகப் பெரியது. இதற்குச் சரியான பிராயச் சித்தம் செய்து கொண்டே தீரவேண்டும். என் குழந்தைகளின் கனவு நனவாக வேண்டும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சில்க் சட்டையாவது தைத்துக் கொடுக்க வேண்டும். அதற்காக இந்த மாதம் என்ன செலவானாலும் சரி, வாடகை கொடுக்காமல் இருந்து விடுவது என்றும் கடைக் கணக்கைத் தீர்க்காமல் இருந்து விடுவது என்றும் மனத்துள் முடிவு செய்து கொண்டேன்.

இந்த முடிவுக்கு வந்ததுதான் தாமதம்; நான் ஓடிப் போய்ப் பெட்டியைத் திறந்து மீதியிருந்த முப்பது ரூபாயையும் எடுத்தேன்.

பணத்தைப் பையில் போட்டுக் கொண்டு கடைத் தெருவை நோக்கி நடந்தேன். கடைத் தெருவின் திருப்பத்தில் யாரோ வருவது தெரிந்தது. அட! யார் அது! கேசவப் பிள்ளையல்லவா! அவருக்கு நான் முப்பது ரூபாய் கொடுக்க வேண்டும். ஆறுமாதங்களுக்கு முன்பு அவரிடம் கைமாற்றாக வாங்கியிருந்தேன். எத்தனையோ தவணைகள் கூறித் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்து விட்டேன். இந்தத் தடவை தப்ப முடியாது. பையில் பணத்துடன் அவரெதிரே போய் நின்று எப்படிப் பொய் சொல்லுவது!

"மிஸ்டர்! எத்தனை நாட்களாக நான் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா! நேற்று சம்பளம் கிடைத்து விட்டதல்லவா! நான் பணம் கொடுத்து வெகு நாட்களாகி விட்டன. நீங்கள் இந்தத் தடவை எப்படியும் எனக்குப் பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்! இல்லாவிட்டால் விட முடியாது!" என்றார் கேசவப்பிள்ளை கடுமை தொனிக்க.

நான் வாய் திறக்கவில்லை. நான் வீட்டுக்கு நடையைக் கட்டினேன். கடைத் தெருவுக்குப் போவதென்றால் கையில் காசு வேண்டாமா!

[மலையாளக் கதையின் தமிழாக்கம் :—ரா. வீ.]

இதோ ஒரு சஞ்சீவி மாளிகை!

2

மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு இன்றியமையாத ஆடுமாடுகளின் தோல்களைக் கொடிய நோய்கள் அரித்து விடுவதால் நம் நாட்டுக்கு வருஷந்தோறும் எவ்வளவு மகத்தான நஷ்டம் ஏற்படுகிறது என்பதைச் சென்ற வாரம் பார்த்தோமல்லவா!

இந்தியாவில் உற்பத்தியாகும் தோல்கள் மட்டரகமாக இருப்பதால் மிகக் குறைந்த விலைக்குத்தான் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன என்று இஸாத் நகர் ஆராய்ச்சி நிலைய அதிகாரி கூறினார்.

"இந்தியாவிலிருந்து வருஷாவருஷம் ஐம்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள தோல்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன என்கிறீர்கள். நூறு ரூபாய் பெறுமானமுள்ள தோலை வெளிநாட்டினர் பதினைந்து ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்றால், அந்த இனத்தில் நமக்கு வருஷத்துக்குச் சுமார் முந்நூறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது அல்லவா!" என்று கேட்டேன்.

"நஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும். அதனால் வர்த்தக உலகில் இந்தியாவுக்கு உண்டாகும் கெட்ட பெயரைச் சொல்லுங்கள். இந்தியாவிலிருந்து வரும் சரக்குகள் மட்டரகமாகத்தான் இருக்கும் என்று வெளிநாட்டினர் எண்ணும்படியான நிலைமைக்கு இடம் கொடுத்து விடக் கூடாது அல்லவா!" என்றார் ஆராய்ச்சி அதிகாரி.

"ஆமாம், ஆமாம்" என்று ஆமோதித்தனர் என் சகாக்கள்.

எனவே, ஆடு மாடுகளின் நோய்களைத் தடுத்துத் தோல்கள் உயர்ந்த ரகமாக இருக்கும்படி செய்வதற்கும் இஸாத் நகர் ஆராய்ச்சி நிலையம் பெருதவி புரிந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

* * *

கால்நடைகளின் நோயைத் தீர்ப்பதிலும் உயர்ந்த வகைக் கால்நடைகளின் உற்பத்தியிலும் மிகுந்த கவனம் செலுத்தியுள்ள இஸாத் நகர் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள், மூன்றாவது முக்கிய அம்சமான தீவன விஷயத்திலும் விசேஷ அக்கறை காட்டி வருகிறார்கள்.



கால்நடைகளின் நல்ல வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும், மாடுகள் அதிகப் பால் கொடுப்பதற்கும் சிறந்த தீவனமே அத்தியாவசியமானது. எனவே, இந்தத் துறையிலும் நிலைய அதிகாரிகளின் ஆராய்ச்சி விசேஷ பலனைக் கொடுத்திருக்கிறது. அவர்களுடைய ஆராய்ச்சியின் பலனாக வெளியாகியுள்ள உண்மைகளில் பார்லி, ஓட்ஸ் முதலிய தானியங்களைப் போல் மாங்கொட்டை விதை, சிறந்த புஷ்டிச் சத்து உள்ளது என்பதும் ஒன்று!

மக்கள் மாம்பழங்களைச் சாப்பிட்டு விட்டு, கொட்டைகளைத் தூர எறிந்து விடுகிறார்கள். அவ்விதம் எறிவது தவறு என்பது இஸாத் நகர் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளின் ஆதார பூர்வமான முடிவாகும். அவ்வாறு மாங்கொட்டைகளை எறிவதால் நம் நாட்டுக்கு வருஷந்தோறும் பத்துக் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்!

அவர்களுடைய ஆராய்ச்சியின் பலனாக இது வரையில் யாருக்கும் தெரியாத மேற்படி உண்மை வெளியாகியிருக்கிறது.

மாடுகளின் வளர்ச்சி தடைப்படுவதற்கும் அவை குள்ளமாக இருப்பதற்கும் வைக்கோல் காரணம் என்பதும் அவர்களுடைய கருத்தாகும்! அதாவது தென்னிந்தியாவில் மாடுகளின் தீவன ஜாபிதாவில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் வைக்கோலைச் சிறந்த தீவனங்களில் ஒன்றாக இஸாத் நகர் அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளவில்லை!

இந்தியா சுதந்திரம் பெற்றபின், இஸாத் நகரில், உஷ்ணத்தைத் தாங்க முடியாத பசு மாடுகளுக்குக் குளிர்ச்சி யந்திரம் வைக்கப்பட்ட அறை வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சங்கீதம் கேட்பதால் மாடுகளின் ஆரோக்கியம் அபிவிருத்தி அடைகிறது என்ற உண்மையையும் அவர்கள் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்து, மாடுகள் சங்கீதம் கேட்பதற்கும் வசதி செய்திருக்கிறார்கள்! ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்க வேண்டிய மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்ற பழமொழி எத்தனை பொருத்தமாயிருக்கிறது, பார்த்தீர்களா!

பாரத நாட்டின் சுபிட்சத்துக்குக் கால்நடைகள் அத்தியாவசியமானவை. எனவே, அவைகளின் அபிவிருத்திக்கும் பாதுகாப்புக்கும் வழி வகைகளைக் கண்டு பிடித்து உலகப் புகழ் பெற்றுள்ள இஸாத் நகர் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளின் அதிசயத் தொண்டை நேரில் பார்த்த எங்களுடைய வியப்புக்கு எல்லையே இல்லை!

அடுத்தபடியாக, பரேலியில் உள்ள விவசாயக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்குச் சென்றோம். சர்க்கார் இலாகாக்களுக்குத் தேவையான சகல கருவிகளும் அங்குதான் உற்பத்தியாகின்றன. இவற்றைத் தவிர டிராக்டருக்கு வேண்டிய எல்லாப் பாகங்களையும் அத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்

கிறார்கள். குழாய்க் கிணறுகளுக்குத் தேவையான சாதனங்கள், பெரிய குழாய்கள், இரும்புக் கயிறுகள், கிரேன்கள் போன்ற முக்கிய சாதனங்களும் அங்கு தயார் செய்யப்படுகின்றன. மேற்படி தொழிற்சாலையில் உள்ள ஒரு விசேஷம் என்னவெனில், எந்த இரும்புச் சாதனங்களாயினும், ஆணிகளில்லாமல் உருக்கிப் பொருத்தி விடுகிறார்கள். ஆணிகளுக்குத் துவாரம் செய்யும்போது இரும்புக்குச் சேதம் ஏற்படுகிறதல்லா! அவ்விதம் சேதம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே உருக்கிப் பொருத்தும் முறையைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

அந்தத் தொழிற்சாலையில் அறுநூறு தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள்; மற்ற இடங்களைக் காட்டிலும் அங்குள்ள தொழிலாளர்களுக்கு 25 சத விகிதம் அதிகச் சம்பளம் கொடுக்கப் படுகிறது. இவ்விவரங்களை யெல்லாம் அக்கறையுடனும் பெருமையுடனும் எங்களுக்கு எடுத்துக் கூறிய தொழிற்சாலைத் தலைவரை நாங்கள் மனமார வாழ்த்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

ஒரு பெரிய கட்டடத்துக்கு எதிரில் எங்கள் பஸ் வந்து நின்றது.

" இந்தக் கனவானின் பங்களாவைப் பார்த்து விட்டு வருவோமா!" என்று கேட்டார் ஸ்ரீ கமல குமார்.

" அப்படியே செய்வோம் " என்றனர் எங்கள் கோஷ்டியினர்.

பின்னர்தான், அது இளம் குற்றவாளிகளுக்காக ஏற்பட்ட சிறை என்பது எங்களுக்குத் தெரிய வந்தது!

எனினும், ஸ்ரீ கமல குமார் கூறியதும் ஒரு விதத்தில் உண்மைதான். அது முன்புறத்தில் அழகிய நந்தவனத்துடன் கூடிய ஒரு பங்களாவைப் போலவே காட்சியளித்தது!

சுமார் எழுபது ஆண்டுகளாக அந்தச் சிறை நடந்து வருகிறது என்பதை அறிந்த போது எங்களுக்கு வியப்பாக இருந்தது. நாங்கள் சென்றபோது அந்தச் சிறையில் பத்தொன்பது வயதுக்குட்பட்ட இருநூறு இளைஞர்களுக்கு மேல் இருந்தனர்.

அவர்களில் பத்து வயதுள்ள ஒரு சிறுவன் கொலைக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டவன் என்று சிறை சூபரின்டெண்ட் ஜனாப் அப்துல் ஹமீஸ் அறிவித்தார்!

விதிவசத்தால் குற்றம் புரிந்த சிறுவர்கள், அந்தச் சிறையிலிருந்து தண்டனைக் காலம் முடிந்து வெளி வரும்போது சிறந்த ஒழுக்கம் உள்ளவர்களாக மாறி விடுகின்றனர்!

சிறை அதிகாரிகள் பின்பற்றும் அன்பு வழி அந்த இளம் குற்றவாளிகளின் பிஞ்சு உள்ளத்திலே நற்குணங்களை விதைத்து விடுகின்றது. எனவே, அதைச் சிறை என்று சொல்லுவதைக் காட்டிலும் சீர்திருத்தக் கல்லூரி என்று சொல்லுவதே பொருந்தும்!

அங்குள்ள சகல சிறுவர்களும் காலை ஏழு மணியிலிருந்து பதினொரு மணி வரையில் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லுகின்றனர். பிறகு அவர்கள் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுகின்றனர். எனவே, தண்டனைக் காலம் முடியும்போது அவர்கள் கல்வியறிவும் தொழில் பயிற்சியும் பெற்றவர்களாக வெளியே வருகிறார்கள்.

கைதியாக இருக்கும் ஒவ்வொரு இளைஞனுக்கும் தனி அறை கொடுக்கப்பட்டிருக்கிறது. கைதிகளின் நிர்வாகத்தில் கூட்டுறவு சங்கமும், ஒரு தோட்டமும் நடைபெற்று வருகின்றன. சிறைக்குள் ஹைஸ்கூல், ஆஸ்பத்திரி, விளையாடும் இடங்கள் முதலிய வசதிகளெல்லாம் இருக்கின்றன.


கொலைக்குற்றத்துக்காகத் தண்டனையடைந்த மற்றொரு பையன் சிறைக் கல்வி முடிந்தபின், வெளியே உள்ள கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்கிறான். அவன் யாதொரு காவலுமின்றி வெளியே சென்று வாசித்து விட்டுத் தன் சொந்த வீட்டுக்கு வருவது போல் மாலை சிறைக்கு வந்து விடுகிறான்!

சில இளைஞர்கள் யாதொரு காவலுமின்றிச் சிறைக்கு வெளியே வெகுதூரம் சென்று வேலை செய்து விட்டு மாலை ஒழுங்காகத் திரும்பி வந்து விடுகிறார்கள்.

சிறை இளைஞர்கள் வேலை செய்ததன் மூலம் கைதிகள் நிதியில் ரூ. 12,000 சேர்ந்திருக்கிறது. தண்டனை முடிந்து வெளியே செல்லுவோருக்கு அந்த நிதியிலிருந்து அவர்கள் பங்குத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.

" மேற்படி இளம் கைதிகளில் ஒருவராவது ஒழுங்கு தவறி நடந்ததில்லை. விழா, வேடிக்கை முதலியன பார்ப்பதற்காக வெளியே செல்ல யார் விரும்பினாலும் அவர்களை நாங்கள் தடுப்பதில்லை. அவர்கள் தனியே சென்று குறித்த நேரத்தில் தவறாது திரும்பி வந்து விடுவார்கள்" என்று சிறை சூபரின்டெண்ட் பெருமிதத்துடன் கூறினார்.

என்னைப் பார்த்த வண்ணம், " இவன்தான் ஏழுமலை. தமிழ் நாட்டைச் சேர்ந்த பையன் " என்று கூறி ஓர் இளைஞனைச் சுட்டிக் காட்டினார் சூபரின்டெண்ட்.



எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தமிழ் நாட்டைச் சேர்ந்த பையன் இங்கு வரக் காரணம் என்ன!

"ஏன் அப்பா! இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்!" என்றேன் அவனைப் பார்த்து.

"ஊரிலிருந்து கோபித்துக் கொண்டு வந்து விட்டேன். போன போக்கில் இரந்து விட்டுக் கடைசியாக இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். இங்குள்ள சினிமாக் கொட்டகைக்கு வெளியே நின்று கொண்டிருந்த போது போலீசார் என்னைக் கைதுசெய்து இங்கே கொண்டு வந்து விட்டார்கள். அதிலிருந்து சில வருஷங்களாக இங்கேயே இருக்கிறேன்" என்றான் ஏழுமலை உற்சாகத்துடன்.

ஏழுமலை ஹிந்தியில் நிபுணனாக இருப்பதுடன், ஹிந்திப் பாட்டுகளும் நன்றாகப் பாடுகிறான். அன்று சிறையில் நடந்த கதம்ப நிகழ்ச்சியில் அவனுக்குத்தான் முதல் பரிசு கொடுக்க வேண்டும் என்று என்னுடைய சகாக்கள் கூறினர்.

அச்சிறைக்குள் இளைஞர்களின் பொழுது போக்குக்காக ஓர் அழகான நாடகசாலையும் கட்டியிருக்கிறார்கள். இளைஞர்களில் சிலர் ஆடல், பாடல், நாடகம் முதலியவற்றில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டி எங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டார்கள்.

* * *

மறுநாள் பொழுது விடிந்ததும் காலை ஆகாரம் செய்து விட்டுத் தராய் பண்ணைக்குப் புறப்பட்டோம். தராய் பண்ணை பரீலியிலிருந்து சுமார் நாற்பத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது.

ருஷ்யத் தலைவர் புல்கானினும் குருஷ்சேவும் இந்தியாவுக்கு விஜயம் செய்த போது தராய் பண்ணைக்குச் சென்றார்கள் எனில் அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தராய் பண்ணையில் உள்ள பல பகுதிகளில் கோழிப் பண்ணையும் ஒன்று. நாங்கள் அந்த மாபெரும் கோழிப் பண்ணையைப் பார்வையிடச் சென்றபோது ஒரு அழகான கோழி பெருமிதத்துடன் குறுக்கிலும் நெடுக்கிலும் நடை போட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கோழியின் விசேஷ நடையைக் கண்ட நான் கோழிப் பண்ணைத் தலைவரிடம் அதைப் பற்றி விசாரித்தேன்.

"இதுவா! இந்தக் கோழி கொஞ்ச காலமாக ஒரு தினுசாக இருந்து கொண்டிருக்கிறது. காரணம், சமீபத்தில் ருஷ்யத் தலைவர்கள் இங்கே வந்திருந்தபோது ஸ்ரீ குருஷ்சேவ் இந்தக் கோழியின் அழகைக் கண்டு விட்டு அதைத் தம் கையில் எடுத்துக் கொஞ்சி விட்டுப் போனார். அன்று முதல் இந்தக் கோழி கொஞ்சம் இறுமாப்புடனேயே இருந்து வருகிறது" என்றார்!

* * *

இமய மலையைச் சார்ந்த அடர்ந்த காடுகளை அழித்து, அங்கிருந்த புலிகள், காட்டுப் பன்றிகள், கழுதைப் புலிகள் போன்ற கொடிய விலங்குகளை விரட்டியபின், 1948-ம் வருஷத்தில்தான் தராய் பண்ணை ஆரம்பமாயிற்று. இரண்டு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்ட தராய் பண்ணை பதினாறாயிரம் ஏக்கர்கள் கொண்டதாகும்.


அதில் விவசாயத்துக்காக 10,000 ஏக்கர்களும், பழத் தோட்டத்துக்காக 1000 ஏக்கர்களும், விறகு வெட்டு மரங்களுக்காக 1500 ஏக்கர்களும், ரஸ்தாக்கள், கட்டடங்கள், ஓடைகளுக்காக 1500 ஏக்கர்களும் மேய்ச்சல் புல்வயல்களுக்காக 1000 ஏக்கர்களும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இவற்றைத் தவிர, கால்நடை அபிவிருத்தி, கோழிப் பண்ணை, மீன் குட்டைகள், தேன் கூடுகள் முதலியவற்றுக்காகவும் ஏராளமான ஏக்கர்கள் ஒதுக்கி வைத்து, அவை சம்பந்தமான வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.


அங்கு பால்பண்ணையும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

உயர்ந்த ரக விதைகள், நோயற்று ஆரோக்கியமாக வளர்க்குள்ள கால்நடைகள் இவைகளை, பாரத நாட்டில் தேவையான இடங்களுக்கு அனுப்பி வைப்பதே தராய் பண்ணையின் முக்கிய நோக்கமாகும்.

தராய் பண்ணையில் உற்பத்தியாகும் கரும்பு, கோதுமை, சோள், ஓட்ஸ், நெல், மாம்பழம், ஆரஞ்சு, எலுமிச்சம் பழம், வாழைப்பழம், கொய்யா, திராட்சைப் பழம் முதலியவை மிகப் பிரசித்தமானவை.

அது போலவே, கோழிப் பண்ணை, பால் பண்ணை, உயர்ந்த வகைக் கால்நடைகள் உற்பத்தி முதலிய துறைகளில் தராய் பண்ணை புகழ் பெற்று விளங்குகிறது. விவசாயத்தையும் கால்நடைச் செல்வத்தையும் ஜீவநாடியாகக் கொண்ட பாரத நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்குத் தராய் பண்ணையைப் போன்ற ஸ்தாபனங்கள் எவ்வளவு அத்தியாவசியமானவை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.





ஆனந்த விகடன் அக்கௌண்டண்ட், திரு டி. வி. வைத்தியநாதன் அவர்களின் குமாரர்கள் சிரஞ்சீவி வெங்கடகிருஷ்ணனுக்கும், சிரஞ்சீவி சுவாமிநாதனுக்கும் 27—5—56 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை தியாகராயநகர் வாணி மஹாலில் உபநயனம் சிறப்பாக நடைபெற்றது. அப்போது ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்து இருவர்களை ஆசீர்வதித்தனர்.

தராய் பண்ணையிலிருந்து மாலை நாங்கள் திரும்பி வந்தவுடன், ஒரு காலத்தில் வெள்ளையர்களின் கோட்டையாக விளங்கிய பரிலி ரோட்டரி சங்கத்தில், மேற்படி சங்க அங்கத்தினர்கள் எங்களுக்கு மகத்தான வரவேற்பு அளித்து உபசரித்தார்கள்.

இவ்வாறாக, பரிலியில் உள்ள நவபாரதத்தின் பல்வேறு காட்சிகளையும் பார்த்தபின் பரிலிக்கு 'ஜே' போட்டு விட்டு, அன்றிரவு எங்களுடைய விசேஷ ரயில் வண்டியில் லக்ஷ்மணபுரிக்குப் புறப்பட்டோம்.

* * *

இதோ லக்ஷ்மணபுரி வந்து விட்டது! பாரத நாட்டிலே மிகப் புராதனமான நகரங்களில் லக்ஷ்மணபுரியும் ஒன்று அல்லவா! எனவே, இந்த நகரையும் இங்குள்ள சரித்திரப் புகழ்பெற்ற கட்டடங்களையும் பார்த்த போது எனக்கு உடல் சிலிர்த்தது. அயோத்தி மாநகரை ஆட்சி புரிந்த ஸ்ரீ ராமபிரானின் தம்பி லக்ஷ்மணனால் நிர்மாணிக்கப்பட்ட நகரமாதலால், இதற்கு லக்ஷ்மணபுரி என்ற பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள்.

ஹிந்துக்களின் கோட்டையாக விளங்கிய லக்ஷ்மணபுரி பிற்காலத்தில் இந்தியாவின் மற்றப் பாகங்களைப் போல் மொகலாயர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. அதன் விளைவாக அந்த நகரத்தின் உருவமே மாறலாயிற்று.

அங்குள்ள பல புராதனக் கட்டடங்களும் 1857-ல் அங்கு நிகழ்ந்த கோரமான சுதந்திர யுத்தத்தை உலகத்துக்குப் பறைசாற்றுவது போல் எனக்குத் தோன்றின!

சென்ற மகாயுத்தத்தில் ஹிட்லர் ஸ்டாலின் கிராட் மீது படையெடுத்துச் சென்றபோது, தெருத் தெருவாக, சந்துசந்தாக, வீடு வீடாகப் போர் நடந்ததென்று கேள்விப் பட்டோமல்லவா! அது போலவே 1857-ல் ஆங்கிலேயரிடமிருந்து லக்ஷ்மணபுரியைக் காப்பாற்றுவதற்காக இந்திய தேச பக்தர்கள் தெருத் தெருவாக, சந்து சந்தாக, வீடு வீடாக நின்று போர் புரிந்தனர். அப்போது தேசபக்தர்கள் காட்டிய வீரத்தையும் புரிந்த சாகஸங்களையும் ஆங்கில சரித்திராசிரியர்கள் கூட ஆத்திரத்துடன் குறிப்பிட்டு, அங்கெல்லாம் தேச பக்தர்களின் உதிர வெள்ளம் ஓடியதாகக் கூறியுள்ளனர்.

எனவே லக்ஷ்மணபுரி தெருக்களும் கட்டடங்களும் முதலாவது இந்திய சுதந்திர யுத்த வரலாறுகளைக் கதை கதையாகக் கூறுவது போல் எனக்குத் தோன்றியதில் ஆச்சரியம் என்ன!

அத்தகைய சிந்தனைகளில் லயித்திருந்த என்னைப் பார்த்து, "எல்லோரும் இறங்கி விட்டார்கள். நீங்கள் ஏன் இன்னும் இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்கள்! பஸ்ஸிலிருந்து இறங்க மனம் இல்லையா!" என்று ஸ்ரீ கமலகுமார் கேட்ட போதுதான் என்னுடைய சிந்தனை கலைந்தது.

காலை ஆகாரம் சாப்பிட்டபின் லக்ஷ்மணபுரியில் நாங்கள் சென்ற முதல் இடம் தலைமை ஔஷத ஆராய்ச்சி நிலையம்தான். பாரத நாடு சுதந்திரம் பெற்ற பின் 1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் நேருஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்த நிலையம் ஐந்து ஆண்டுகளுக்குள் சுதந்திர இந்தியாவுக்கே பெருமை யளிக்கக் கூடிய விதத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

இந்த நிலையம் கோமதி நதிக்கரையில் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் சரித்திரப் பிரசித்தமான சத்தர் மன்ஸில் மாளிகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகையில், லக்ஷக்கணக்கான செலவில் ஔஷத ஆராய்ச்சி நிலையத்திற்கான பல மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

சத்தர் மன்ஸில் என்றால் குடை மாளிகை என்று பொருள். அக் கட்டடத்தின் பிரதான சிகரம் ஒரு குடைக்குக் கீழே இருப்பதாலேயே அதற்கு அப் பெயர் வழங்கி வருகிறது.

மொகலாயர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் சத்தர் மன்ஸில் நடனங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் கூத்துகளுக்கும் பெயர்போன இடமாக இருந்தது. மொகலாய மன்னரின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருந்து வந்த அழகிய சத்தர் மன்ஸில் இன்று மானிட வர்க்கத்தின் நோய்களை அகற்றும் சஞ்சீவி மாளிகையாக மாறியிருக்கிறது!

அந்த மாளிகை இராவிடில் ஒரு புதுக் கட்டடத்துக்காகச் சர்க்கார் எழுபது அல்லது எண்பது லட்சம் ரூபாய் செலவு செய்யும்படி நேர்ந்திருக்கும்.

இந்தியாவில் ஔஷத ஆராய்ச்சி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான தகுந்த இடம் எது என்பதைப் பரிசீலனை செய்த கமிட்டியார் பல முக்கிய காரணங்களுக்காக இறுதியில் லக்ஷ்மணபுரியையே தேர்ந்தெடுத்தனர். (தொடரும்)

அன்பின் உருவம்



டி. எஸ். கே.

சிந்தனை செய்து செய்து மண்டையே குழம்பிவிடும் போலிருந்தது. அவளொன்றும் பயங்கரமான செய்தியை எனக்குச் சொல்லி விடவில்லை. 'அடுத்த ஞாயிற்றுக்கிழமை நம் வீட்டுக்கு வாருங்களேன்' என்று அழைக்கத் தான் செய்தாள். அவளுடைய கணவனும் மிகவும் வற்புறுத்தி அழைத்தான். அன்பு கனிந்த அழைப்புதான்; 'ஏதோ சந்தித்து விட்டோமே' என்ற கசப்பில் எழுகிற சம்பிரதாய அழைப்பு அல்ல!

ஆனாலும், என் மனத்தில் அந்தச் சந்திப்பு கிளப்பி விட்டிருந்த சிந்தனைப் புயல் இன்னும் ஓயவில்லை.

இன்று சனிக்கிழமை. நான் ஒப்புக் கொண்டிருந்தபடி நீலாவின் வீட்டுக்குப் போவதாக இருந்தால், காலையில் ஐந்து மணிக்கு அலாரம் வைத்துக் கொண்டால்தான், எட்டு மணிக்காவது அவர்கள் இருக்கும் பேட்டைக்குப் போய்ச் சேரலாம். வழக்கமாகக் காலையில் ஏழு மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயல்பவன் நான்.

அதற்கு முன்பாக எழுந்து என்ன செய்வது, அதுவும், மீனுவும் குழந்தைகளும் இல்லாத இந்தச் சமயத்தில்!

குழந்தைகளுடன் மீனு ஊருக்குச் சென்று ஏறக்குறைய ஒரு மாதம் ஆகிறது. இன்னும் இரண்டு மாதங்கள் சென்றுதான் வருவாள். அதுவரை எனக்குத் தனிமை தான் துணை!

அப்பப்பா! மீனுவும் குழந்தைகளும் இல்லாமல் வீடு எவ்வளவு வெறிச்சென்று ஆகிவிட்டது! இன்னும் சில நாட்கள் சேர்ந்தாற் போல் அவர்களைக் காணாமலிருந்தால் கண்கள் பூத்து விடும்! மீனு சென்ற அன்றிலிருந்தே, மனத்தைச் சூன்யம் சூழ்ந்து கொண்டது. மீனு என்னுடன் பேசக்கூட வேண்டாம்; இந்த வீட்டில் இருந்தாலே போதும்! பரபரவென்று காரியம் செய்து கொண்டு அவள் இங்குமங்கும் நடை பயில்கின்றபோது எழும் மெல்லோசை செவிகளில் விழுந்து கொண்டிருந்தாலே, உள்ளத்துக்கு உவப்புத்தான்.

"டிங்......"

சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பத்தரை ஆகியிருந்தது. சிந்தனையினூடே உறக்கமும் கண்களைக் கவர்ந்து கொண்டு வந்தது.

நாளையதினம் நான், நீலாவின் இல்லத்துக்குப் போவதா, வேண்டாமா!

கடந்த ஒரு வாரமாகக் குடைந்து கொண்டிருந்த கேள்வி கடைசி முறையாகக் கண்முன் வடிவெடுத்தது. சிறிது நேரத்துக்குள் நான் இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்!

நீலா......

எட்டு வருஷங்களுக்குப் பிறகு அவளைப் பார்த்தபோது அவளிடம் என்ன மாறுதலைக் கண்டேன்! அடக்கம் வந்திருந்தது, அவளுக்கு. கண்களில் தீட்சண்யம் தணிந்து தெளிவு பிறந்திருந்தது. நிலத்தில் பலமாக ஊன்றிவிட்ட கொடியின் காம்பீர்யம் அவளிடம் தோன்றியிருந்தது. அந்தக் காலத்தில் காட்டாற்றைப் போன்று காட்சியளித்த அவள், இப்போது பெருக்கெடுத்தோடும் பொன்னியாற்றை நினைவூட்டினாள்......

சே! என்ன அபவித்திரமான சிந்தனை! பரநலமயமான பொன்னியாறு எங்கே! சுயநலமயமான நீலா எங்கே! அருள் சுரக்கும் அன்னையோடு, அரவு உள்ளம் படைத்த அணங்கை ஒப்பிடுவதா!

திடீரென்று என் நெஞ்சத்தில் ஒரு கூக்குரல். "போகாதே, போகாதே!" என்ற ஓலம்!

ஆமாம், நான் நீலாவைப் பார்க்கப் போகக் கூடாதுதான். அவள் அழைப்பை ஏற்றுக் கொண்டு செல்வதால் அவள் செய்த துரோகத்தை மறந்து விடலாமா!

இருக்காது! நீலா அழைப்பு விடுத்தபோது அவள் குரலில் பரிவு கனிந்திருந்ததே! தன் கணவனுக்கு உயர்ந்த மதிப்புத் தோன்றும் வகையில் அல்லவா அறிமுகப்படுத்தினாள்!

எனக்குத் தெரியாத நீலா அல்லவே, அவள்! இரண்டு வருஷங்கள்தான் பழகினோம். ஈராயிரம் ஆண்டுகள் பழகியிருந்தால் பரஸ்பரம் எவ்வளவு புரிந்து கொள்வோமோ, அவ்வளவும் புரிந்து கொண்டோம். கடைசியில்!......

இன்றுவரை எனக்குக் காரணம் தெரியாது!

எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இப்பொழுதாவது அவள் தன் செய்கைக்கு விளக்கம் தருவாளா! அவளாகத் தராவிட்டால் நானாக எப்படிக் கேட்பது! இனி முன்னைப்போல் தனித்துப் பேசுவது சாத்தியமா! அல்லது நியாயந்தான் ஆகுமா!

என் நெஞ்சம் எதற்கோ ஏங்கியது.

கல்லூரி நாட்கள் என்றாலே சிலருக்குக் கசப்பாக இருக்கும். எனக்கோ, கனி போன்று சுவை மிகுந்த நாட்கள்! நிலாவின் கடைக்கண் பார்வை கிடைக்கின்ற திருநாட்களல்லவா, அந்த நாட்கள்!

நான் கல்லூரியில் நான்காவது ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோதுதான் அவள் 'இன்டர்' வகுப்பில் சேர்ந்தாள்.

நாங்கள் முதன் முதலாகச் சந்தித்துக் கொண்ட அந்தச் சம்பவத்தை எண்ணிப் பார்க்கிற பொழுது என் உடல் புல்லரிக்கிறது.

ஒருநாள், கல்லூரிப் புத்தக சாலைக்குள் ஏதோ புத்தகம் எடுப்பதற்காக நுழைந்தேன்.

நான் நுழைந்ததும், "வாருங்கள், ராமன்!" என்று கூறி என்னை அன்போடு வரவேற்றார்.

"வணக்கம், ஸார்!"

"புத்தகம் ஏதேனும் வேண்டுமா!"

"ஆமாம்!"

குறிப்பிட்ட புத்தகத்தின் பெயரைச் சொன்னேன்.

"அடாடா!" என்று தம் கையில் வைத்திருந்த புத்தகத்தை என் முன் காட்டினார். என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"ரொம்ப வந்தனம், ஸார்! எங்கே, இப் புத்தகம் இருக்கிறதோ, இல்லையோ என்ற சந்தேகத்துடன் வந்தேன். நல்ல வேளை, நீங்களே புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது!...நாளைய தினம் 'விவாத அரங்'கில் பங்குகொள்ளப் போகிறேன். இந்தப் புத்தகத்திலிருந்து சில குறிப்புகள் எடுக்க வேண்டும்......"

என் உற்சாகத்தைக் கண்டு அவர் ஏமாற்றமாகச் சிரித்தார்.

"வருந்துகிறேன், ராமன்! உங்களுக்கு இந்தப் புத்தகத்தைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். இதோ நிற்கிறாரே, இவர் உங்களுக்கு முன்பே இந்தப் புத்தகத்தைக் கேட்டிருக்கிறார்..."

அவர் கூறிய பின்புதான் அருகே நின்று கொண்டிருந்த மாணவியைத் திரும்பிப் பார்த்தேன். இளமை துள்ளும் முகம். கண்களில் ஒளி. உடல் முழுவதும் செழுமை!

ஒரு கணத்துக்குப் பின் நான் சமாளித்துக் கொண்டேன்.

"......பாதகமில்லை, ஸார்! அவருக்கே கொடுத்து விடுங்கள்."

"மிஸ்டர்..." குரலின் கனிவு என்னைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

"என்னையா கூப்பிட்டீர்கள்!"

"ஆமாம். புத்தகம் அவசியமாயிருந்தால் நீங்களே எடுத்துச் செல்லுங்கள். உங்களிடமிருந்து நாளைய தினம் விவாதம் முடிந்தபின் பெற்றுக் கொள்கிறேன்..."

நான் சற்றுத் தயங்கினேன்.

"இந்தாருங்கள்..."

புத்தகத்தைக் குனிந்த தலை நிமிராமல் வாங்கிக் கொண்டேன். வாங்கிக் கொண்ட பின் முகத்தை நிமிர்த்தியபோது, அவள் கண்கள் என்மேல் நிலைத்திருந்ததை உணர்ந்தேன்.

'ஏது, சுத்த பத்தாம் பசலி போலிருக்கிறதே!' என்று நினைத்திருப்பாளோ!

"நா...நாளைக்குக் கட்டாயம் தந்து விடுகிறேன்" என்றேன்.

'சரி' என்ற பாவனையில் அவள் அழகாகத் தலையசைத்தாள். என்னுள் ஏனோ தடுமாற்றம்.

"விவாதத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கட்டும்!" என்றாள்.

சட்டென்று திரும்பினேன். அவள் அதரங்களில் தான் என்ன துள்ளல்!

*

அடுத்த நாள்.

விவாதத்தில் வெற்றி என் பக்கம் தான். என் கட்சிக்குச் சாதகமாக நான் கூறிய சில கருத்துக்களுக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் பதில் கூற முடியாமல் திணறிப் போனார்கள்!

நண்பர்களின் வியூகத்திலிருந்து தப்பி வெளியே வந்தபோது, அந்தப் புத்தகம் இன்னும் என் கையிலேயே இருக்கும் நினைவு வந்தது. அந்த மாணவியிடம் கொடுக்க வேண்டுமே, இன்று! 'அவளை எங்கே சந்திப்பது! கல்லூரி முடிந்ததுமே வீட்டுக்குப் போய் விட்டிருப்பாளோ!...அடாடா, அவள் பெயர், வகுப்பு—இவற்றைக் கூட விசாரித்து அறிந்து கொள்ளவில்லையே! நாளைய தினமும் அவளைப் பார்க்க முடியாவிட்டால்...! ஆகா! புத்தகசாலை அதிகாரியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே!"

சிந்தனையுடன் கூட நானும் நடக்கத் தொடங்கினேன்.

"வணக்கம்..."

திரும்பினேன். "நீங்களா!"

"ஆமாம்!"

"இந்தாருங்கள், புத்தகம்! உங்கள் உதவிக்கு மிகுந்த நன்றி."

"நான் ஒன்றும் அப்படிப் பிரமாதமான உதவி செய்துவிட வில்லையே!"

"நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீங்கள் புத்தகத்தைக் கொடுத்ததால்தானே, நான்..."

"...... வெற்றி பெற முடிந்தது!—என்று தானே முடிக்கப் போகிறீர்கள்!"

என் மனத்தில் கிளுகிளுத்தது. அவள்தான் எவ்வளவு கவர்ச்சியாகப் பேசுகிறாள்!

என் சிந்தனை பின் தங்கிவிட்டது. அவள் உடன் நடந்தாள்!



"நேற்று, அவசரத்தில் உங்கள் வகுப்பைக் கூடத் தெரிந்து கொள்ளவில்லை...புத்தகத்தை எப்படிக் கொடுக்கப் போகிறோம் என்று கவலை தோன்றியது..."

"இண்டர், முதல் வருஷம் படிக்கிறேன்..."

"வகுப்பு மட்டும் தெரிந்து என்ன செய்வது!" என்றேன். தலையைக் குனிந்தவாறே ஒரு புறமாகத்திரும்பி, என் கண்களின் வழியே இதயத்தை நோக்கினாள். பின், "என் பெயர், நீலா" என்று கூறி விட்டுக் கீழ் உதட்டை மேல் வரிசைப் பற்களால் அழுத்திக் கொண்டாள்! நாணந்தானோ, என்னமோ!

என் நெஞ்சம் நிறைந்து வழிந்தது!.

★

இதற்குப் பிறகு தான் எத்தனை சந்திப்புகள்! முதல் சந்திப்பிலேயே ஒன்றையொன்று புரிந்து கொண்டு விட்ட இதயங்கள், போகப் போக நெருங்கி இணைந்து இணங்கின.

நீலாவை என் வீட்டுக்கு அழைத்துச் சென்று அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தேன். என் தங்கை சுசீலாவுக்குக் கண்டவுடனேயே நீலாவைப் பிடித்து விட்டது. இருவருக்கும் ஏறக்குறைய சம வயது. ஆறாம் பாரத்துடன் படிப்பை முடித்துக் கொண்டு, அன்னைக்கு உதவியாக இருந்தாள், சுசீலா.

நீலாவுக்கு முதல் ஆண்டுத் தேர்வும், எனக்கு நான்காவது ஆண்டுத் தேர்வும் ஒருவாறு முடிவடைந்து விட்டன.

லீவு நாட்களில்தான் என்ன குதூகலம்! என்ன கொம்மாளம்! நீலாவும் சுசீலாவும் சேர்ந்து என்னைப் பரிகாசம் செய்வதும், நானும் சுசீலாவும் சேர்ந்து நீலாவைக் கேலி செய்வதும், நீலாவும் நானும் கூட்டணி வகுத்துச் சுசீலாவின் வாயைக் கிளறுவதும்...!

நீலாவின் அண்ணா சில சமயங்களில் எங்கள் வேடிக்கைப் பேச்சுகளில் கலந்து கொள்வார். அநேகமாக ஒதுங்கி நின்றே ரசித்து விட்டுப் போய் விடுவார்.

நாட்கள் வெகு வேகமாகச் சென்றன.



பெற்றோர்கள்சும்மா இருப்பார்களா! உற்ற சமயம் வாய்த்த போது மெல்லத் திருமணப் பேச்சைத் துவக்கினார்கள். பேச்சு ஆரம்பமான அன்று மாலை. நீலாவைத் தனியாகச் சந்தித்தேன். என்றுமில்லாத வெட்கம் வந்து விட்டது, அவளுக்கு, அன்றைய தினம்!

"நீலா!"

"உம்!"

"ரொம்பவும் வெட்கப்படுகிறாயே!"

"உம்...!"

"முதலில் சுசீலா கல்யாணம்.பின்புதான்!"

நீலா மெல்லத் தலை நிமிர்ந்தாள். "மாப்பிள்ளை பார்த்து விட்டீர்களா!"

"நீதான் பார்த்துச் சொல்லேன்!"

."... விளையாடுகிறீர்கள்!"

"இல்லை, நீலா! நிஜமாகத்தான் சொல்கிறேன். உன்னால் முடியும். நீ மனசு வைத்தால் நிச்சயம் நடைபெறும்..."

அவள் ஆர்வத்தோடு என்னை ஏறிட்டுப் பார்த்தாள். என் நெஞ்சு படபடத்தது.

"சொல்லி விடட்டுமா!"

"உம்!"

"உன் அண்ணனை எங்கள் வீட்டு மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்புகிறோம்!"

திகைப்பூண்டை மிதித்தவள் போல், பின் வாங்கினாள் அவள்.

"நிஜமாகவா, சொல்கிறீர்கள்!"

"ஏன் நீலா, இவ்வளவு திடுக்கிடுகிறாய்!"

"திடுக்கிடும்படியான செய்தியைத் தானே கூறுகிறீர்கள்..."

எனக்குப் பெருத்த ஏமாற்றம்! தோல்வி தானே கோபத்தின் விதை!

"நீலா, உனக்கு இதில் இஷ்டமில்லையா!"

"ஆமாம். இஷ்டமில்லைதான். என் அண்ணாவே, ஒரு வேளை, இதற்கு ஒப்புக் கொண்டாலும் நான் அனுமதிக்கமாட்டேன்."

"வஞ்சகி!"

காதைப் பொத்திக் கொண்டாள், அவள்.

"தயவு செய்து என்னை நம்புங்கள். உங்கள் சகோதரியின் நல்வாழ்வில் எனக்கும் மிகவும் அக்கறை உண்டு. அவள் வாழ்வில் ஏமாற்ற மடைவதை நான் எப்படிச் சகிக்க முடியும்! அவளது நன்மைக்காகத்தான் கூறுகிறேன்..."

"நீலா! இன்னும் மூடு மந்திரமாகவே பேசிக் கொண்டு போகிறாயே!"

"அப்படிப் பேசுவது அவசியம்."

"அப்படியானால், உன் இஷ்டமின்மைக்குக் காரணத்தையும் விளக்கப் போவதில்லை. கல்யாணம் நடக்க உதவி செய்யப் போவதும் இல்லை. அப்படித்தானே!"

"தவறாக எண்ணுகிறீர்கள். சமயம் வரும் போது நானே உங்களுக்கு..."

"ஹஹ்ஹா! சமயம் வரும்போது நான் உன் அருகில் இருப்பேன் என்பது என்ன நிச்சயம்!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!..."

"புரியாது நீலா, புரியாது! இந்தத் தீர்மானத்தை நன்றாகப் புரிந்து கொள்: என் சகோதரிக்கும் உன் சகோதரனுக்கும் திருமணம் நடக்கா விட்டால், எனக்கும் உனக்கும் பந்தம் ஏற்பட முடியாது!"

நீலா திணறினாள். "இது காதல் பேரமா!"

"இல்லை. இரண்டு குடும்பங்களின் உயர்வுக்கான ஒரு திட்டம்..."

"வாழ்க்கை—விவாத அரங்கு அல்ல!"

"உன்னைப்போன்ற ஒரு மின்மினியைக் கட்டிக் கொண்டால், அது வாழ்க்கையே அல்ல!"

"ஹா!......"

அங்கிருந்து நகர்ந்த நான், எட்டு ஆண்டுகளுக்குப் பின், சென்ற வாரம் தான் அவளைத் தற்செயலாகச் சந்தித்தேன்.

இந்த இடைக் காலத்தில் எவ்வளவோ மாறுதல்கள்! நீலாவின் அன்பை மறந்தவுடனேயே மீனுவின் கரம் பற்றினேன் நான். ஆனால், நீலா அவ்வளவு லகுவில் என்னை மறந்து விடவில்லை. என் கோபத்தைப் போக்குவதற்கும் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கும் எவ்வளவோ முயன்றாள். நான்தான் அவள் விஷயத்தில், என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு விட்டேனே! சுசிலாவுக்கும் வேறு இடத்தில் திருமணம் நடைபெற்றது. நல்ல இடம். கைப்பிடித்த வீட்டில் அமோகமாக ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறாள்!...

திடீரென்று ஒரு எண்ணம் கிளம்பியது.

நீலாவின் சகோதரன் மணந்து கொள்ளாததால், சுசிலாவின் வாழ்வு பாழ்பட்டு விடவில்லையே! இந்தச் செய்தியை நீலாவுக்குக் கூறினால், ஓரளவு அவளைப் பழிக்குப் பழி வாங்கி விட்டதாகாதா!

இதற்காகவாவது நான் அவள் அழைப்பை அவசியம் ஏற்கத்தான் வேண்டும்.

★

"வாருங்கள், வாருங்கள்! நீலாவுக்குப் பயம், நீங்கள் வராமல் ஏமாற்றி விடுவீர்களோ என்று!"— கலகலப்பாக வரவேற்றார், நீலாவின் கணவர்.

"ஹி...ஹி...வருகிறேன் என்று வாக்குக் கொடுத்த பின் வராமல் இருக்கலாமா!" வெளிக்குச் சிரித்துக் கொண்டே கூறினேன். முதல் நாள் இரவு நடந்த மனப் போராட்டம் எனக்கு மட்டும்தானே தெரியும்!

சிற்றுண்டி, காப்பி எல்லாம் கொண்டு வந்து வைத்தாள், நீலா. அவை ருசிகரமாக இருந்தும் கூட என் மனம் அவைகளில் லயிக்கவில்லை. தனிமையில் அவளுடன் பேச ஐந்து நிமிஷமாவது கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தது மனம்!

அச்சமயம் என்னுடைய அதிருஷ்டத்தை என்னவென்று கூறுவேன்!

'ஸார்' என்று வாசலில் குரல் கேட்டது. எழுந்து சென்ற நீலாவின் கணவர், "யாரது! ஓ! நீங்களா! வாருங்கள்!" என்று அழைத்து விட்டு என்னிடம் வந்தார்.

"மிஸ்டர் ராமன்! மன்னிக்க வேண்டும். என் நண்பர் ஒருவர் வந்திருக்கிறார். பத்து நிமிஷம் அவரிடம் வேலையிருக்கிறது. நீங்கள் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு முன் அறைக்கு வருகிறீர்களா!"

நான் தலையை அசைத்தேன். நீலாவுடன் தனியாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்த உற்சாகம் உள்ளத்தில் துள்ளியது.

அவள் கணவர், கூடத்தை விட்டு முன் புறத்து அறைக்குள் நுழைந்தார்.

"நீலா..."

"இன்னொரு இட்டிலி போடட்டுமா!"

"வேண்டாம், வேண்டாம்! உன்னிடம் தனியாகப் பேசத்தான் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! நான் இன்னும் உன் மனத்திலிருந்து..."

"இதோ, வந்து விட்டேன்! அடுப்பில் ஏதோ வைத்தேன். வீணாகி விடப் போகிறது."

சடக்கென்று உள்ளே சென்று விட்டாள். ஐந்து நிமிஷம் சென்று, அவளுடைய நான்கு வயதுப் பையன் மூலம் காப்பி வந்தது. காப்பி அருந்தி விட்டு நான் முன் அறைக்குச் செல்லும் வரை நீலா வெளிப்படவேயில்லை!

அவள் கணவருடன் அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டேன்.

"அதற்குள் புறப்படுகிறீர்களே! சாப்பிட்டு விட்டுப் போகலாம், ஸார்! உங்களுக்கென்று விருந்து தயாரித்துக் கொண்டிருக்கிறாள் அவள்...."

"மிக்க நன்றி, ஸார்! எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது."

"இதோ நீலாவைக் கூப்பிடுகிறேன். அவள் உங்களை அனுமதித்தால் எனக்குச் சிறிதும் ஆட்சேபணை இல்லை!"

நீலா வந்தாள்.

"உணவருந்தி விட்டுப் போகலாமே!"

"இல்லை. எனக்கு அவசர வேலை இருக்கிறது. சொல்லி விட்டோமே என்பதற்காகத்தான் இங்கே வந்தேன்..."

"உங்கள் இஷ்டம்! உங்கள் மனைவியை அழைத்துக் கொண்டு ஒரு முறை வாருங்கள்... சுசிலா சௌக்கியமா!"

"ரொம்ப சௌக்கியம்! நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்!"

"கேட்பதற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது."

"உன் அண்ணன் எங்கேயிருக்கிறார்!"

என் வார்த்தைகள், கரிப்புகை போல அவள் முகத்தில் படிந்தன. அவள் தயங்கினாள். அவள் கணவர்தான் இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளித்தார்.

"அவர் கிராமத்தில் இருக்கிறார்."

"கிராமத்திலா!...உத்தியோகம்!"

"வேலையை விட்டு விட்டார்...அவருக்கு ...ஏதோ வியாதி...பேனா பிடித்து எழுத முடியாதவர்களை வேலையில் வைத்துக் கொள்வார்களா!...எவருக்கும் துன்பமாக இருக்க வேண்டாமென்று கிராமத்தோடு போய் விட்டார்......"

"நம்ப முடியவில்லையே!"

"நம்ப முடியாதுதான்!......பரம்பரையாக வரும் வியாதியாயிற்றே! அவருடைய தாத்தாவுக்கு 'இப்படி' இருந்ததாம். இவருக்கும் வாழ்க்கையில் எப்போதாவது நேரும் என்று..."

என் முகச் சுளிப்பைக் கண்டதும் அவர் பேச்சை நிறுத்தினார்.

"நான் வரட்டுமா!"

நீலா என்னை நிமிர்ந்து நோக்கி, 'சரி'யென்று தலையசைத்தாள். நான் அவள் கண்களை ஊடுருவினேன். அன்பின் தூய்மை உருவம் அவள் அகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததைக் கண்டேன். அந்த உருவத்துக்கு என் சிரம் தானாகத் தலை வணங்கியது.

வீட்டை விட்டு வெளியே வந்தேன். கரைக்க முடியாத பாபம்செய்துவிட்டவனைப் போன்று என் நெஞ்சம் கனத்தது.

க்ளூகோவிட்டா மீண்டும் சக்தி அளிக்கிறது

அன்றாடம் உங்கள் அலுவல்களில் அபரிமிதமான சக்தியைச் செலவழிக்கிறீர்கள்— இந்த சக்தியை ஈடுசெய்தாக வேண்டுவது அவசியம்.

வியாதியை எதிர்த்துப் போராட நீங்கள் ஆரோக்கியமாயும், உடல் வலிமையுடனும் இருக்கவேண்டியதவசியம். உங்கள் தேகத்தில் சக்தி குறைந்திருந்தால், வியாதியை எதிர்த்துநிற்கும் சக்தியும் குறைந்திருக்கும். நீங்கள் களைப்பும் தெம்பற்றதுமான உணர்ச்சி அடைகிறீர்கள். சக்தியை மீண்டும் அடைய மிகச் சிறந்த வழி க்ளூக்கோவிட்டா சாப்பிடுவதேயாகும்.





சூடான அல்லது குளிர்ந்த பானத்துடன் இரண்டு தேக்கரண்டி க்ளூக்கோவிட்டா சேர்த்துப் பருகுவதால், நாள் முழுவதும் விரயமாகும் சக்தியைத் திரும்ப அடைவதுடன், ஓய்வு நேரத்தை உற்சாகமாய் அனுபவிக்க உதவுகிறது. மேலும் ரத்த புஷ்டியை அதிகரிப்பதுடன், தசைகளை வலிவுறுத்தி எப்பொழுதும் உங்களை ஆரோக்கியமாக இருக்கவும் செய்கிறது. க்ளூக்கோவிட்டா ஒரு மருந்தல்ல - உங்கள் ஆகாரத்துடன் உட்கொள்ளும் ஒரு சேர்க்கைப் பொருள்.

காரன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிட்.

பம்பாய் 1 கல்கத்தா 1

— தேவியின் கடிதம்

அழகுபடுத்தும் கலை

— வசுமதிராமசாமி —

அன்புமிக்க சகோதரி சுஜாதா,

வீட்டை அலங்கோலமின்றி எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்வது எவ்வாறு சாத்தியமெனக் கேட்டிருக்கிறாய்.

வீட்டைச் சுத்தமாகவும், அழகாகவும், வைத்துக் கொள்வது ஒரு கலை. எங்கள் குடும்பத்தில் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் வீட்டை நன்றாக வைத்துக் கொள்வதையே தன்னுடைய வாழ்க்கை லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லுகிறேன். மிகைப்படுத்தி நான் சொல்லவில்லை.

வீட்டின் அலங்கோலத்துக்கு அநேக காரணங்கள்—தாம்பத்யக் கலகம், அசிரத்தை, சோம்பேறித்தனம், ஆரோக்கியக் குறைவு, வறுமை, இப்படிப் பலவித காரணங்களால் மனம் பேதப்பட்டு அலங்கோலமாகத் தோற்றம் அளிக்கலாம். இவைகள் ஒன்றுமே இல்லாமல் வசதியான வாழ்க்கை பெற்ற சிலருடைய வீடுகளும் அலங்கோலமாக இருப்பதையும் பார்க்கின்றோம்.

மகா காவியங்களில் மகரிஷிகளுடைய மேதா விலாசத்தைச் சொல்லுமுன் அவர்களுடைய ஆச்ரமத் தோற்றத்தைப் பற்றி வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கும். மரத்தடியில் குடி இருந்தாலும் அதையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேணும்.

ஒரு சிநேகிதிக்கு வசதியான வீடும் இதரப் பொருள்களும் இருக்கின்றன. எப்பொழுது போனாலும் அவளால் வந்தவர்களை வரவேற்க முடியாது. மேஜைமேல் துணி மூட்டை, கட்டில் மேல் வீட்டில் உள்ள சகல சாமான்கள், வீடு முழுவதும் காகிதக் குப்பைகள், ஆங்காங்கு குட்டை குட்டையாக ஜலம், காய்ந்த பழத் தோல் - இப்படியாக இருக்கும். அந்தச் சகோதரி அவசரம் அவசரமாக எல்லாவற்றையும், சீர்ப்படுத்திக் கொண்டே 'இன்று லீவுநாள். குழந்தைகள் படுத்தும் பாடு, யார் யாரோ சாப்பிட வந்தார்கள், இதனால் இப்படி ஆகிவிட்டது' என்று நாம் கேட்டது போல் சொல்லிக் கொண்டு சிரமப்படுவாள்.

ஒரு பெரிய குடும்பத்தில் வீட்டுக்கு யாராவது விருந்தினர்கள், சம்பந்திகள் வந்தால் ஒரு விசித்திர ஏற்பாடு செய்வார்கள். குழந்தைகளிடம் நம்பிக்கை இல்லை. எல்லாக் குழந்தைகளையும் ஒரு அறையில் போட்டு அடைத்து நிறைய விளையாட்டுச் சாமான்களையும் தின்பண்டங்களையும் போட்டு விட்டு அறையை அடைத்துப் பூட்டி விடுவார்களாம். இந்த ஏற்பாடு ஒரு நாள் விபரீதமாய் விட்டது. வந்தவர்கள் குழந்தைகள் எங்கேயெனக் கேட்டிருக்கிறார்கள். வெளியே விளையாடப் போய் விட்டதாகச் சொல்லி விட்டார்கள். உள்ளே அடைக்கப்பட்ட குழந்தைகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கதவை உடைக்க ஆரம்பித்து விட்டார்கள். அதைச் சமாளிக்க முடியாமல் பெரியவர்கள் தோல்வியுற்றார்கள்.

மேனாட்டார் வீட்டை அலங்காரமாக வைத்துக் கொள்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறார்கள். அது அவர்களுடன் பிறந்த நல்ல வழக்கம். மூன்றே மாதங்கள் ஒரு ஊரில் இருந்தாலும் ஒரு சின்னத் தோட்டம் போட்டு, வீட்டுக்குத் தகுந்த சாமான்கள் வாங்கி அழகு பெறச் செய்வார்கள். சாப்பாட்டு அறையில் பாடப் புத்தகமும், படுக்கும் அறையில் வேண்டாத தட்டுமுட்டுச் சாமான்களும் அடைக்க மாட்டார்கள்.

முன் காலத்தைப் போல் பெரிய வீடுகளில் வாழ முடியவில்லை. நகர வாழ்க்கையில் மிகச் சிறிய வீடுகள்தான் கிடைக்கின்றன. பம்பாய் போன்ற நகரங்களில் ஓரிரு அறைகளில் சகோதரிகள் பாங்காகக் குடும்பம் நடத்துகிறார்கள். பம்பாயில் ஒரு சகோதரி தன் வீட்டில் நீள வீணைப் பெட்டிமாதிரி வைத்திருந்தாள். 'வீணை வாசிக்கத் தெரியுமா?' என்று கேட்டேன். "அழுக்குத் துணிகள் போட இம்மாதிரி பெட்டி வாங்கினேன். மேலே உட்காரவும் வசதியாக உபயோகப்படுகிறது" என்றாள். அவளைப் புத்திசாலியென வியந்தேன்.

தற்காலத்தில் மரச்சாமான்கள் பகலில் உட்காரும் சோபாவாகவும் இரவில் படுக்கும் கட்டிலாகவும் மடக்கி வைக்கும்படியாக, எல்லாம் விதவிதமான சாமான்களாகக் கிடைக்கின்றன. நாம் விரும்பினால் வீட்டை நன்றாக அழகு பெறச் செய்ய முடியும். — **பூமாதேவி**



பனி போன்ற இந்த க்ரீம் மூலம்
வசீகரிக்கும் காந்தியுடன் தோன்றுங்கள்

இது உங்கள் சருமத்தை மிருதுவாயும், நேர்த்தியாயும் வைக்கிறது . . . மரு, தழும்பு இவைகளை வெளியே தெரியாமல் மறைக்கிறது




எப்பொழுதும் அழகுடன் விளங்க, குளிர்ந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உபயோகியுங்கள்.
பிரதி காலையிலும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை இலேசாக முகத்தில் தடவுங்கள். சில விநாடிகளில் அது மறைந்து விடுகிறது. ஆனால் உங்கள் மரு, தழும்பு இவைகளை வெளியே தெரியாமல் செய்கிறது. பிறகு உங்கள் முகம் பட்டுப் போன்ற மென்மையுடனும், இயற்கையான கவர்ச்சியுடனும் எப்படி பிரகாசிக்கிறதென்று பாருங்கள்!

பவுடர் முகத்தில் நன்றாகப் படிகிறது!

பவுடர் போட்டுக்கொள்வதற்கு முன்போ அல்லது அலங்காரம் செய்து கொள்ளுவதற்கு முன்போ, எண்ணெய்ப் பசையற்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை முகத்தில் தடவிக் கொள்ளுங்கள். இது உங்கள் சருமத்தை மிருதுப்படுத்தி, முக அலங்காரத்தை நேர்த்தியுடன் அமையச் செய்கிறது. நாள் முழுவதும் அழகுடன் விளங்க, பனிபோன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உபயோகியுங்கள்!

பாண்ட்ஸ்
வானிஷிங் க்ரீம்

P. 2900



கூத்தன் தன் கூத்து

நந்திவர்மனுடைய அரமனை நந்தவனத்தில் ஒரு குயில். அது மிக அழகாகப் பாடும். ராஜகுமாரிக்கு அதன் மேல் மிகப் பிரியம்.

ஒரு நாள் தீபாவளியன்று ஏதோ பிசகு ஏற்பட்டு அரமனையில் நெருப்புப் பற்றிக் கொண்டு பயங்கரமாகப் பரவி விட்டது. ஊரெல்லாம் வந்து கூடி நெருப்பை அணைக்க எல்லாரும் மண்ணும் தண்ணீரும் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நந்தவனத்தில் குயில் தன் பாட்டுக்கு வழக்கம்போல் பாடிக் கொண்டேயிருந்தது. "அரமனை தீப்பற்றியெரிகிறது! இந்தக் குயில் பாடிக் கொண்டிருக்கிறது!" என்று அரமனை அதிகாரி கோபித்துக் கொண்டு ஒரு கல்லை வீசினான். அது பறவைமேல் பட்டு, பறவை கீழே விழுந்து புரண்டு செத்துப் போயிற்று.

தீயை அணைத்து விட்டார்கள். அதிக சேதம் இல்லை. எல்லாரும் சந்தோஷப் பட்டார்கள். ராஜகுமாரி நந்தவனத்துக்கு வந்தாள். குயில் இறந்து கிடப்பதைப் பார்த்தாள். அவளுக்குத் துயரம் பொறுக்க முடியவில்லை. அரசனிடம் அழுதாள்.

அதிகாரி விஷயத்தைச் சொன்னான். ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. "அரமனை யதிகாரியே! குயிலுக்குப் பாடத்தான் தெரியும் என்பது உமக்குத் தெரியவில்லையா? அது வாளியை எடுத்துத் தண்ணீர் மொண்டு வருமா? தீயை அணைக்க அது என்ன செய்ய முடியும்? அதைக் கொன்றீரே!" என்று அரசன் அதிகாரியைக் கண்டித்தான்.

"மன்னனே! தவறு செய்து விட்டேன். குயிலுக்குப் பாடத்தான் தெரியும், தண்ணீர் மொள்ளத் தெரியாது என்பதை என் ராஜபக்தியினால் மறந்து விட்டேன். உங்க







ளிடத்தில் எனக்குள்ள பக்தியினால் அறிவு இழந்தேன்" என்றான்.

"அவரவர்களுக்கு அவரவர்கள் தொழில் தான் தெரியும். குயிலுக்குப் பாடத்தான் தெரியும். அரமனையதிகாரிக்குக் காவல் வேலைதான் தெரியும். எனக்குத் தண்டிக்கத்தான் தெரியும். நீ உன் உடுப்பைக் கழற்றி வைத்து விட்டு வீட்டுக்குப் போகலாம். வேலையிலிருந்து நீக்கப்பட்டாய்" என்றார் பக்கத்திலிருந்த மந்திரி.

"அப்பா! இவரை வேலையிலிருந்து நீக்க வேண்டாம். குயில் செத்தது போதும். இவருடைய வீட்டில் பெண்டு பிள்ளைகள் அழுவார்கள். அது வேண்டாம்" என்று ராஜகுமாரி வேண்டிக் கொண்டாள்.

"உனக்குக் கண்ணீர் விடத்தான் தெரியும்!" என்று அரசன் தன் மகளை எடுத்து அணைத்து முத்தமிட்டான்.

"பார்த்தாயா பார்வதி?" என்றான் பரமசிவன். "உனக்குக் கண்ணீர்விடத் தான்தெரியும் என்கிறான் நந்திவர்மன்தன் மகளைப் பார்த்து — உனக்கும் அதுதானே தொழில்?" இவ்வாறு ஆண்டவன் பார்வதிக்குச் சொல்லிச் சிரித்தான்.

"குற்றங்களை நீர்தானே உண்டாக்குகிறீர்? நீர்தான் பெரும் பிழைக்காரர். பரிவு காட்டவேதான் நான் இருக்கிறேன் அல்லவா?" என்றாள் பகவதி.

"ஆமாம், குயிலே!" என்றான் சிவன்.

"என் கூத்தில் குறையொன்றுமில்லை. தூரத்தில் நின்று பார்ப்பவர்களுக்குக் குறையிருப்பது போல் தோன்றும். அவர்களுக்காக நான் ஆடவில்லையே! உனக்காகத்தானே ஆடுகிறேன்!" என்று சொல்லிப் பிராட்டியை மகிழ்வித்தான்.



நல்ல பையன்!

குல்பு மணி

மாலை நான்கு மணி. பள்ளிக்கூடம் விட்டதும் பாலுவும் கோபுவும் குதித்துக் கொம்மாளமடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தனர்.

வீட்டுக்கு வருகிற வழியில் ஒரு அழகிய தோட்டம் இருந்தது. சுவருக்கு வெளியே கொய்யாச் செடி படர்ந்து வளர்ந்து கொத்துக் கொத்தாகப் பழங்களுடன் வருகிறவர்களையெல்லாம் கவர்ந்தது. அதன் மணம் மூக்கைத் துளைத்தது. அவ்விரு சிறுவர்களுக்கும் கொய்யாப் பழத்தைக் கண்டதும் நாக்கில் ஜலம் ஊறியது.

பெரியவனான பாலு, "டேய்! கொய்யாப்பழம் ரொம்ப ஜோரா பழுத்திருக்கு. பறித்துச் சாப்பிடலாமாடா? தோட்டத்திலும் யாரும் இருப்பதாகத் தெரியல்லே!" என்றான்.

"டேய்! இன்னொருத்தர் பொருளை அபகரித்தால் கடவுள் கஷ்டத்தைக் கொடுப்பார்!" என்றான் கோபு.



"ஆமாம்! நாம் பழம் பறிக்கிறது ஒன்றும் அவருக்குத் தெரிஞ்சுடாது!" என்றுகூறிச் சுவரின் மேல் ஏறிக் கொய்யாப் பழம் ஒன்றைப் பறிக்கத் தொடங்கினான் பாலு. என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிஷம் 'ஹோ' என்று பலமாகக்கத்திக் கொண்டே பாலு கீழே குதித்தான்.

"என்ன! என்ன!" என்று கூவியபடி அருகிலே நெருங்கினான் கோபு.

"டேய்! பழத்தைப் பறிக்கிறபொழுது முசுக்கட்டை கையைக் கடிச்சுடுத்துடா. கை வீங்கிப் போச்சு!" என்று கண்ணீர் பெருக்கினான் பாலு.

"பார்த்தாயா? பிறத்தியாருடைய பொருளுக்கு ஆசைப் பட்டால் இந்தக் கதிதான்!" என்று கூறி ஏளனமாகச் சிரித்தான் கோபு.

பாலுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்த முசுக்கட்டையைக் கோபத்தில் நசுக்குவதற்காகக் கீழே கிடந்த கல்லை எடுத்தான்.

"வேண்டாமடா; ஜீவ இம்சை செய்யாதே" என்று கூறினான் பாலு. அவன் பேச்சைக் கேட்காமல் நசுக்கப்போனான்.

அப்பொழுது 'ஹஹ்ஹா!' என்று சிரித்துக் கொண்டே ஓர் அழகிய தேவதை அங்கே காட்சி யளித்தது. முசுக்கட்டை காணவில்லை! அவர்களிருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

"அப்பா கோபு! நான் இந்த மரத்திலுள்ள தேவதை. உன் அண்ணனுக்கு நற்புத்தி புகட்டவே முசுக்கட்டை உருவம் தாங்கினேன். உன் அண்ணனிடம் 'பிறர்பொருளை அபகரிக்கக் கூடாது. ஜீவ இம்சை செய்யக் கூடாது' என்று புத்திமதி கூறினாய். உன் நல்ல மனசு என்னை மிகவும் கவர்ந்து விட்டது. உனக்கு என்ன வேண்டும்? கேள், தருகிறேன்!" என்றது தேவதை.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்! என் அண்ணன் கை சரியாகப் போய் விட்டால், அதுவே போதும்!" என்று கூறினான் கோபு. பாலு அதைக் கேட்டு வெட்கித் தலை குனிந்தான். தன் தவறுக்கு அவன் மிகவும் வருந்தினான்.

தவறை எண்ணி வருந்திய பாலுவுக்குத் தேவதையின் அருளினால் வலி நீங்கி விட்டது. கோபுவுக்கு நல்ல பையன் என்ற பெயரும் கிடைத்து விட்டது!



அந்த ஊரில் ஜில் ஜில் சர்க்கஸ் 'டேரா' போட்டு ஒரு மாதம் ஆயிற்று. கோடை விடுமுறை ஆனதால் பள்ளிச் சிறுவர்கள் எல்லாரும் சர்க்கஸ் பார்க்கப் போனார்கள். சர்க்கஸ்காரருக்கு ஆரம்பத்தில் நல்ல வசூல் ஆயிற்று. ஆயினும் வசூலாகும் பணம் அவருக்குப் போதவில்லை. யானை, சிங்கம், புலி, ஒட்டைச்சிவிங்கி, குதிரை, நாய், ஆடு, குரங்கு இவ்வளவுக்கும் தீனி வாங்கிப் போடவே பணம் சரியாயிருந்தது. மிருகங்களைத் தவிர சர்க்கஸில் ஆண்களும், பெண்களும் அறுபது பேருக்கு மேல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். வசூலாகும் பணத்தில் மிருகங்களுக்குத் தீனி போடுவதா? வேலை செய்கிறவர்களுக்குச் சாப்பாடு போடுவதா? சம்பளம் கொடுப்பதா? — சர்க்கஸ்காரர் பணமில்லாமல் ரொம்பத் திண்டாடினார்.



சர்க்கஸ் என்னவோ ரொம்ப ரொம்ப நன்றாகத்தான் இருந்தது. மிருகங்கள் எஜமான விசுவாசத்துடன் சாமர்த்தியமாகவே வித்தைகள் செய்தன. காட்சிகள் நடைபெறும்போது ஆடு சிங்கத்தின் வாயில் தன் தலையைக் கொடுக்கும்; சிங்கத்துக்குப் பசியாக இருந்தாலும் ஆட்டை விழுங்கி விடாமல் கட்டுப்பாடோடு இருக்கும். யானைகள் தங்களுடைய பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு நர்த்தனம் ஆடின. குதிரைகள் சிறிய சர்க்கஸ் வட்டத்துக்குள் தாளம் தவறாமல் பாண்டு வாத்தியத்துக்கு ஏற்றபடி சுற்றி வந்தன. குரங்குகள் சைக்கிள் விட்டன. புலிகள் பீப்பாய்களின் மீது ஏறி நின்றன. அவற்றின் முதுகில் ஆடுகள் ஏறி நின்றன. சர்க்கஸ் பபூன் சக்கைப் போடு போட்டான். ஒருவன் ஜலத்தோடு மீன்களையும் சேர்த்துக் குடித்து, மறுபடியும் அவற்றை உயிரோடு வெளியே உமிழ்ந்தான். இவ்வளவு வேடிக்கைகள் இருந்தும் சர்க்கஸுக்கு வரவரக் கூட்டம் குறைந்து கொண்டே வந்தது. சர்க்கஸ்காரரால் யானைக்கும் மற்ற மிருகங்களுக்கும் போதுமான தீனி போட முடியவில்லை. அந்த மிருகங்கள் தமக்காகப் பல வருடங்கள் உழைத்ததால் அவர் அவற்றிடம் அதிக அன்பு வைத்திருந்தார்.

வருமானம் ரொம்பக் குறைந்து சர்க்கஸையே நிறுத்தி விடும்படியான நிலை ஏற்பட்டது. அப்போதுகூட அவர் மிருகங்களைப் பட்டினி போடவில்லை.



முதலில் வேலைக்காரர்கள் எல்லாருக்கும் சம்பளத்தைத் தீர்த்துக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விட்டார். பிறகு கொஞ்ச காலம் வரை தம் கையிலிருந்த பணத்தைக் கொண்டு மிருகங்களையெல்லாம் காப்பாற்றி வந்தார்.

சர்க்கஸ் நின்றுபோகவே ஊர்ச் சிறுவர்கள் கூண்டிலுள்ள மிருகங்களைப் பார்க்க வந்தார்கள். சர்க்கஸ்காரர் அதற்கு ஒரு காலணா கட்டணம் வைத்து, அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு மிருகங்களை விடாமல் காப்பாற்றி வந்தார். எஜமானருடைய அன்பும் விசுவாசமும் மிருகங்களின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன.

"பணம் இருந்தபோதும் நம்மிடம் அன்பாக இருந்தார்; இல்லாத போதும் அன்பாக இருக்கிறார். நாம் கஷ்டப்பட்ட போதிலும் நம்மைக்



காப்பாற்றுகிறார்!'' என்று எல்லா மிருகங்களும் வியந்தன.

குரங்கு, ''எஜமானருக்கு இனி நாம் தொந்தரவு கொடுக்கக் கூடாது. அவரால் இனி நம்மைக் காப்பாற்றவும் முடியாது. நாம் இங்கே இருந்தால் அவருக்குக் கஷ்டம்தான். ஆகையால் நாம் எல்லாரும் காட்டுக்குப் போய் விடலாம்'' என்று யோசனை கூறியது.

''சீச்சீ! நாம் எப்படிப் போக முடியும்? அவராக நம்மை அனுப்ப மாட்டார். நாமாகவும் கூண்டிலிருந்து தப்பிப் போக முடியாது!'' என்றது புலி.

''இதற்கு நான் ஒரு யோசனை வைத்திருக்கிறேன்!'' என்றது குரங்கு.

''அது என்ன?'' என்று ஆவலுடன் கேட்டன எல்லா மிருகங்களும். குரங்கு ரகசியமாக ஒரு யோசனையை வெளியிட்டது.




''பேஷான யோசனை!'' என்று எல்லா மிருகங்களும் அதை ஆமோதித்தன.

அந்த யோசனைப்படி அன்று முதல் யானை, புலி, சிங்கம் உட்பட எல்லா மிருகங்களும் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கின. எஜமானன் வாங்கி வைத்த தீனியை அவை தொட்டுப் பார்க்கவில்லை. முக்கியமாகக் கூண்டுக்குள் இருந்த புலியும் சிங்கமும் தீனியைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

எஜமானனுக்கு ஒன்றும் புரியவில்லை. மிருகங்கள் பட்டினி கிடப்பதைக் கண்டு அவர் துக்கப்பட்டார். காரணம் புரியாமல் தவித்தார். தன் மீது அவற்றுக்குக் கோபமோ என்று எண்ணினார்.

உண்ணாவிரதம் இருந்ததால் எல்லா மிருகங்களும் இளைத்து விட்டன. இளைத்து இளைத்து எல்லாம் குச்சி போல் ஆகி விட்டன. இளைத்துப் போன மிருகங்கள் யாவும் கூண்டுக் கம்பிகளின் வழியாகவே வெளியே வந்து விட்டன.

அவ்வளவுதான்; அன்றிரவே எல்லா மிருகங்களும் ஒன்று சேர்ந்து பேசிக்



கொண்டு, எஜமானனுக்குத் தெரியாமல் காட்டுக்குப் போய்விட்டன.


மறுநாள் காலையில் எஜமானன் மிருகங்களையெல்லாம் காணாமல் மிகவும் வருத்தப்பட்டார்.



''எதற்கப்பா ஒரு பெரிய லைட் ஹவுஸ், அதன் பக்கத்தில் ஒரு சின்ன லைட் ஹவுஸ்?''

பெரியவர்கள் எதிர்பார்ப்பதற்குப் பெரியதும், சிறு குழந்தைகள் எதிர்பார்ப்பதற்குச் சின்ன லைட் ஹவுஸூம்!''

பரஸ்பரம்!






வேடிக்கை விளையாட்டு




இருட்டுப் பயல் ஓட்டம் எடுத்தான். கான்ஸ்டேபிள் கந்தசாமி அவனைத் துரத்திப் பிடிக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு குதிரை கிடைத்தது. அதன் மீது ஏறித் துரத்தினான். அப்போதும் இருட்டனைப் பிடிக்க முடியவில்லை. திடீரென்று குதிரையின் கால்கள் முறியவே கீழே விழுந்தான் கந்தசாமி. இது நடக்குமா? ஏன் நடக்காது? லீவு நாளில் கான்ஸ்டேபிள் கந்தசாமி வீட்டில் தன் குழந்தையைத் ஆத்துவதற்கு விளையாட்டு மரக் குதிரை மேல் ஏறினால் மரக் குதிரை கால் முறிந்து கீழே விழுவது நடக்கக் கூடியதுதானே?





ஒரு மேஜை விளக்கு தெரிகிறதா? நன்றாக உற்றுப் பாருங்கள்! இரண்டு நிழல் சித்திரச் சிறுவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது தெரியும்.

சிங்கத்துக்கும் கூண்டுக்கும் மத்தியில் உள்ள புள்ளிக் கோடுகளில் உங்கள் முகத்தைக் கொண்டு வந்து கோட்டில் மூக்கு இருக்கும்படியாகப் பிடித்துக் கொண்டால் சிங்கம் கூண்டுக்குள் போவது தெரியும்








இங்கே உள்ள படங்கள் இரண்டிலும் தவறு இருக்கிறது. அது என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள்

விடை

நெல் குத்தும் போது ஒரே சமயத்தில் உரலில் இரண்டு உலக்கைகளும் இருக்காது. ஒன்று மேலும் ஒன்று உரலிலும்தான் இருக்கும்.

வாழைத்தாரில் காய்கள் கீழ் நோக்கி இருக்கின்றன அது தவறு. மேல நோக்கி இருக்க வேண்டும்.


சாயா



என் பையனை வீட்டில் விட்டு வந்தால் யாருடனாவது சண்டை பிடிக்கிறான் அதனாலே எப்பவும் கூடவே அழைத்துக் கொண்டு வந்து விடுவது வழக்கம்.

வரும் வெயில் நாளில் உங்கள் குளிர்ச்சிக்கு

ஐஸ் டீ



ஐஸ் டீ அதி வெப்பத்தில் ஏற்படும் தாகத்தையும் தணிக்கும். அது உங்களுக்குப் புத்துணர்ச்சி தருகிறது—தாங்க முடியாத உஷ்ண நாளின் நடுவிலும் சுறுசுறுப்பளிக்கிறது. தயாரிப்பதும் வெகுசுலபம்...



ஐஸ் டீ தயாரிப்பது எப்படி

1. கெட்டிலில் தண்ணீர் நிரப்பிக் கொதிக்க வைக்கவும்.
2. ஆவி வந்ததும், அடுப்பிலிருந்து கெட்டிலை அகற்றி, வெந்நீரால் பாத்திரத்தை சுத்தம் செய்யவும்.
3. (12 அவுன்ஸ் கொள்ளும்) பாத்திரத்தில் நம்பகமான வியாபாரியிடம் வாங்கிய டீயில் மூன்று ஸ்பூன் போட்டு, கொதிநீரில் ஐந்து நிமிஷம் ஊற வைக்கவும்.
4. இப்பொழுது, இந்த நனைந்த தேநீரை, வடிகட்டி மூலம், ஐஸ் துண்டுகள் நிறைந்த பெரிய கண்ணாடி டம்ளரில் வடிகட்டிக் கொள்ளவும். வேண்டிய அளவுக்கு சர்க்கரையும் எலுமிச்சம் பழத் துண்டுகளையும் சேர்த்துக் கொள்ளவும். பால் சேர்க்கக்கூடாது.
5. சில நிமிஷங்கள் குளிர வைத்து, கலக்கி ஆனந்தமாக அருந்தவும்.

அதிகமான ஐஸ் டீ தயார் செய்ய விரும்பினால், ஒவ்வொரு 6 அவுன்ஸ் கோப்பைக்கும் ஒரு டீ ஸ்பூன் அளவு டீ எடுத்துக்கொண்டு, மேற்படியாக உருகும் ஐஸை உத்தேசித்து இன்னும் அரை டீ ஸ்பூன் சேர்க்கவேண்டும்.

நான்தான் டீ – ஐஸானாலும் மிக 'நைஸ்'

TEA BOARD INDIA

PST 182

ருஷ்ய நாட்டுக் கதை

ஆப்பிள் திருடன்

மொழிபெயர்ப்பு:

எஸ். வி. எஸ்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

துல்மான் என்ற அந்த அரசன் என்ன காரியம் தனக்கு வைக்கப் போகிறானோ என்ற கவலையோடு இளவரசன் ஐவான் பார்த்தான். அரசன் சொன்னான்:

"தால்மத் என்றோர் அரசன் இருக்கிறான். அவனுக்கு எலினா என்றோர் மகள் இருக்கிறாள். அவள் மிக அழகாக இருப்பாள். அவளை எப்படியாகிலும் இங்கே கொண்டு வா. உனக்குப் பொன் பிடரி மயிர் கொண்ட குதிரையைப் பரிசாகக் கொடுக்கிறேன். ஏன், அந்தத் தங்கக் கடிவாளத்தையும் கொடுக்கிறேன்" என்று கூறினான்.

இளவரசன் இதைக் கேட்டு அப்படியே நிலை குலைந்து விட்டான். அவன் நேரே ஓநாயிடம் போனான்.

ஓநாய் இளவரசனைக் கண்டதும், "இளவரசே! ஐவானே! நான்தான் அந்தக் கடிவாளங்களைத் தொடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்தேனே! ஏன் தொட்டீர்கள்? நான் சொல்வதை ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்?" என்றது.

"ஓநாயே! நான் செய்தது தவறுதான். தயவுசெய்து என்னை மன்னித்து விடு!" என்றான் இளவரசன்.

"வருத்தப்படுவதால் ஒரு பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதனால் வருத்தப்படாதீர்கள்! நடந்தது நடந்து விட்டது. இனி நடக்கப் போவதைப் பற்றிக் கவலைப்படுவோம். இப்போது என் முதுகின்மேல் ஏறிக் கொள்ளுங்கள்!" என்றது.

இளவரசன் ஐவான் உடனே ஓநாயின் முதுகின்மேல் ஏறிக்கொண்டு பறந்தான். சிறிது நேரத்தில் தால்மத் அரசனின் ராஜ்யத்துக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். அங்கு எலினா என்ற அந்த அரசனின் அழகிய மகள் அரண்மனைத் தோட்டத்திலே தாதிமாருடனும், சகிமாருடனும் உலாவிக் கொண்டிருந்தாள்!

இவளைப் பார்த்ததும், ஓநாய், "இந்தத் தடவை நான் போகிறேன். நான் போய் அழகியை அழைத்துக்கொண்டு வருகிறேன். நீங்கள், நாம் வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருங்கள். நான் வந்து உங்களோடு சேர்ந்து கொள்கிறேன்" என்றது. அப்படியே இளவரசனும் வந்த வழியே திரும்பிச் சென்றான். ஓநாய் அந்தத் தோட்டத்தின் மதில் சுவரின்மீது ஏறிக் குதித்து உள்ளே போய் விட்டது. உள்ளே ஒரு புதருக்குப் பக்கத்தில் மறைவாக உட்கார்ந்து கொண்டு எட்டி எட்டிப் பார்த்தது. அழகி எலினா ஒவ்வொரு புஷ்பமாகப் பார்த்து நுகர்ந்த வண்ணம் வந்து கொண்டிருந்தாள். இப்படி வரும்போது இளவரசி பின்தங்கி விட்டாள். கூட வந்த தோழிகளும் சகிமார்களும் முன்னேறிச் சென்று விட்டார்கள். தனியாக விடப்பட்டாள் எலினா. உடனே ஓநாய் பாய்ந்து சென்று எலினாவை ஒரே தூக்காகத் தூக்கிப் பற்றி, முதுகின்மேல் ஏற்றிக் கொண்டது. தோட்டத்தின் மதில் சுவரைத் தாண்டிக் குதித்து ஒரு விநாடியில் மறைந்து போய் விட்டது.

ஏதோ யோசித்த வண்ணம் தனியாகத் திரும்பிக் கொண்டிருந்த இளவரசன் ஐவான் திடுக்கிட்டான். இளவரசியை முதுகின் மேல் ஏற்றி வைத்துக் கொண்டு ஓநாய் வந்து நின்றால் அவன் என்ன செய்வான், பாவம்?

இந்தக் காட்சியைக் கண்டு ஐவான் சந்தோஷப் பட்டானா? — இல்லை.

ஓநாயோ, மிகுந்த பரபரப்போடு ஐவானிடம் "என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள். சீக்கிரமாக ஏறுங்கள். இல்லாவிடில் அவர்கள் வந்து



நம்மைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்" என்றது.

ஐவான் ஏறிக் கொண்டான். இருவரையும் தூக்கிக் கொண்டு, மலைகள், மரங்கள், ஏரிகள், நதிகள் எல்லாவற்றையும் ஓநாய் வேகமாகக் கடந்து சென்றது. இப்படி எத்தனை நாழிகை சென்றது என்று யாரால் சொல்ல முடியும்? எனினும் சீக்கிரத்திலேயே அரசன் குஸ்மானின் ராஜ்யத்துக்கு வந்து சேர்ந்தது.

* * *

இங்கு வந்ததும் ஓநாய் இளவரசனைப் பார்த்துக் கேட்டது:

"இளவரசே! ஏன் இப்படி ஓரே வருத்தத்துடன் முகம் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

"ஓநாயே! நான் வருத்தப்படாமல் என்ன செய்வேன்? இந்த அழகிய இளவரசி எலினாவை ஒரு குதிரைக்காக இழக்க வேண்டியிருக்கிறதே! இதை நினைக்கும் போதே என் நெஞ்சம் சுக்குநூறாக உடைந்து விடும்போல் தோன்றுகிறதே!" என்றான் அழமாட்டாக் குறையாக.

அதற்கு ஓநாய், "நீங்கள் இந்த இளவரசியை விட்டுப் பிரியவும் வேண்டாம்; இழக்கவும் வேண்டாம். நாம் இந்த இளவரசியை எங்கேயாகிலும் ஒளித்து வைப்போம். பிறகு நான் இளவரசியாக மாறி விடுகிறேன். நீங்கள் என்னை அழைத்துப் போய் அரசன் குஸ்மானிடம் 'இவள்தான் இளவரசி எலினா' என்று சொல்லுங்கள்" என்று கூறியது.

இப்படிச் சொல்லி விட்டு ஓநாய் ஒரு குட்டிக்கரணம் போட்டது. அவ்வளவுதான்! அழகி எலினாவாகவே மாறி விட்டது! இந்தப் புது எலினாவை ஸார் குஸ்மானிடம் ஐவான் அழைத்துச் சென்றான். அரசனோ அளவுகடந்த ஆனந்தத்தில் மூழ்கினான்; மிகுந்த நன்றியையும் தெரிவித்தான்.

"இளவரசனே! ஐவானே! எனக்கு இந்த மணமகளை அழைத்து வந்து கொடுத்ததற்கு மிக்க நன்றி. நீ என் பொன் பிடரி கொண்ட குதிரையைத் தாராளமாக எடுத்துக் கொண்டு போகலாம்" என்றான்.

இளவரசன் ஐவான் அந்தப் பொன் பிடரிக் குதிரையின் மீது ஏறிக் கொண்டு, நேரே இளவரசி எலினாவை வைத்திருந்த இடத்துக்குப் போனான்.

அரசனுக்கும் புது இளவரசிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. நாள் பூராவும் விருந்து நடந்தவண்ணமிருந்தது. அரசன் இரவு படுக்கைக்குச் சென்று, தன் மனைவி போர்வையை இழுத்துப் பார்த்த போது திடுக்கிட்டான். அழகிய எலினாவுக்குப் பதில் ஒரு ஓநாய் படுத்திருந்தது. அதைக் கண்டு அரசன் பயந்து போய்க் கூச்சல் போட்டு உளறி ஏக ரகளை செய்து விட்டான். அதற்குள் ஓநாய் அரண்மனையை விட்டுத் தப்பி ஓடிவிட்டது.

* * *

ஓநாய் ஓடிச் சென்று, இளவரசன் ஐவானை அடைந்தது. ஐவான் மீண்டும் சோகமே உருவாக இருந்தான். ஓநாய், "ஏன் இப்படி மறுபடியும் சோகமாய் இருக்கிறீர்கள்?" என்றது.





"என்ன செய்வது? நான் இந்த அழகிய குதிரையை ஒரு தீப் பறவைக்காகக் கொடுத்து விட வேண்டியிருக்கிறதே!" என்றான்.

"இதற்காகவா வருத்தப் படுகிறீர்கள்? வேண்டாம். உற்சாகமாக இருங்கள். நான் ஏதாகிலும் வழி சொல்லுகிறேன்!" என்றது ஓநாய்.

சீக்கிரத்திலே அரசன் அப்ரான் நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

இங்கு வந்ததும் ஓநாய், "இளவரசே! ஐவானே! குதிரையையும் எலினாவையும் எங்கேயாகிலும் ஒளித்து வைத்து விடுங்கள். நான்



மாஸ்டா
பல்புகள்
பிரகாசம் அதிகம்
B T·H
நீடித்து
உழைக்கும்...
அஸோஸியேடட் எலக்ட்ரிகல்
இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
கல்கத்தா பம்பாய் புதுடில்லி மதராஸ்
பெங்களூர் கோயம்பத்தூர் நாகபுரி
AIX-131 TM


கரகரப்பான ... புதிய... சுவை மிகுந்த ...
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா

கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாகவாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரியகுளோரோபில்

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை. மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள்கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/G/5

இந்தப் பொன் பிடரி கொண்ட குதிரையாகவே மாறி விடுகிறேன். என்னை அரசனிடம் அழைத்துக் கொண்டு போய்ப் பரிசாகக் கொடுங்கள்" என்றது.


அப்படியே இந்த அழகிய குதிரையையும் அழகி எலினாவையும் காட்டில் ஓரிடத்தில் மறைத்து வைத்தான் இளவரசன் ஐவான். பிறகு குதிரையாக மாறிய ஓநாயை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்றான். அரசன் இந்தக் குதிரையைக் கண்டு பெருமகிழ்ச்சியுற்று, தங்கக் கூண்டிலிருந்த தீப் பறவையை அப்படியே ஐவானுக்கு அளித்தான்.

அதைப் பெற்றுக் கொண்டு காட்டுக்கு வந்தான். பொன்பிடரிக் குதிரையின் மீது ஏறிக் கொண்டான். இளவரசி எலினாவையும் உட்கார வைத்துக் கொண்டான். மற்றொரு கையில் தீப் பறவை கொண்ட தங்கக் கூண்டையும் பிடித்துக் கொண்டான். வேகமாகப் பறந்தான்!

இப்படி ஐவான் அங்கே ஓடிக் கொண்டிருந்தபோது, அரசன் அப்ரான் தனக்குப் பரிசாக வந்த பொன் பிடரிக் குதிரையைப் பார்க்கப் போனான். அந்தக் குதிரையின் மீது சவாரி செய்ய, அதன் முதுகின்மேல் ஏறப் போனான். அந்தக் கணம் குதிரை ஓநாயாக மாறி விட்டது! அரசன் பயந்து நடுங்கி நின்ற இடத்திலேயே கீழே விழுந்து விட்டான். அதற்குள் ஓநாய் வேகமாக ஓடி மறைந்து, பொன் பிடரிக் குதிரைமீது போய்க் கொண்டிருந்த ஐவானைப் பிடித்து விட்டது.

ஓநாய், ஐவானை நெருங்கியதும், "இளவரசே! ஐவானே! நான் இனி இதற்கு மேல் உங்களுடன் வருவதற்கில்லை. நான்போய் வருகிறேன்" என்றது.

இளவரசன் ஐவான் குதிரையை விட்டு இறங்கினான்.




மூன்று முறை ஓநாய்க்கு வணக்கம் செலுத்தினான். நெஞ்சார அதற்கு நன்றி செலுத்தினான்.

"இளவரசே! ரொம்பவும் நன்றி செலுத்தி விடாதீர்கள். இன்னும் கொஞ்சம் நன்றியை மிச்சம் வைத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் உங்களுக்கு என்னுடைய உதவி தேவைப் படலாம்!" என்றது ஓநாய் போகிற போக்கில்.

இதைக் கேட்டு இளவரசன், "இந்த ஓநாய் ஏன் இப்படிப் பேசுகிறது? இனி இந்த ஓநாயால் ஆகக்கூடிய காரியம் ஒன்றுமில்லையே! நான் எதை விரும்பிப் புறப் பட்டேனோ, அது தான் கிடைத்து விட்டதே!" என்று மனசுக்குள் நினைத்தான். ஆனால் வெளியில் சொல்லவில்லை.

இப்படி ஐவான், ஓநாயிடம் விடை பெற்றுக் கொண்டு குதிரையின் மீது ஏறி எலினாவுடனும், தீப் பறவையுடனும் தன் தேசத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். வழியில் அவனுக்குக் கடும் பசி உண்டாயிற்று. சற்று இங்கே இறங்கிச் சாப்பிட்டால் என்ன என்று நினைத்தான். அவன் தன் கைவசம் கொஞ்சம் ரொட்டியும் வைத்திருந்தான். அதனால் அங்கே ஓடையைக் கண்டதும் குதிரையை விட்டு இறங்கினான். எலினாவும் அவனும் ரொட்டியில் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு, ஓடை நீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். உண்ட களைப்புத் தொண்டனுக்கும் உண்டல்லவா? அவர்கள் சிறிது ஆகாரம் பண்ணியதும் களைப்பு உண்டாகி விட்டது. சற்றுப் படுத்துக் கொண்டால் தேவலை என்று தோன்றியது. அப்படியே புல்தரையில் சாய்ந்தார்கள்.

ஐவான் கண்கள் மூடி நன்றாகத் தூங்க ஆரம்பித்தானோ, இல்லையோ எங்



பம்பாய் மெஸர்ஸ் கால்டெக்ஸ் (இந்தியா) லிமிடெட்டில் வேலை பார்த்து வரும் ஸ்ரீ ராம கிருஷ்ணா அவர்களுக்கும் பம்பாய் மெஸர்ஸ் பார்லே பிராடக்ட்ஸ் கம்பெனி ஸ்ரீ எம். ஏ. கிருஷ்ண அய்யர் அவர்கள் புதல்வி சௌ. லக்ஷ்மிக்கும் பம்பாயில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

இருந்தோ அவன் சகோதரர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களும் தீப் பறவையைத் தேடிக் கொண்டு தேச தேசமெல்லாம் சுற்றி வந்தார்கள். கிடைக்கவில்லை. இப்பொழுது இளவரசன் ஐவானைப் பார்த்தார்கள். அவனிடம் தீப் பறவை, பொன் பிடரிக் குதிரை, அழகி எலினு எல்லாம் இருப்பதைக் கண்டார்கள். "நம் தம்பி ஐவானைக் கொன்றுவிட்டால் என்ன? அவன் கொண்டு வந்தவை நமதாகிவிடும் அல்லவா?" என்று பேசிக் கொண்டார்கள். அடுத்த கணம் அவனைக் கொன்றுவிட்டு, பொன் பிடரிக் குதிரையின் மீது ஏறிக் கொண்டு, தீப்பறவை, எலினு சகிதம் போய் விட்டார்கள். போகும் போது, "இப்படி நாம் ஐவானைக் கொன்று விட்டுக் கொண்டு வந்ததாக வெளியே சொல்லிக் கொள்ளக் கூடாது" என்றும் அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

• • •

இங்கே ஐவான் பிணமாகக் கிடந்தான். பாவம், பிணம் தின்னும் கழுகுகள் அவனைச் சுற்றி வட்டமிடலாயின. அந்தச் சமயத்தில் அந்தப் பழைய ஓநாய் எங்கிருந்தோ வந்தது. ஒரு கழுகைப் பற்றி இழுத்து, "பறந்து போய் இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் மந்திரத் தண்ணீரைக் கொண்டு வா!" என்றது.

கழுகு என்ன செய்யும்? ஓநாயின் கட்டளையைச் சிரமேற் கொண்டு நிறைவேற்ற வேகமாக விரைந்து சென்றது. பறந்து போய் ஓநாய் குறிப்பிட்ட மந்திரத் தண்ணீரைக் கொண்டு வந்தது! ஓநாய் அந்த மந்திர நீரை ஐவான் மீது தெளித்தது. அந்தச் சக்தி வாய்ந்த மந்திரத் தண்ணீர் அவன் உடலில் பட்டதுதான் தாமதம்; ஐவான் உயிர் பெற்று எழுந்தான். சோம்பல் முறித்துக் கொண்டே, "சே, என்ன தூக்கம் தூங்கியிருக்கிறேன், பிணம் மாதிரி!" என்று சொல்லிக் கொண்டான்.

அந்தச் சமயம், "ஐயா, இளவரசரே! நான் இல்லையென்றால் நீங்கள் எழுந்தேயிருக்க மாட்டீர்கள். உங்கள் சொந்தத் தமையன்மார்களே உங்களைக் கொன்று, உங்கள் விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களையெல்லாம் கொண்டு போய் விட்டார்கள். அவர்களைத் துரத்திப் பிடிப்போம். என் முதுகின்மேல் ஏறிக் கொள்ளுங்கள்! சீக்கிரம், சீக்கிரம்!" என்றது.

ஐவானுக்கு அதைக் கேட்டு வியப்பும் திகைப்பும் அதிகமாயிற்று. ஆனால் ஓநாய் அவசரமாகப் புறப்படும்படி கூறவே, ஐவான், ஓநாயின் உத்தரவுப்படி அதன் மேல் ஏறிக் கொண்டான். ஐவானின் சகோதரர்கள் சென்ற திசையில் வேகமாகச் சென்றது. காற்றிலும் கடிவேகமாகச் சென்ற ஓநாய் விரைவிலேயே அவர்களைப் பிடித்து, வழி மடக்கிக் கொண்டது. பின் அந்தச் சகோதரர்கள் இருவருடனும் சண்டையிட்டு அவர்களைப் பிய்த்து எறிந்து விட்டது.

இளவரசன் ஐவான் தன் உயிரையும், பொக்கிஷங்களையும் மீட்டுக் கொடுத்த ஓநாய்க்கு நன்றியும் வணக்கமும் செலுத்திவிட்டுத் தன் நாட்டை நோக்கிப் போனான்.

ஐவான் நாட்டை அடைந்தான். ஐவானின் தந்தை பெரண்டி மகனைப் பார்த்ததில் அளவுகடந்த மகிழ்ச்சியுற்றார். ஆயிரக்கணக்கில் கேள்விகள் கேட்கத் தொடங்கினார். ஐவான் எல்லா விவரங்களையும் சொன்னான். முதலில் தன் மற்ற இரு புதல்வர்களும் இறந்து விட்டார்கள் என்று கேள்விப்பட்டதில் அளவு கடந்த வருத்தமுற்றார் பெரண்டி. ஆனாலும் அந்தத் துக்கம் அதிக நாள் நீடிக்கவில்லை. இளவரசன் ஐவான் எலினுவை மணந்து கொண்டு நீண்ட நாள் ஆனந்தமாக வாழ்ந்தான்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam



கமலா ஒரு பாடம் கற்றுக் கொள்கிறுள்...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
இந்தியாவில் தயாரித்தது
துணிகளை நீடித்தி ருக்கச் செய்கிறது.

S. 239-50 TM

Registered as a Newspaper in Ceylon
No. M. 4302

